பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

டிசம்பர் 2025



கலைஞர், இதழாசிரியர்

## வஃபீரா வஃபி

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – டிசம்பர் 2025

648

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறுாக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களே வணக்கம்!

நலமா எல்லோரும்? ஆண்டின் இறுதிப் பகுதியில், வழமை போலவே சந்தோஷங்களை ஆக்கங்களூடாக அள்ளி வந்திருக்கிறேன்.வாசித்து, நெஞ்சோடு நெஞ்சம் சங்கமித்துக் கருத்திடுங்கள்! வரவேற்கக் காத்திருக்கிறேன்.

குடும்ப உறவொன்றின் திருமண விழாவில் கலந்து கொள்ள, பிரான்ஸிலிருந்து வேறொரு நாட்டுக்கு வந்திருந்தாலும், உங்களுக்காக தமிழ்நெஞ்சத்து மார்கழித் திங்களின் இதழைப் பூர்த்தி செய்திருக்கிறேன். எல்லாம் வல்ல இறையருளால், மணவிழாவும் இனிதே நிறைவுற்றது. புதுமணத் தம்பதிகளுக்கு வாசக நெஞ்சங்கள் சார்பாகவும் நல்வாழ்த்துகளைத் தெரிவிக்க விழைகிறேன்.

வருடத்தின் இறுதி மனதுக்கு நிறைய குதூகலங்களைக் கொண்டு வருமொரு மாதமாக மிளிர்கிறது.

அதிலும் உலக வாழ் மக்களில் பெரும்பாலானோர் கொண்டாடி மகிழும் புனித கிறிஸ்துமஸ் தினம் சிறப்புப் பெறுகிறது. இந்த நன்னாளை முன்னிட்டு நம்மை மீள்பரிசீலனை செய்து, எம் எண்ணங்களையும் செயல்களையும் மீண்டுமொரு முறை தூய்மையாக்குவோம். பிறக்கவிருக்கும் புத்தாண்டு உலகில் அமைதியை நிலைநாட்ட பிரார்த்திப்போம்.

பண்டிகையைக் கொண்டாடும் அனைத்து நெஞ்சங்களுக்கும் இனிதான நத்தார் தின வாழ்த்துகள்!

புத்தம் புதிதாக மலரவிருக்கும் ஆண்டில், மகிழ்ச்சிப்பூக்களோடு உங்களை சந்திக்க வருகிறேன்.

இம்மாத இதழ் சற்று தாமதமாக வருவகிறது. பொறுத்தருள்க.

நன்றி!

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# அறம்



அகிலத்தில் வாழ்விதனில்
அறமே தலையானது!
ஆன்றோர் பன்முறையில்
அறிவுறுத்திச் சொல்லியது!

பாட்டாலும் படித்தறிய உரையாலும்
பார்த்து உணர நாடகமாகவும்
மடியிருத்திக் கதையாகவும்
ஊட்டி வளர்த்தனர் அறத்தை!

எழுத்தெனும் ஆயுதத்தால்
அன்பெனும் மந்திரத்தால்
ஆக்கிய நற்காரியம் யாவிலும்
மனித மனத்தை உழுது
அறத்தை விதைத்திடவே
வாழ்ந்து காட்டினர் பலரிங்கு!



தலை தலையென
உயர்த்திச் செல்பவர்
தரணியிலே பலருண்டு!
இது எதற்கென
மிதித்துச் செல்பவரும் உண்டு!

எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்கள்
அறத்தையே உயிர்மூச்சாக்கினர்!
எடுத்தியம்பும் அவர்களின் மூச்சு
காலங்கடந்து நம்மோடு கலந்து
அறத்தையே போற்றும்!
அதிலில்லை மாற்றம்!

**மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.

# இனியமன மாந்தர்கள்

தன்னால் முடிந்த செயல்களைச்
செய்வார்கள்!
தன்னில் முடியா நிலையிலும் நின்றவர்கள்
இன்னா சொற்கள் புறத்தினில் தள்ளிவிட்டே
இன்னல் தீர்க்கும் வகையிலே சொல்வார்கள்!

மன்னும் தக்கார் குணமதே இவ்வுலகில்
மன்றம் போற்றும் வகையிலே வாழ்வார்கள்!
சின்னம் பொறிப்பார் மனத்திலே
நல்லுதவிச்
சீலர் நல்லோர் இனியரே மாந்தர்கள்!

**மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.

# தன்முனைக் கவிதைகள்



1
வீழ்ச்சி எல்லாமே
விதியின் சூழ்ச்சி
வெற்றியின் எழுச்சிக்காய்
இறைவன் தரும் பயிற்சி

2
நெருக்கடிகள் நீக்கி
நிமிர்ந்து நட
நெஞ்சுரம் தேக்கி
நிற்காமல் ஓடு

3
ஆசைகள் கனவாகும்
கனவுகள் நனவாகும்
நனவுகள் நலமாகும்
நலமே வாழ்வாகும்

4
உண்மை கொண்டு
உண்மையைத் திற
ஒளியாய் ஊற்றெடுக்கும்
உன் ஞானம்

5
இறைக்க இறைக்கக்
கேணி சுரக்கும்.
கொடுக்கக் கொடுக்கக்
குவியும் இறையருள்

6
துயருறும் வாழ்வை
துச்சமென நினை
அயருறா முயற்சிதனை
அச்சமின்றி வனை

7
குவிந்த குப்பைகள்
கூட்டிப்பெருக்கிடலாம்.
புறவெளி விழிகள் அறியும்.
அகவெளி யார்தான் அறிவார்?

8
பாரமாக சுமக்கும்
வரைதான் கவலை
தூரமாக இருக்கும்
வரைதான் உறவு

9
உடைந்த பின்தான்
உள்நுழைய முடியும்
ஒளிக்கதிர் நீ
உணர்ந்து கொள்

10
அடிபணி இறை
ஆழ்ந்து நம்பு
காத்திருக்கக் காலம் கனியும்
கனிகள் நிச்சயம் விழும்

**Dr. ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை

சம்பாஷணை வெண்பா

# விட்டுக்கொடுத்தல்

.

அமின் : -

.

என்னே வரதராசன்
எப்படி உள்ளீர்கள்
உன்னநான் பாத்தே
ஒருவாரம் - முன்னேதான்
என்னதான் செய்யறீங்க
இப்பவும் செந்தமிழில்
என்ன எழுதறீங்க
இங்கு?

.

ஏடி

.

எப்போதும் போல
எனக்குப் பிடித்தார்போல்
முப்போழ்தும் வெண்பாவில்
மூழ்குகிறேன் - இப்பொழுது
எங்கேனும் பாட்டரங்கம்
யாரும் நடத்தினால்
அங்கேதான் செல்லவேண்டும்
ஆம்

.

அமின்

.

அங்கோர் குழுமம்
அழகுக் கவியரங்கம்
எங்கோ நடத்துவதாய்
யானறிந்தேன் - இங்கிருந்துத்
தித்திக்கும் ஓர்தலைப்பைத்
தேர்ந்தெடுத்து நானெழுத
இத்தருணம் எண்ணுகிறேன்
இன்று.

.

ஏடி

.

எந்தக் குழுமமாம்
என்ன தலைப்புகளாம்
எந்தநாள் பாட
இறுதிநாள் - எந்தவொரு
முக்கியச் செய்தியும்
முற்றிலும் சொல்லாமல்
இக்குவைத்துப் பேசாதீர்
இங்கு.

.

அமின்

.

நண்பர் நடத்துகிற
நல்லக் குழுமம்தான்
திண்ணம் மரபோடு
தித்திக்கும் - ஒண்கவிகள்
ஏடு நிறைக்க
இயக்குகிறார் நீகூடப்
பாடுவ தென்றாலும்
பாடு.

.

ஏடி

.

எல்லாம் சரிதான்
எனக்கும் அதைப்பற்றி
சொல்லுங்கள் ஐயா
சுகம்பெறுவேன் - இல்லையெனில்
என்ன தலைப்பென்றும்
யாரார் நடுவரென்றும்
எண்ணம் குழம்புவேன்
யான்.

.
அமின்
.
என்ன தலைப்போ
எவர்தான் நடுவரோ
ஒன்றும் புரியவில்லை
ஓநண்பா - உன்னுடைய
ஈடில்லா ஆற்றலுக்கு
எல்லாம் நலமாகும்
பாடிப்பார் அங்கேஓர்
பாட்டு.
.
ஏடி
.
எதைப்பற்றிப் பாடலாம்
என்றறி யாமல்
அதைப்பாட ஏலுமா
ஐயா - இதைநீர்
முழுதாய்த் தெரிநது
முழுவிபரம் சொன்னால்
எழுதுவேன் நானும்
இதற்கு.
.
அமின்
.
கொஞ்சம் பொறுநீ
கொடுக்கும் தலைப்புகளைக்
கெஞ்சிநான் அவ்விடத்தில்
கேட்கிறேன் - எஞ்சியவை
அங்கே இருந்தால்
அதற்குமட்டும் நீயுந்தன்
கொஞ்சும் தமிழால்
கொடு.
.
ஏடி
.
என்னெனறு கேட்கவா
இவ்வளவு நேரமாகும்
என்னாங்க ஐயா
இதெல்லாம் - என்னோட
வேகத்துக் கேற்ப
விபரங்கள் சொன்னால்தான்
ஏகக் கவிசெய்வேன்
இங்கு.
.
அமின்
.
சொல்லும் படியாய்ச்
சுவைகொள் தலைப்புகள்தான்
எல்லாம் இருக்கிறது
இவ்விடத்தில் - பல்லா
யிரம்பேர் கலந்துகொள்ளும்
இப்போட்டி தன்னில்
உரமுண்டோ பாட
உனக்கு.
.
ஏடி
.
என்ன தலைப்பென்றும்
யார்யார் நடுவரென்றும்
ஒன்றும் புரியா
துழல்கின்றேன் - இன்னும்
தகவல் கொடுங்களையா
தக்க கவியை
அகமுணர்ந்து பாடுகிறேன்
ஆம்.

.

அமின்

.

தண்ணீர் எனும்தலைப்பும்
தாகம் எனும்தலைப்பும்
கண்ணீர் எனும்நல்
கவித்தலைப்பும் - விண்மழை
என்ற தலைப்போடு
இனுஞ்சிலவும் உள்ளதிதில்
என்ன பிடிக்கும்
எழுது.

.

ஏடி

.

நீங்களென்ன பாட
நிஜமாகத் திட்டமிட்டீர்
ஏங்கிக்கேட் கின்றேன்
இதைச்சொல்வீர் - ஆங்கே
உமது தலைப்பெதுவென்று
உண்மையைச் சொன்னால்
எமதெண்ணம் சொல்லிடுவேன்
யான்.

.

அமின்

.

நானென்ன பாடினால்
நண்பா உனக்கென்ன
ஏனென்னைக் கேட்கின்றாய்
இஃதைநீ - வானென்ற
உந்தனது கற்பனையை
ஓங்கி விரித்துநீ
செந்தமிழில் பாடேன்
சிறந்து.

.

ஏடி

.

என்னத் தலைப்பை
எடுத்துநீர் பாடுகிறீர்
என்றுதான் கேட்டேன்
இதுதவறா - என்மேலே
நம்பிக்கை இல்லாமல்
நாற்புறமும் பேசாமல்
உம்முடைய பாடலை
ஓது.

.

அமின்

.

கண்ணீர் எனுந்தலைப்பைக்
கண்டெடுத்தேன் அத்தலைப்பை
எண்ணிநான் பாட
இசைந்துள்ளேன் - தண்டமிழில்
எந்தத் தலைப்பிலும்
யான்பாட ஏலுமையா
அந்தத் தலைப்பே
அழகு.

.

ஏடி

.

யான்கூடக் கண்ணீர்
எனுந்தலைப்பை எண்ணியே
தேன்போலப் பாடுதற்குத்
திட்டமிட்டேன் - ஏன்நீங்கள்
வேற்று தலைப்பை
விரும்பினால் என்னவாம்
ஊற்றெடுக் காதா
உளம்?

.
அமின்
.
இன்னோர் கவியரங்கில்
யான்கலந்து  கொள்கின்றேன்
இன்றுநீ பாடிக்கொள்
இந்நிகழ்வில் -  என்னுடைய
கண்ணீர் எனுந்தலைப்பைக்
கன்னித் தமிழ்க்கவியாய்
எண்ணிநீ பாடேன்
இனி.

.
ஏடி
.
என்எண்ணம் தன்னை
இதமாய்ப் புரிந்தபடி
உன்பாட்டைக்  கூட
உடனளித்தீர் -  இன்னொரு
பாட்டரங்கில் நீங்கள்
பரிசைப் பெறலாம்உன்
பாட்டுதான் இன்றென்
பரிசு.

---

# சென்று வாருங்கள் ஐயா!




அழுதால் தீருகின்ற அவலக் கணக்கல்ல
எழுதுவதால் இறக்கிவைக்க எளிதானத் துயரல்ல
தொழுது அனுப்புகின்றோம் தொலைதூரம் செல்லும்வரை
புழுவாய்த் துடிக்கின்றோம் புறப்பட்டார் தமிழன்பன்!

உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்த கண்களும்
இளகி வழிந்தோட ஈரோட்டார் போகும்ழி
தளர்ந்த யாத்திரையில் தமிழரது மனங்களெலாம்
கலந்தவண்ணம் கவிஞரது கடைசி ஊர்வலமும்!

பிறவிப் பயனடைந்த பெருங்கவிஞர் யாத்திரைக்கு
உருகி வழிகிறது உலவுகின்ற முகிலினமும்
அருகிருந்து தமிழமுதை அள்ளித் தந்தமகாகவி
பிரிவேற்று செல்லுதால் பேதலித்தோம் மண்மடியில்!

சென்று வாருங்களய்யா செந்தமிழாள் தவிப்பதை
கண்டொருநாள் திரும்புவீர் காசினிக்கு மறுபடியும்
அன்றுங்கள் அரவணைப்பில் அருந்தமிழாள் மகிழ்ந்திருக்க
நின்று நிலைக்கட்டும்  நிங்களது புகழென்றும்!

**- பொன்மணிதாசன்**

# அன்றொரு நாள்

இருளிய வானில் நிலவு கொஞ்சம்
இருட்டை நிவர்த்தித்து தன்னுள் மறைத்து
பகலொளியவனிடம் தன்பொறுப்பை
பறைசாற்றி வரவும் திட்டம்....

இனிய பகலவன் இருளை மறைத்து
இத்தனைக்கும் கதிர்க் குவிச்சலில் புவி
உறிஞ்சிய வண்ணம் கருமைக்கதிர்கள்
உயிர்ப்பெற்றெழ கண்ணுயர்த்தியதும்

உச்சி வெயிலென தம்மிதம் பெயர்சூட்டி
உரிய நிறத்தை வழங்கி வாழச்சொல்லும் நிறங்களில்
ஒரு நிமிடம் நிதானிக்க... நிறங்களை கண்டிருப்பேன்...
சிந்தனைகள் எட்டவில்லை.

வெள்ளொளி மங்கியதோ? அறியவில்லை...
அறிவிற்கு எட்டவில்லை.
பசுமிலைகள் நீலவானம் கரும் குகைகள்
எத்தனை எத்தனையோ? கண்டே வியந்தேன்.
எதிலும் பிடித்தமற்ற இன்னல் நாட்களிலும்

சிறப்பும் சீர்மையும் அந்நாளை போர்த்தியிருக்க
சிலவகையில் இதுவும் நன்மை தானோ?
சிந்திடும் கண்ணீரிலும் நிறம் தானில்லை..
சிவந்த முகத்தின் வனப்பும் குறைவுதானோ?

என் சிறுபராயம் எது என்று
என்னிலே எழும் வினாக் குகையில்
இவற்றை தாண்டிய இனிப்பும் கசப்பும்
இனிதே நிறைந்த வினாக்கள்
இவை யெல்லாம்.....

**பாத்திமா (ரீ)ஸஹ்ரா பிஷ்ருள் ஹாபி,**
பேருவளை



# பூமிக்கு ஒரு காதல் கடிதம்

இயற்கைக் காரணி
அழகு நிலமே
செயற்கையிலும் ஒளிரும்
சொக்கத் தங்கமே உயர் மேட்டிலும்
உன்னத அழகியே
அயர்வில்லா சரிவின்
சரித்திர ஓவியமே

உன்னிடம் பித்தானேன்
உயிரின் சத்தானேன்
கண்ணின் காட்சிகளில்
கருத்தாய் உருகுகிறேன்
என்றும் எதிலும்
காதல் உணர்வுகளே
நின்றும் நிலைத்தும்
நினைவாய் ஏங்குகிறேன்

வளைவு சுளிவுகளின்
வடிவங்களில் மயக்குகிறாய்
தொலைவிலிருந்து பார்த்தாலும்
தொடர்ந்து மயக்குகிறாய்
அலையலையாய் வந்து
மனதை அள்ளுகிறாய்
விலையில்லா மாணிக்கமே
வியக்கிறேன் காதலாய்

அருவிகளையும் சுனைகளையும்
தருகிறாய் அன்பிலே
குருவிகளுக்கும் உதவுகிறாய்
குன்றாயும் அழகாகிறாய்
கருவியாய் கருத்தாய்
கட்டி அணைக்கிறாயே
நிறுவிடாத குகையாய்
நிறைக்கிறாய் மனதையே

தென்றலாய் உடல்
தழுவியதில் இன்பமாகிறேன்
அன்றும் இன்றும்
மூப்படையாத முத்தே
என்றும் இளவரசியாய்
ஏங்க வைக்கிறாயே
வென்று விட்டாய்
காதலில் கட்டுண்டேனே

மனங்கவர்ந்த பூமியே
காந்தமே கற்கண்டே
இனங்காணாத காதலில்
கட்டுண்டேன் காதலானேன்
தினந்தினம் ஏங்கிடும்
காதலனாய் காத்திருக்கிறேன்
வனங்களில் இருந்தாலும்
வந்து அணைத்திடுவாயென்னை.

**கவிஞர் புல்லாங்குழலன்.**

# மொட்டக் கடிதாசி



மூணு வருச காதல்... தினம் தினம் அவ நினைப்பு தான் பாடாய் படுத்துது. இருந்தும் அந்த பாழாய் போன மனசுக்குள்ளே இருக்குற காதலை அந்த இதயம் படத்துல வர்ற முரளி போல சொல்ல முடியலை. கன்னா பின்னானுன்னு கவிதை எழுதுறேன், கதை எழுதுறேன், அவளை நினைச்சு பாட்டு பாடுறேன் இருந்தும் என்ன பயன்??? சொன்னா தானே மனசுக்குள்ளே இருக்குற என் காதல் அவளுக்கு தெரியும்.. சனியன் பிடிச்சவனே இப்படி எங்ககிட்ட புலம்பி தள்ளுறதை விட்டிட்டு அவகிட்ட சொல்லி இருந்தா காலாகாலத்துல கல்யாணம் நடந்து புள்ள குட்டி பொறந்து குடியும் குடித்தனமா நல்லா இருப்ப, எங்ககிட்ட புலம்புறது சுத்த வேஸ்ட்டுன்னு ஜூனியர் கூட காரி துப்பிட்டு போய்ட்டானுங்க.. அவளை தவிர அந்த காலேஜ் முழுதும் என் மனசுல உள்ள காதலை சொல்லிட்டேன்

சொன்னா தானே காதல் கூட ஜெயிக்கும். என்னன்னு தெரியலை ஊர் முழுக்க வாய் கிழிய பேசுறேன் அவளை பார்க்கும் போது மட்டும் வாய் குளிர் ஜுரம் வந்தா மாதிரி நடுங்குது.. என் காதல் சிலருக்கு காமெடியா தெரியலாம் ஆனா என் வாழ்வின் அர்த்தம் அவள்.. என் தாய்க்கு பிறகு என் வாழ்வில் அவள் அங்கமாக போகிறவள் என்று அவளை பார்த்த முதல்

மாத்திரத்திலேயே மனதில் கங்கணம் கட்டி கொண்டு இருக்கிறேன். நிச்சயமா அவ என் வாழ்க்கைல வந்தா என் வாழ்க்கை மட்டுமல்ல அவ வாழ்க்கையையும் சந்தோசமா பார்த்துப்பேன். மூச்சு முட்டு மளவு தேக்கி வைத்திருக்கும் மூன்று வருட காதலை எல்லாம் கடிதத்தில் கவிதையாக்கி கொட்டி என் உயிரை உயிர் எழுத்தாக்கி காதலை பறை சாற்றும் விதமாக கடிதத்தை வடித்திருந்தேன். அது வெறும் கடிதமல்ல என் வாழ்க்கை. என் வருங்கால வாழ்க்கை இருண்ட காலமாக ஆகாமல் இருக்க நான் எழுதிய அந்த கடிதத்தை வகுப்பில் எல்லோரும் உணவு உண்ண போகும் நேரம் பார்த்து யாருமில்லாத போது நான் எழுதிய கடிதத்தை அவள் பேக்கில் வைத்து விட்டு வந்து விட்டேன்.

மறுநாள் மாலை ராஜாவாகிய நான் கையில் ரோஜாவுடன் கொஞ்ச போகும் என் காதலோடும் கொஞ்சம் பயத்தோடும் அந்த பார்க்கில் காத்திருந்தேன்.. எப்படியாவது அவள் முகத்தை பார்த்து இந்த ரோஜாவை கொடுத்து என் காதலை சொல்லி விட வேண்டும் என்று என் இலக்கியாவுக்காக இலட்சியத்துடன் நின்றிருந்தேன் ..

அவள் அந்த பார்க்கை நோக்கி வந்து கொண்டிருந்தாள், அவள் உதட்டில் புன்னகை வழிந்தோடியதை என்னால் உணர முடிந்தது. நிச்சயம் என் காதல் கடிதம் அவள் மனசு என்னும் கோட்டையின் பூட்டை திறந்திருக்கும் என்று நம்பினேன் ...

நான் அவளை நெருங்கும் முன் எனக்கு முன்னதாக நின்று கொண்டிருந்த எங்கள் கிளாஸ் மேட் அரவிந்தனை ஓடி சென்று கட்டியணைத்தாள். என்னடி இத்தனை நாளா காதலை சொல்லியும் சம்மதிக்காதவ திடீர்ன்னு வர சொல்லி கட்டி பிடிச்சு காதலை சொல்லி சர்ப்ரைஸ் கொடுக்கிற ??

நடிக்காதடா, இன்னைக்கு என் பிறந்தநாள், என் பிறந்தநாளுக்கு என்னை அசத்தணும்னு நீ மனசுக்குள்ள பூட்டி வச்சிருந்த காதலை எல்லாம் கவிதையாக்கி அசத்தி இருந்தியே அதுல விழுந்துட்டேண்டா. பேரு எழுதாம மொட்டக் கடிதாசி எழுதி என் பேக்குல போட்டா எனக்கு தெரியாதுன்னு உனக்கு நினைப்பா ???

உன் எழுத்து மூலமா உன் காதலை புரிஞ்சுக்கிட்டேன் டா என்று அவன் கை யோடு அவள் கை இணைத்தாள். அந்த மலமாடு அரவிந்தனும் அவள் காதலுக்காக அவன் எழுதாத கடிதத்தை அவன் எழுதியதாக ஒத்துக்கொண்டான் ..

அப்பொழுது காற்று பலமாக வீசியது அவள் கைகளில் இருந்த அந்த காதல் கடிதம் பறந்து வந்து என் மேல் ஒட்டி கொண்டது அப்பொழுது அரவிந்தனின் கையை கொஞ்சம் உதறி விட்டு வேகமாக ஓடிவந்து என் மேல் ஒட்டி இருந்த காதல் கடித்தை அவள் கைகளில் எடுத்து, அந்த கடிதத்தை முத்தமிட்ட பின்னர் அவள் நெஞ்சோடு ஒட்டி கொண்டாள்... கண்களில் ஆனந்த கண்ணீரோடு மனதில் அவள் காதலின் நினைவுகளோடு அந்த பார்க்கை விட்டு திரும்பினேன்.. பார்க் வாசலில் சிலையாய் இருந்த காந்தி என்னை பார்த்து புன்னகைத்தார் !!

**-நௌஷாத் கான் லி-**



# என் உலகம் எது?

வெளியே வீசிய குளிர், சாளரம் வழியாக உள்ளே புகுந்து குளிர வைத்தது. சில்வியாவின் கைகளில் சலைன் நிறைந்த குளுக்கோஸ் இறங்கிக் கொண்டிருந்தது. மருத்துவமனைக்கு வெளியே தெரிந்த வானில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நட்சத்திரங்கள் கண்சிமிட்ட ஆரம்பித்தது.

வயிற்றில் பசி மெதுவாக கிள்ள ஆரம்பித்தது. 'நாளை இரவு கிறிஸ்துமஸ் திருப்பலிக்குச் செல்ல வேண்டும். இந்த வேளையில் மருத்துவமனையில் மோட்டு வளையத்தைப் பார்த்துக் கொண்டு எப்போதடா இந்தக் குளுக்கோஸ் பாட்டில் தீரும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

நாளை மதியம் விக்டர் வேறு குவைத்திலிருந்து வருகிறார். அவருடைய போனும் இரண்டு நாளாக வரவில்லை. நானும் முயற்சி செய்து தொடர்பு கிடைக்கவில்லை.

திருமணமாகி ஒரு ஒரு வருடம் கழித்து ஊருக்கு வருகிறவருக்கு நான் மருத்துவமனையில் இருப்பது தெரிந்தால் எப்படி இருக்கும்? சேர் எனக்கு ஏன் திடீரென்று ஒரு தலைபக்கம் மட்டும் தலைவலி. அதுவும் தாங்க முடியாமல்.. டாக்டர் ஒரே மன உளைச்சல் என்கிறார். திருமணத்திற்கு முன்னால் காதலித்தீர்களா? என்று டாக்டர் கேட்டார். ஆம் என்பதையும் என் கணவர் விக்டரிடம் எல்லாம் மனந் திறந்து சொல்லி விட்டேன் என்பதையும் குறிப்பிட்டு விட்டேன்.

மதியம் திரும்ப வந்து ஸ்பெஷலிஸ்ட் விமலா டாக்டர் கொஞ்சம் மனம் விட்டு யாரிடமாவது பேசியிருக்கிறீர்களா? என்று கேட்கிறார்கள். எதைப் பற்றி என்றால் ஜானைப் பற்றி என்கிறார். இவர்கள், நான் ஜானை மறந்தாலும் என்னை மறக்க விடமாட்டார்கள் போலிருக்கிறதே. என் நகைகளோடு ஓடிப் போனவன் எங்கிருக்கிறான் என்று கூடத் தெரியாது. என் கணவர் திருமணத்திற்கு முன்னால் நடந்ததெல்லாம் நீ தெளிவாகச் சொல்லி விட்டாயல்லவா? குழப்பமில்லாமல் இரு. நாம் காதலிப்போம் என்று அடிக்கடி

தொலைப் பேசியில் ஆதரவாகத் தானிருக்கிறார்.

ஆனால் இந்த டாக்டரும் விமலா டாக்டர் ஸ்பெஷலிஸ்டும் தான் என் தலைவலிக்குக் காரணம். இன்னும் திருமணத்திற்கு முன்னால் உள்ள வாழ்க்கை தான் என்கிறார்கள்.

தோழி உஷாவிடம் எல்லாம் மனம் திறந்து பேசியிருக்கிறேன். விக்டரிடம் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அப்படியே சொல்லியிருக்கிறேன். இருந்தும் எனக்கு எப்படி மன உளைச்சல். இயேசுவே! நான் பாவி தான். ஆனால் நீர் பாவிகளை இரட்சிக்கவே உலகிற்கு வந்தீரே! என்னை ஏறெடுத்துப் பாருமய்யா.

நான் உமது பிள்ளையாகவும் என் கணவருக்கு பிரமாணிக்கமாகவும் இருக்க உதவி செய்யும். ஓராண்டு கழித்து உம்முடைய பிறந்த நாளை நாங்கள் இருவரும் இணைந்து மகிழ்ச்சியாக கொண்டாட விரும்பும் இந்தநாளில் எமக்கு மகிழ்ச்சியும் பெருமிதமும் நீர் கொடுக்க வேண்டாமா?

இப்படி ஒரு மாதமாக தலைவலியால் அவதிப்படுகிறேனே! என் தவறுகளை மன்னித்து எனக்கு விடுதலை கொடுமையால் என்று சிலுவையில் தொங்கிய இயேசுவை மனக் கண் முன் கொண்டு வந்து செபிக்க ஆரம்பித்தபோது

‘சில்வியா. குளுக்கோஸ் தீர்ந்து விட்டது. கொஞ்சம் எழும்பி இருந்தீர்கள் எனில் எல்லாவற்றையும் எடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்றார் நர்ஸ் ரோசம்மா.

எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கும் இந்த ரோசம்மாவிடம் எப்படி முடிகிறது என்று கேட்க வேண்டும்.

உள்ளே வந்த சில்வியாவின் அம்மா ‘எப்படி இருக்கிறது சில்வியா, மாப்பிள்ளை குவைத்திலிருந்து போன் பண்ணினார். நாளைக்கு காலையிலே கிளம்புகிறாராம். காபி குடிக்கிறாயா’? என்றவாறு பிளாஸ்கை திறந்தாள்.

‘நான் ஆஸ்பத்திரியிலே இருக்கிறதை சொன்னியளாம்மா’ சில்வியா கேட்டாள். ‘இல்லடி. எப்படிச் சொல்றது. நீ தோழி வீட்டிற்கு போயிருப்பதாகச் சொன்னேன். உன் மொபைலில் டவர் கிடைக்கவில்லை என்று சொல்லி வைத்திருக்கிறேன்’ டீயைக் கொடுத்தாள் அம்மா. ‘சே! எவ்வளவு ஆசையாக ஊருக்கு வருகிறார். நான் இப்படி மருத்துவமனையில் ஆண்டவர் ஏன் இப்படி பண்ணுகிறார்?’ என்று சலித்துக் கொண்டே டீயைக் குடித்தாள்.

மறுநாள் காலை சில்வியாவின் அம்மா முற்றம் தூத்துக் கொண்டிருந்த போது ஆட்டோவிலிருந்து இறங்கினாள் சில்வியா.

ஆச்சரியமாக ‘இப்போ எப்படிம்மா இருக்கு. தலை வலி போயிடுச்சா. நீ படுக்கையை விட்டு அசையக் கூடாதென்று டாக்டர் சொன்னாரே. நீ.. இப்படி.. ஒரு போன் போட்டிருந்தால் தம்பி ராபர்ட்டை ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருப்பேனே.. என்றாள் அம்மா.

‘நான் இரவு முழுவதும் பிறக்கப் போகும் இயேசு பிரானை வேண்டினேன. கர்த்தர் என் செபம் கேட்டார். நான் போய் வீட்டிலே கர்த்தர் குடில் கட்ட வேண்டும் அவர் குவைத்திலிருந்தே குடிலுக்கான எல்லா சொரூபமும் வாங்கி வருவதாகச் சொல்லியிருக்கிறார்.


‘காருக்குச் சொல்லி விடுங்கள். மத்தியானம் ஏர்போட்டுக்குப் போக வேண்டும்’ என்று அவசரமாகச் சொல்லி விட்டு நடந்த சில்வியாவைப் பார்த்து மகழ்ச்சியடைந்தவாறு இறைவனுக்கு நன்றி சொன்ன அம்மா, கிறிஸ்மஸ் தயாரிப்புகளில் இறங்கினாள்.

# அதீனா அபூ உபைதாவின்

# நிசப்தம் பேசும் போது

**பெண்மை முதல் காதல் வரை நிசப்த வியாக்கியானம் சொல்லும் வாழ்க்கை!!!**

**-சேனையூர் சப்றீன்**




அதீனா அபூ உபைதாவின் நிசப்த வியாக்கியானம்

நிசப்தத்தின் வழியே உரத்த குரலை அடைய முயற்சிக்கும் ஒரு பெண் எழுத்தாளரின் உள்ளகப் பயணத்தைப் பதிவு செய்யும் கவிதைத் தொகுப்பு. 'நிசப்தம்' என்பதொரு அமைதியின் மாயை. ஆனால் அதீனா எழுத்தில் அது, பேசத் திணிக்கப் பட்டாலும் சொல்ல மறுக்கப்படாததாலும் உள்ளத்திற்குள் எழும் அது மிகுந்த குரல். அதனால்தான் இந்த நூல் பெயரே வாசகர்களை கவர்கிறது மௌனத்திற்குள் மறைந்திருக்கும் உண்மைகளின்

'வியாக்கியானம்' அவள் சொல்ல வேண்டியதைச் சொல்லும் உரிமையின் அறிவிப்பு.

இந்த நூல் வாசிப்பது ஒரு கவிதைப் பயணம் மட்டுமல்ல அது ஒரு பெண்ணின், ஒரு மகளின், ஒரு தாயின், ஒரு காதலியின், ஒரு மனிதனின் ஆழமான அனுபவ வரலாறு. 156 பக்கங்களாக இருப்பினும் ஒவ்வொரு பக்கமும் தனி உலகம்- தனி வலியும் தனி அன்பும் தனி உண்மையும்.

இந்த நூலின் ஒரு முக்கிய அங்கம் அதன் வடிவமைப்பு.

தமிழ்நெஞ்சம் அமின் (பிரான்ஸ்) உருவாக்கிய வடிவமைப்பு, கவிதைகளின் உணர்வோட்டத்தோடு பொருந்தும் வகையில் மிக அழகாகவும் மென்மையாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. படைப்பின் நுணுக்கத்திற்கேற்ற ஒழுங்கான அட்டைப் பட/ வடிவமைப்பு உள்ளடக்கப் பகுப்பில் சீரான அமைப்பு/ வாசிப்பில் கண்களுக்கு சுமையாக இல்லாத வரிவடிவம்/ முற்றிலும் நவீனமான வாசிப்புணர்வை உண்டாக்கும் சிறப்பான பக்க அமைப்புகள், அமின் வடிவமைப்பு இந்தப் புத்தகத்திற்கு ஒரு சர்வதேசத் தரத்தை அளிக்கிறது. கவிதைகளின் மென்மையை அழகாகத் தாங்கும் அமைதி நிறைந்த வடிவமைப்பு எனலாம்.

இந்தப் புத்தகத்தை வெளியிட்டுள்ள ஏட்டுலா கனவாக்கம் என்பது சமீப காலங்களில் தமிழ் இலக்கியத்தில் புதுமுகங்களை ஊக்குவித்து வரும் ஒரு மேடை.

இது வெறும் வெளியீட்டு நிறுவனம் அல்ல இளம் எழுத்தாளர்களின் கனவுகளை உருவாக்கும் இலக்கியத் தொழிற்சாலை. அவர்கள் வெளியிடும் நூல்களில் சில பொதுவான அம்சங்கள் காணப்படும்.

புதிய குரல்களுக்கு இடமளித்தல் / தரமான புத்தக வடிவமைப்பு / வாசகர்களை ஈர்க்கும் உள்ளடக்கத் தேர்வு / இலங்கைத்

தமிழ் இலக்கிய உலகில் மெல்ல மெல்ல வளர்ந்து வரும் செல்வாக்கு

அதீனாவின் நிசப்த வியாக்கியானம் ஏட்டுலா கனவாக்கம் வெளியீடாகப் பதிப் படைந்தது இந்த நிறுவனத்தின் இலக்கிய பார்வையையும் புதிய படைப்பாளிகளை மேடைக்கு கொண்டுவரும் உறுதியையும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

அதீனா அபூ உபைதாவின் முன்னுரை இந்த நூலுக்குக் குரல் அமைக்கும் முக்கியமான தளமாக உள்ளது. சிறு வயது முதல் எழுத்தில் மெல்ல மெல்ல தன் குரலை வடிவமைத்த ஒரு பெண்மணி. அனுபவங்கள், குடும்ப ஆதரவு, குறிப்பாக தந்தையின் இலக்கிய ஈர்ப்பு - இவை அனைத்தும் அதீனாவின் எழுத்து உருவாக்கத்தில் விதை போல பதிந்திருக்கின்றன.

அவரின் தந்தை அபூ உபைதா கவிதை எழுதுபவர். அவரது படைப்புகள் ஜனனி உட்பட பல பத்திரிகைகளில் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வளமான இலக்கியப் பின்னணியே கவிஞரின் மொழி உணர்வுக்கும், வரி வடிவமைப்பிற்கும் ஒரு அடித்தளத்தை அமைக்கிறது.

மேலும் 'நெஞ்சாத்தி' என்ற இலக்கிய வட்டாரத்தில் இணைந்த பின் எழுத்தாளரின் குரல் மேலும் கூர்மையடைந்தது என்பது அவர் வழங்கும் நன்றிக்குறிப்பிலிருந்தே தெளிவாகிறது. இந்த முன்னுரை தனிப் புதினம் போலவே படிக்கிறது - ஒரு எழுத்தாளரின் உருவாக்க வரலாறாக.

நிசப்த வியாக்கியானம் என்ற தலைப்பு போலவே, நூலின் உள்ளடக்கம் நிசப்தத்தின் நெஞ்சோசையை வெளிப்படுத்துகிறது. பெண்களின் வாழ்வில் அடிக்கடி பேச முடியாத உணர்வுகளே இங்கு வரிகளாகி வெளிப்படுகின்றன. அவை எவ்விதத்திலும் கோபமோ எதிர்ப்போ நிறைந்ததாக இல்லாமல், அமைதியின் வழியே ஏற்படுத்தும் அழுத்தமான தாக்கத்தை கொண்டவை.

பெண்மை - வாழ்வின் நுணுக்கமான ஓவியம்

'நான் ஒரு பெண்' என்ற கவிதையில் எழுத்தாளர், விடலைப் பருவத்தின் துள்ளல்களிலிருந்து கட்டுப்பாடு, ஒழுங்கு, எச்சரிக்கை, பாதுகாப்பு என பெயர் சூட்டப் பட்ட கட்டுப்பாடுகளின் உலகுக்குள் தள்ளப்படும் பெண் வாழ்க்கையை அதீத உண்மையோடு வரைந்து காட்டுகிறார்.

மங்கலான நினைவுகளும் கசப்பான யதார்த்தங்களும் மோதும் அந்தப் பகுதி நூலின் வலுவான அசைவாகும்:

'சுதந்திரம்' என்று பசுத்தோல் போர்த்திய புலி

'பாதுகாப்பு' என்று வெறும் வார்த்தைகள்

இது சமூகத்தின் பெண்களிடம் நடத்தப்படும் இரட்டை நிலைப்பாட்டு விமர்சனம்.

அம்மா பற்றிய கவிதை புத்தகத்தின் இதயம் போன்றது. தாயின் தியாகம், இரவுகளின் வேதனை, கருவறையில் இருந்து வாழ்வின் இறுதி வரை தாங்கும் அன்பு - இந்த அனைத்தையும் மிக அழகாக வரியிலக்கியமாக்கியிருக்கிறார் எழுத்தாளர்.

மனிதனின் முதன்மையான, தூய்மையான உறவை இந்தளவு கலை உணர்வோடு எழுதும் திறமை அதீனாவின் எழுத்துக்கு தனிப்பட்ட முத்திரையாக இருப்பது போல் தெரிகிறது.

அப்பாவின் குணாதிசயங்கள், குடும்பத்தில் அவர் தாங்கும் அமைதியான பொறுப்பு, மகள் வாழ்க்கையில் அவர் சிற்பியாக இருப்பது - இவ்வளவு அன்பான மற்றும் சீரிய படிமம் இந்நூலை குடும்பம் மற்றும் உறவுகளின் இலக்கியமாகவும் மாற்றுகிறது.

காதல் - மென்மையும் உண்மையும் கலந்த உருக்கம்

அதீனா எழுதியிருக்கும் காதல் கவிதைகள் சாதாரண காதலைப் பற்றி

அல்ல அது ஒன்று பட்ட இரு உயிர்களின் ஒத்திசைவு போன்றது.

நீ பாதி நான் பாதி

நீயும் நானும் எனக் கட்டித் தழுவும் கடல்

இவை அபிராமமான காட்சிகளும் நுட்பமான ஆன்ம வியாபாரத்தும் சேர்ந்த வரிகள். காதல் என்பது நினைவின் நறுமணம், எதிர்பார்ப்பின் அதிர்வு, பயணத்தின் தொடர்ச்சியான துணை - இவை அனைத்தும் அதீனாவின் வரிகளில் அற்புதமாகப் பதிந்திருக்கின்றன.

அதீனாவின் கவிதை நடை மிகப் பெரிய அலங்காரங்களால் நிரம்பியதல்ல. ஆனால் ஒவ்வொரு வரியும் ஒரு சிற்ப கைகளைப் போல அமைதியாக, ஆனால் உறுதியாக வடிவமைக்கப்பட்டவை. மென்மை, கசப்பு, உண்மை, உரத்த எதிர்ப்பின் நிசப்தம். இந்த நான்கும் சேர்ந்து அவரது கவிதைத் தன்மையை உருவாக்குகின்றன.

அதிக சிக்கலான சொற்கள் இல்லை ஆனால் வாசக மனதில் ஆழமாகப் புகும் உணர்ச்சி நிறைந்த மொழி. அதேவேளை சமூகநீதியை வெளிப்படுத்தும் இடங்களில் அவர் பயன்படுத்தும் உவமைகளும் உருவகங்களும் நேர்த்தியானவை.

சமூக பார்வை - மறைப்புகளுக்குள் மறைந்த வாழ்வுகள்

இந்நூலில் பல கவிதைகள், சமூகத்தில் வாழும் சாதாரண மக்களின் அசாதாரண வலிகளைப் பேசுகின்றன

தொழிலாளியின் துன்பம், தள்ளாடும் முதுமை,

விலைவாசியால் துவண்டு போகும் மக்கள், நாதியற்ற உணர்வுகள், உறவுகளின் தகாத தலையீட்டால் முறிவடைந்த மனங்கள். இவை அனைத்தும் அதீனாவின் மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றன.

எந்தக் கவிதையும் வெறும் 'உணர்ச்சி' வெளிப்பாடு அல்ல. உண்மையின் பிரதிநிதி. ஒவ்வொரு வரியிலும் ஒரு தெருவின் நெடிய மூலை, ஒரு முதியவரின் ஆழ்ந்த மூச்சு, ஒரு தாயின் மெல்லிய உளறல், ஒரு தொழிலாளியின் வியர்வை - இவை எல்லாம் தான். இலக்கியத் தரம் - மொழி, தத்துவம், உணர்வு எழுத்தாளரின் எந்தப் பார்வையும் மிகைப்படுத்தப்பட்டதல்ல. அது உண்மை, அது வாழ்வு, அது பெண்ணின் நிஜமான போராட்டம். மேலும், அவரது கவிதைகள் தத்துவ விளக்கங்களாகவும் மாறும். தேடல்களின் பட்டியல், உறவின் அமைப்பு, காதலின் லயம், பெண்ணின் சுயநினைவு. இவை கவிதைகளை தத்துவத் தளத்துக்கும் உயர்த்துகின்றன.

இந்த நூல் மூன்று பக்க அனுபவங்களை வாசகர்களுக்கு அளிக்கும் என நம்புகிறேன்.

1. **பெண்ணின் உள்ளமை உலகைக் காணும் ஆழமான உணர்வு**
2. **மனித வாழ்வின் நுண்ணிய வலிகளையும் மகிழ்ச்சிகளையும் உணரும் திறன்**
3. **நிசப்தத்தின் குரலை கேட்கும் மனநிலை**

இந்த நூல் படித்த பின்னர் வாசகர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையையும் உறவுகளையும் மறுபார்வை செய்ய வைக்கும்.

நிசப்தம் பேசும் போது..

நிசப்த வியாக்கியானம் என்பது ஒரு கவிதைத் தொகுப்பு மட்டுமல்ல அது ஒரு தலைமுறையின் பெண்களுக்கான மொழி. சொல்லமுடியாததைச் சொல்லும் துணிவு.

உணர்வுகளை அமைதியாகப் பகிரும் வழி.

வலிகளை கவிதையாக மாற்றும் ஆற்றல்.

அதீனா அபூ உபைதாவின் இந்த நூல், இலக்கியத்தை நேசிக்கும் யாருக்கும் ஒரு மனம் நிறைந்த வாசிப்பு அனுபவம். பெண்மை, தாய்மை, காதல், உறவு, சமூக உணர்வு - இந்த ஐந்து தூண்களையும் இணைக்கும் ஒரு கவிதை மாளிகை.

# செந்தமிழராய் வாழ்வோம்



வாழ்க்கை என்பதே வாழ்வதற்கே இதில்..
வருவது வரட்டுமென்று துணிந்து நில்லடா ! மனிதா!..
உள்ளத்தை உறுதியாக வைத்துக்கொண்டு தினமும்..
எண்ணத்தில் எழுந்திடும் கருத்தை பரப்பிடு..
தேடலே சுவையானது
மண்ணிலுள்ள யாவருமே..
வாழுகின்ற காலத்திலேயே வரலாற்றில் இடம்பெற்று...
எங்கள் இலக்கியங்களே எந்தன் சொந்தமென்று..
எந்நாட்டவரின் முன்புமே
என்றென்றும் உரக்கச்சொல்ல..
விண்ணிலும் மண்ணிலும் செழிக்குமே நம்தமிழ்மொழி..
தந்திடும் வரவால் உயர்ந்தோம் செந்தமிழர்களாய்..



**ப.வெங்கட்ரமணன்** -
குளித்தலை

---

நிறைந்து வழிந்தது
கோவில் உண்டியல்
மக்கள் வேண்டுதல்கள்.

குடிசைக்குள் மழை
கோணிச் சாக்கு
குடிசைவாசிக்கு குடை

முன்னும் பின்னும் போய்
தறி நூல் சோறு போடுகிறது
நெய்யும் நெசவாளிக்கு

அழகிய ரோஜா இதழ்களை
முத்தமிட்டு செல்கிறது
தென்றல்காற்று

ஓவியத்தில் கிளி
பேசிக் கொண்டிருந்தது
குழந்தையின் மனதோடு

**பூ.சுப்ரமணியன்**
பள்ளிக்கரணை, சென்னை

# மனம் ஏங்குகிறது!

என் வீட்டிற்கு மிக மிக
அருகில் தான் இருக்கிறது
அண்ணாச்சி கடை

என் வீட்டிற்கு மிகவும்
அருகில் தான் தனியார்
மருத்துவனை...

மிக மிக அருகில் தான்
பேருந்து வசதியும்
பேருந்து நிலையமும்

நடந்து செல்ல கூடிய
தூரத்தில் தான் பள்ளிக்கூடம்

சிறிது நேர பயணதூரத்தில் தான்
கல்லூரிகளும் உள்ளன

இரண்டு வீதிகளுக்கு
இடையில் தான் இருக்கிறது
வாகன பழுது பார்ப்பகம்

மூன்றாம் வீதியில் தான்
பணி செய்யும் அலுவலகம்

ஐந்து வீதிகள் கடந்தால்
நியாய விலை கடை

வாகனத்தை இயக்கினால்
பத்தே நிமிடத்தில்
நட்சத்திர விடுதி

அடுத்த ஐந்து நிமிடத்தில்
பிரம்மாண்ட திரையரங்கு

அலைபேசியிலேயே
மின்கட்டண வரியும்
அலைபேசிக்கான கட்டணமும்
கட்டி விடுகிறேன்

எல்லாவற்றிக்கும் மேலாக
தந்தையின் முப்பது ஆண்டு
உழைப்புக்கு பின்னால்
பிழைக்க வந்த ஊரில்
இன்று சொந்தமாய் ஒரு வீடு

இருந்தாலும் ஏதோ ஒன்றாய்
என் மனதில் தினமும்
வருடியபடியே இருக்கிறது
எங்கள் ஊர்

எங்கள் ஊரில் பெரிதாக
பேருந்து வசதியே கிடையாது

மருத்துவம் பார்க்க கூட
பேருந்தோ அல்லது
தனி வாகனமோ எடுத்துதான்
செல்ல வேண்டி இருக்கும்
இரவுகளில் தெருக்கள் எல்லாம்
கருமையில் உறங்கும்

சில வீடுகளில்
மின் விளக்குகளே
இருக்காது...

ஒரே அடுப்பில் தான்
30 பேருக்கு சாப்பாடு
செய்யப்படும்

வாரம் ஒரு முறை
பொரியும் கடலையும்
தீன்பண்டமாக வரும்

அங்கே கணினிகள் இல்லை
காற்றாலைகள் இல்லை
கைபேசிக்கு சிக்னலும் இல்லை

சேவலும் காக்கையும்
அதிகாலையை எழுப்பி விடும்

பள்ளிக்கு பத்தும்
கல்லூரிக்கு முப்பதும்
என மைலில் கணக்கில்
நடந்து செல்ல வேண்டும்

எல்லாவற்றிக்கும் மேலாக
சொந்தமாய் இரண்டு
குடிசைகளைத் தவிற வேறு
எதுவும் இல்லை எங்களுக்கு

ஊருக்கு நடுவில்
ஒரே ஒரு தேனீர் கடை


ஐந்து ஊர்களுக்கு
ஒரு நியாய விலைக்கடை,

இன்றைக்கு சில வீடுகளில்
வண்ணத் தொலைக்காட்சி


இவ்வளவுதான் எங்கள் ஊர்

இருந்தாலும் இங்கு வந்து
நிறந்தரமாக வாழ்ந்திடவே
மனம் ஏங்குகிறது!
அதற்காகவே உழைத்து உழைத்து
ஓடாய் தேய்கிறோம்
எல்லாம் இருக்கும் இந்த பட்டணத்தில்

**கவிஞர் மீன்கொடி பாண்டிய ராஜ்**
தாய்த்தமிழ் இலக்கியப்பேரவை



# உறவின் மாறாட்டம்




**சிறுகதைத் தொகுப்பு -**
இரஜகை நிலவன்
**முதல் பதிப்பு** - ஏப்ரல் 2025
**பக்கம்** - 152
**விலை** - ரூபாய் 170
**வெளியீடு** :
புஸ்தகா

## எழுத்தெனும் தேரில் உணர்வுகளின் பவனி....

*அனுபவங்களின் தொகுப்பு கதைகளாக உருமாறுகின்றன. சிலருக்கு காணும் சம்பவங்களின் நீட்சியும் அவை தரும் எதிரொளிப்பும் கதைகளாக மாறுகின்றன. கதைகளைக் கேட்டு கதைகளோடு வளர்ந்தவர்கள் நாம். நமது முன்னோர்களின் வாழ்வியலில் இருந்து கதைகளோடு பயணப்பட்ட நாம் நமது வாழ்வின் நகர்வுகளுக்கும் கதைகளையே பயன்படுத்திக் கொள்கிறோம்.*

*அறிவியல் வளர்ச்சியும் அவை பெற்றுத் தந்த கருவிகளும் இன்று ஊடகங்கள் வழியாகவும் தகவல் தொடர்புகளின் வழியாகவும் எத்தனையோ மாற்றங்களை ஏற்படுத்தினாலும் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் சிந்தனைகளும் அறச் செயல்பாடுகளும் நீதி உணர்வு உறவுகள் மீதான பற்று அன்பு பாசம் போன்றவற்றை இன்னும் கதைகளின் வழியாகவே அடுத்த தலைமுறைக்கு கடத்திக் கொண்டிருக்கிறது.*

*சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது என்ற அடிப்படையில் இந்தத் தொகுப்பில் சுமார் 30 சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன.*

ஒவ்வொரு சிறுகதைகளும் மன உணர்வுகளை அழகாக வெளிப்படுத்துகின்றன. எவ்வித தங்குதடையுமற்ற எழுத்து நடையில் நம்மை ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை இழுத்துச் செல்லும் கதையோட்டம் கதைகளை வாசிப்பதற்கு எளிமையாக்கி விடுகிறது.

ஒவ்வொரு கதைகளும் ஆரம்பித்த விதம் ஒன்றாக இருக்க திடீரென்று ஏற்படும் கொண்டை ஊசி வளைவுத் திருப்பத்தை போல கதையின் முடிவு நம்மை ஆச்சரியப்படுத்தும்படி மாறிவிடுகிறது. அத்தகு கதைகளாலான இந்த நூலை வாசிக்கும் போது சிந்தனை ஓட்டமும் எண்ணமும் கதைகளோடு பயணிப்பதை தவிர்க்க முடியவில்லை.

கதைகள் என்பது உண்மைச் சம்பவங்களின் ஆதாரத்தைக் கொண்டு கட்டி எழுப்பப்படும் கோட்டையாகவும் இருக்கலாம். காணும் காட்சிகளின் வழியே நமக்குள் எழும் சிந்தனைகளை வகைப்படுத்தி எழுதப்படும் தொகுப்பாகவும் இருக்கலாம். கட்டுரைத் தன்மை வரவிடாமல் நம்மை கதைகளாகவே மாற்றிவிடும் பாங்கும் இந்த கதைகளுக்குள் ஒளிந்திருக்கிறது.

சமூகத்தின் அடிப்படையான செயல்பாடுகளாக ஒவ்வொரு தனி மனிதனும் தனது உணர்வுகளின் வழியே பொதுநலத்தைப் பேணுவதில் கவனம் கொள்ள வேண்டும் என்பதை கதைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. பெண்களின் மீதான மரியாதை மதிப்பு குடும்ப உறவுகள் மீதான பற்று தாய் நாட்டின் மீதான நேசம் என கதைகள் பல்வேறு தளங்களில் நின்று நம் உணர்வுகளுக்குள் புதிய புதிய எண்ணங்களை உருவாக்கி விடுகின்றன. இத்தகு கதைகள் குறும்படங்களாக எடுப்பதற்கான சாத்தியக்கூறுகளை அதிகப்படுத்தி விடுகின்றன.

எளிமையான கட்டமைப்பும் இயல்பான உரையாடல்களும் நம் அருகாமையில் நடக்கும் நிகழ்வுகளை நம் கண் முன்னே காட்டும் சித்திரங்களாக மாற்றி விடுகின்றன. நிகழ் கால சம்பவங்களும் அதன் வழியே எதிர்காலத்தைக் கட்டமைக்கும் உறுதியும் வெளிப்படுத்தும் கதைகள் உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்தி அவையே மனிதனின் வாழ்விற்கான ஆதாரம் என்பதை நிரூபிக்கின்றன

சுதந்திர நாட்டில் இன்னும் மக்களுக்கான விடுதலை கிடைக்கவே இல்லை என்ற ஏக்கமும் கோபமும் நிறையக் கதைகளில் வெளிப்பட்டு விடுகிறது. மன வக்கிரத்தையும் அவலத்தையும் சொல்லும் கதைகளும் இதில் இடம்பெற்றுள்ளன. கணவன் மனைவி உறவு குழந்தையின்மையால் ஏற்படும் மன நெருக்கடி நாட்டுப்பற்று கடமையைச் செய்யாத கயவர்களால் ஏற்படும் விபரீதங்கள் ஒழுக்கம் தவறுவதால் நேரும் அவலங்கள் என அறச்சிந்தனைகளையும் ஒழுக்கக் கோட்பாடுகளையும் இந்தக் கதைகள் அறியத் தருகின்றன. அவ்வப்போது எழும் கட்டுரைத் தன்மையை கொஞ்சம் குறைத்துக் கொண்டு இன்னும் கதைகளின் நகர்வுகளை வடித்திருந்தால் உறவுகளின் மாறாட்டம் நமக்குள் உறவுகளின் மீதான பற்றுதலையும் பந்தத்தையும் தொடர வைப்பதில் சிறப்பான பங்களித்திருக்கும்.

# அம்மா என்றால் அம்மா தான்

பாவலர் கருமலைத்தமிழாழன்

பள்ளிசெல்லத் தயாராகும் என்னைப் பார்த்துப்
பார்த்துப்போ இருபக்க சாலை தன்னை
துள்ளிநீயும் தெருநடுவில் ஓடி டாதே
துரத்திவரும் வண்டிமோதும் என்பார் பாட்டி !
பள்ளியிலே யாரிடமும் சண்டை போட்டும்
பக்கத்தில் இருப்போனைச் சீண்டிப் பார்த்தும்
தள்ளுமுள்ளு செய்துவிளை யாடிக் கொண்டும்
தறுதலையாய் ஆயிடாதே என்பார் தாத்தா !

புத்தகத்தைப் பேனாவைத் தொலைத்தி டாமல்
புதுப்பேனா தனைப்பார்த்துத் திருடி டாமல்
வித்தையினிக் காட்டுகின்ற குரங்கா காமல்
வினையமுடன் நடந்திடுவாய் என்பார் அண்ணன் !
புத்தியோடு விளையாடி மைதா னத்துப்
புழுதியிலே சட்டையினை அழுக்காக் காமல்
பத்திரமாய் வரவேண்டும் என்றே அக்கா
பாடத்தை எடுத்திடுவாள் அருகில் வந்தே !

எல்லோரும் எதைஎதையோ சொல்லு வார்கள்
எப்படிநான் நடக்கவேண்டும் என்று ரைப்பர்
வல்லவனாய் ஆவதற்குப் படிக்க வேண்டும்
வயதிதுதான் போனாலோ வாரா தென்பர் !
எல்லோரைப் போலன்றி அம்மா மட்டும்
எடுத்துவைத்த சாப்பாட்டை மிச்ச மின்றி
நல்லபடி நீஉண்ண வேண்டு மென்று
நயமாகச் சொல்லிடுவார் முத்த மிட்டே !



# முற்றுப்புள்ளி வைப்பாள் அவள்...

நடந்திடும் வழியெல்லாம்
விழிகளை சுழலவிட்டுச் செல்லும்
அச் சிறுமியின் விழிகளுக்குள்ளோ
அத்தனை ஏக்கங்கள்...

வகை வகையான இனிப்புக்களதையோ
விழிகள் காண்கையிலே
எச்சிலின் ஊற்றெடுப்போ
நனைக்கிறதே வாயதை...

புத்தாடைகள் அணிந்து
கடந்திடும் சிறுமிகள் கண்டு
அவள் விழிகளின் மணிகளோ
தன்னாடையிலே பதிகிறதே...

அழகழகான அடுக்கு மாடிகள்
அவள் விழிகளின் விம்பத்திலே விழுந்திட...
அவள் மனத்திரையிலோ
நிழலாடுகிறதே அவள் வீடு...

விரும்பியதுவோ கேட்டவுடனே
கிடைத்திட்ட குதூகலிப்பிலே
மகிழ்ந்திடும் சிறுசுகள் முகம் கண்டு
தன் முகத்தைப் பொருத்திப் பார்க்கிறாள்
அவள்...

தன் வயதுப் பிள்ளை தானா இவளென
எண்ணி வியக்கிறாள்
அச் சிறுமியின் உடல் செழுமை கண்டு...
வியந்து பார்த்திடும்
இவளின் உடலோ மெலிந்து இருந்திட...
வயிறோ ஒட்டிக்கிடக்கிறதே...

எத்தனையோ ஏக்கங்கள்
அவள் விழிகளுக்குள் இருந்தாலுமே
வாடிய அவள் முகத்திலோ
புன்னகையின் கீறல்கள்...
விரல் பிடித்து அழைத்துச் செல்லும்
தன் தந்தையை நிமிர்ந்து பார்க்கையிலே...
அவளுக்குள்ளோ
தன்னம்பிக்கை வளர்கிறதே...
புதுத்தெம்பும் பிறக்கிறதே...

அவர் விரலின் கடினத்தை
உணர்கையிலோ
அவளுக்குள்ளோ ஓர் உறுதி...
மாற்றத்தை தன் வாழ்விலே நிகழ்த்தி
அவள் விழிகளின்
ஏக்கங்கள் தீர்த்திடும் உத்வேகமோ
தானாய் மலர்கிறதே...
அத்தனைக்கும் அவளே
முற்றுப்புள்ளி வைப்பாள்...

எண்ணங்களின் எழுத்தழகி
**அரூபா அஹ்லா**
கல்முனை



# தாமதம் தந்த பரிசு

**சஹ்னாஸ் பேகம்**
முதலைப்பாளி, புத்தளம்

அந்தி மாலை நேரம்.

பூந்தோட்ட மலர்கள் சில தன் வாழ்நாள் முடிந்தது என வாடி விழுந்து கொண்டிருந்தன.

எங்கிருந்தோ ஊதா நிறமான ஒரு மணிப்புறா (காட்டுப்புறா எனலாம்) வந்து, தோட்டத்தின் கல் பெஞ்சில் அமர்ந்தன.

வழக்கமாக அது வந்தமரும்போது அரிசியை தூவிவிடும் ஜாஸ்மின், இன்று உலகத்தை மறந்ததைப்போல் அமைதியாக இருந்தாள். அவளின் மௌனத்தை உணர்ந்த புறா, அருகே சென்று தலையை ஆட்டி கொர்கொர் என்று கத்தி அவளை திசை திருப்பி உணவுக்கு கொண்டு வந்தது.

அவள் திடுக்கிட்டு உணர்ச்சிக்கு வந்தவள்.

அதே சமயம்,

‘ஜாஸ்மின் ராத்தா… ஜாஸ்மின் ராத்தா…!’

என்று ஓடிவந்தாள் பத்தாம் வகுப்பில் படிக்கும் பர்சானா. அவளின் கூச்சல் கேட்டதும் அச்சமுற்ற புறா உடனே பறந்து சென்று மின்கம்பத்தின் கம்பியில் தன் இணையின் அருகில் அமர்ந்தது.

‘எதுக்கு இப்படி காலில் சுடுதண்ணீர் கொட்டிய மாதிரி கூச்சலோடு வாரே?…’

என்று கேட்டாள் ஜாஸ்மின்.

பர்சானாவோ தன் முட்டைக்கண்ணை உருட்டி,

‘உங்களுக்கு என்ன இப்போ ஆயிற்று? எதுக்கு இப்போது என்கிட்ட சண்டை? வாங்க, எனக்கு கணிதப் பாடம் சொல்லித்தாங்க!‘

என்று ஜாஸ்மினின் கையை இழுத்தாள்.

‘அட, அதான் உன் பர்ஹானா ராத்தா கெம்பஸ் லீவுல வந்திருக்காளே… அவள்கிட்ட கேட்டுப் படிச்சுக்கோ!’

என்றாள் ஜாஸ்மின்.

‘இப்போ எதுக்கு இவ்வளவு கோபமா இருக்கீங்க ராத்தா? வாங்கோ, போவோம்…’ என்று பர்சானா சொன்னதும்,

‘நான் வரல… நீ போ!’

என்றாள் ஜாஸ்மின், கல் பெஞ்சின் பக்கத்தில் இருந்த தூசியை தட்டி விட்டபடி.

‘வீட்டிலே சும்மாதானே இருந்தீங்க? இதை கழுவலாமே!’ என பர்சானா அமர்ந்தாள்.

‘நீ வந்துத் தூசி துடைக்கறதால்தான் நான் கழுவறதில்லை…’

என்று ஜாஸ்மின் நக்கலிட்டாள்.

‘சரி விடுங்க… நேத்து வந்த மாப்பிள்ளை வீட்டு காரங்க என்ன சொன்னாங்க?’

என்று கேலி கலந்தக் குரலில் கேட்டாள் பர்சானா.

‘வேணாம்னுதான்…’

என்று ஜாஸ்மின் மெதுவாக சொன்னபோது,

‘அதுதான்! பயப்புள்ள சோகமா இருக்கே!’

என்று பர்சானா நக்கலிட்டாள்.

ஜாஸ்மின் மௌனமானாள்.

பல வரன் வந்ததில் வந்துபோனாலும் முடிவில்லை.

ஆனால் நேற்று வந்தவர்கள் அவள் முன்னே ‘வேணாம்’ எனச் சொல்லிவிட்டு எழுந்துசென்றதை நினைத்தவளை வேதனை ஆட்கொண்டது.

‘ஏன் பிடிக்கலயாம்?’

என்று பர்சானா கேட்டதும்,

‘அது எதுக்கு… நீ போய் படி!’

என்று ஜாஸ்மின் முறுக்கினாள்.

‘சும்மா சும்மா எல்லோரும் படி படி என்று விரட்டாதிங்கோ!’

என்று பர்சானா புலம்பியவள், ஜாஸ்மினின் பக்கத்தில் உள்ள மா மரத்திலிருந்த ஊஞ்சலில் அமர்ந்தாள்.

அதே நேரம் பர்ஹானா உள்ளே வந்து,

‘அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ் மதுல்லாஹி வபரகாதுஹு’

என்று மென்மையாக ஜாஸ்மினின் தோளில் கை வைத்தாள்.

ஜாஸ்மின் மெதுவாக,

‘வஅலைக்கும் ஸ்ஸலாம் வரஹ் மதுல்லாஹி வபரகாதுஹு’

என்று பதில் கொடுத்தாள்.

‘என்னடி இப்படி டல்லா இருக்கிறாய்? உம்மா ஏதாவது சொன்னாங்களா?’

என்று முகத்தில் சிவந்த கண்களை கவனித்த பர்ஹானா கேட்டாள்.

'ஏய்... அழுதுட்டியா? கண் சிவந்து இருக்கு...'

ஜாஸ்மின் தலை குனிந்தாள்.

'பேசுவியா இல்லையா?' என்று பர்ஹானா கோபமாக கேட்டதும், ஜாஸ்மின் உடைந்து பேச ஆரம்பித்தாள்.

'பரு... நாங்க அல்லாஹ் சொன்னப்படி ஒரு ஆண்மகனை காண முடியாதா?

வருகிற ஆளாளும் சீதனம்... நகை... பணம்... காணி... வீடு... ஏதாவது ஒன்றை கேட்டு வர்றாங்க.

நேத்து வந்தவங்க... இந்த வீட்டையே கேட்டாங்களடி!

வாப்பா கேட்டாரு, 'அப்போ பாக்கி பிள்ளைகள் எங்கே போக?'ன்னு.

அதுக்குப்பின் அவர்களே,

'வீடு தருவிங்களா? இல்லனா வேண்டாம்!' ன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்களடி...'

பர்ஹானா அவளின் கையை பிடித்து,

'இப்போ அதுல உனக்கு என்ன சோகம்?' என்று மெதுவாக கேட்டாள்.

ஜாஸ்மின் குரல் நடுங்கியது.

'ராத்தா... அவங்களுக்கு உன்னை புடிச்சிருந்தா, வீட்டை கேட்டிருக்க மாட்டாங்க.

இப்போ நான் நினைத்தது போல வரன் வர இல்லைனா சீதனத்தை கொடுத்து திருமணத்தை முடிச்சு வைச்சுடுவாங்களோ ? என்று தான் பயமா இருக்கிறது என்றவள்.

எங்க மார்க்கத்துல சீதனம் ஹலால்னு போயிடுச்சு ... நம்ம சமூகத்துல அந்நிய கலாச்சாரம் தான் மேலோங்குது...'

பர்ஹானா ஜாஸ்மின்கண்ணீரை துடைத்து,

'ஜாஸ் ... நமக்கு புடிச்ச மாதிரி கிடைக்குறது கஷ்டம்.

ஆனா அல்லாஹ் நமக்கானதை தாமதப்படுத்துவான்.

தவறு நடக்காமல் இருக்கத்தான்.'

என்று ஆறுதல் கூறினாள்.

பல வாரங்கள் துஆவோடு கழிந்தது.

ஒரு மாலை, ஜாஸ்மின் தனியாக தோட்டத்தில் அமர்ந்திருந்தாள்.

'ஜாஸ்மின் ராத்தா... ஏ சோகமா?'

என்று கேட்ட பர்சானா...

'நான் சோகமில்லை... கனவு நினைவில் இருக்கே...'

என்றாள் ஜாஸ்மின்.

'நல்ல கனவா? கெட்ட கனவா?'

'எனைப் பொண்ணு பார்க்க வர்றதுபோல...'

'ஹா? இதெல்லாம் கனவா?' என்று பர்ஹானா சொல்வதற்குள்

பர்சானா ஓடிவந்து,

'ஜாஸ்மின் ராத்தா! பொண்ணு பார்க்க கார் வந்திருக்கு... அதிலும் சம்மதமாம்!'

என்று கூவினாள்.

அதே நேரத்தில் பர்ஹானா பர்சானாவின் கையை கிள்ளி விட்டாள் .

'ஏய்! இப்போ ஏன் கிள்ளுறே?'

அவர்களின் பேசுகையில் கார் வந்து நின்றது.

ஜாஸ்மினின் முகத்தில் ஒரு ஒளி நம்பிக்கையின் ஒளி மின்னியது.

பர்சானா கூவினாள்:

'கார் வந்திருக்கு!'

ஜாஸ்மின் காரை பார்க்காமலே அதன் இலக்கத்தை சொன்னாள்.

பர்சானா ஆச்சரியமாக அவளையே பார்த்தாள்.

உள்ளே பேச்சுவார்த்தை ஆரம்பித்தது.

அங்கு வந்தவர்கள் சொன்னது

'உங்க புள்ளைய எங்களுக்கு ரொம்ப புடிச்சிருக்கே.

எங்களுக்கு எந்த சீதனமும் வேணாம்.

மனசு சம்மதிச்சாச்சு… அதனால்தான் வந்தோம்.'

இந்த வார்த்தை கேட்ட ஜாஸ்மினின் கண்களில் எண்ணங்கள் தேங்கி நின்றன.

பர்ஹானா மெதுவாக,

'இதுதான் உன் கனவு டி…'

ஜாஸ்மின் மெதுவாக புன்னகைத்தாள்.

பர்சானாவோ கூவினாள்:

'ஜாஸ்மின் ராத்தாவை ராஜகுமாரன் தேடி வந்தாச்சு!'

தாய் சபானாவும், தந்தை ஆசிம் அவர்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

தம் பிள்ளைக்கு நல் துணை கிடைத்ததைக் கண்டு அவர்களின் மனம் நிறைந்ததில் அல்ஹம்துலில்லாஹ்.

இந்த ஊரும் உறவும் ஒரு விடயத்தை கேட்டு கேட்டே நம்ம நிலையை மோசமாக்கி போடுவாங்க இதனாலையே நாங்களும் தவறா முடிவெடுப்போம்.

நானும் என் பிள்ளைக்கு இந்த வீட்டைக் கொடுத்தாச்சு திருமணத்தை முடிச்சு வைக்க நினைத்தேன்.

தாமதிப்பும் நலவிற்கு தான் என்று அல்லாஹ் உணர்த்திட்டான். என் மகள் நம்பிக்கை வீண்போகவில்லை என்று மனையாளிடம் சொன்னவர் சந்தோசத்தை நன்றியாக்க பள்ளிவாசலை நோக்கி புறப்பட்டார்.

'ஜாஸ்மினும் மனம் விரும்பிய வாழ்க்கை கிடைத்த மகிழ்வில் இரண்டு ரகாத் சுன்னத் தொழுதிட தக்பீரைக்கட்டினாள்…

மகள் விருப்பத்தால் அவள் தன் வயதையும் இளமையையும் கடத்துவதாக புலம்பிக்கொண்டிருந்த சபானா இன்றைய நாள் கொடுத்த இறைவனின் அருளை நினைத்து நம்பியவரை இறைவன் கைவிடுவதில்லை என்று இறைவனை புகழ்ந்துக்கொண்டிருந்தார்.

**எண்ணம் உறுதியானால் ,**
**நம்பிக்கையோடு கேட்டு பார் …**
**கேட்பது நம் கடமை ,**
**கொடுப்பது அவன் திறமை ….**

# புரிதல்



புரிதல்
என்பது
நிகழ்ந்து விட்டால்
புரிந்து விடும் வாழ்க்கையின்
நிகழ்வுகள்..
மனதும் நெஞ்சும்
நேர்க்கோட்டில் செல்ல….
வேறென்ன வேண்டும்
புதிதாய் தேடிச் செல்ல…

**கவிமணி இரஜகை நிலவன்**
மும்பை

# ஈரம்

**தங்க. ஆரோக்கியதாசன்**

ஊருக்கு ஒதுக்குப்புறமா இருந்த குப்பை மேட்டில் அவள் குப்பையோடு குப்பையாக நாத்தத்தோடு நாத்தமா குப்பைகளை கிளறி அதில் இருந்து கிடைத்ததை எல்லாம் தோளில் மாட்டி இருந்த கோணிப் பையில் போட்டுக் கொண்டாள்; இவளோடு போட்டிப் போடும் பன்றிகளையும், குரைக்கும் நாய்களையும் கையில் இருந்த கம்பால் விரட்டி அடித்து குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தாள்.

கார்ப்பரேசனில் இருந்து யாராவது சூப்பர்வைசர்கள் வருகிறார்களா என்ற பயத்தோடு அடிக்கடி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே கிடைத்ததை எடுத்து பையில் போட்டுக் கொண்டாள். ஒரு இடத்தில் காகிதங்களும், அட்டைப் பெட்டிகளும், குவிந்து கிடப்பதைப் பார்த்து அவளுக்கு ரொம்ப சந்தோசம். இன்னைக்கு நல்ல வேட்டை என்று மனசுக்குள்ளே சந்தோசப்பட்டுக் கொண்டாள். எப்போதாவது ஒரு சில நாட்களில் தான் இப்படிக் கிடைக்கும். வேறு யாராவது வந்து எடுப்பதற்குள் அவைகளை வேகமாக அள்ளி அள்ளி கோணிப் பையில் திணித்துக் கொண்டாள். நடு நடுவே சில பிளாஸ்ட்டிக் பைகளும் இருந்தன. அவற்றையும் அள்ளி கோணியில் நிரப்பிக் கொண்டாள்.

நல்ல வேளை இவளுக்குப் போட்டியாக அப்போது யாரும் வரல. இரண்டுப் பெரிய கோணிப்பைகள் நிறைய காகித குப்பைகளையும், பிளாஸ்ட்டிக் கழிவுகளையும், அட்டைப் பெட்டிகளையும் தூக்க முடியாத அளவுக்கு சுமந்துக் கொண்டு பழைய பேப்பர் கடைக்கு வந்து பார்த்தப் போது கடை மூடி இருப்பதைப் பார்த்து ஏமாற்றத்தோடு அந்த இரண்டு மூட்டைகளையும் சுமந்துக் கொண்டு குடிசைக்கு வந்தாள்.

மே மாத உச்சி வெயில் வெக்கையை வாரி இறைத்துக் கொண்டிருந்தது. சோர்வால் அப்படியே சுருண்டு படுத்து தூங்கி விட்டாள். வழக்கமாக வரும் தெரு நாய் குடிசைக்குள் வந்து ஏதாவது போடுவாள் என்று இவளை மோந்துப் பார்த்தது, எதுவும் போடாததால் பரிதாபமாக அவளைப் பார்த்துவிட்டு அங்கிருந்து ஓடி விட்டது.

தூங்கி எழுந்தவள், பழையது இருக்கும் சோத்துப் பானையில் தண்ணீர் ஊற்றி உப்புப் போட்டு கலக்கி வயிறு முட்ட குடித்து, மீதி இருந்த சோற்றுப் பருக்கையில்; தண்ணீரை ஊற்றி ராத்திரிக்கு வைத்தாள். சும்மா இருக்கும் நேரத்தில் கோணியில் இருந்த குப்பைகளை தனித் தனியா பிரித்து வைத்தாள். நாளைக்கு கடைத் திறந்தவுடன் போடுவதற்கு வசதியாக இருக்கும் என நினைத்து கோணியில் இருக்கும் குப்பைகளை கொட்டிப் பிரித்தாள்.

காகிதத்தைத் தனியாகவும், அட்டைகளை தனியாகவும், பிளாஸ்ட்டிக்கை தனியாகவும் பிரித்து அடுக்கும் போது, ஒரு பிளாஸ்டடிக் பையில் இருந்து பேப்பரில் சுத்தப் பட்ட கனமான பொட்டலம் ஒன்று பொத்தென்று விழுந்தது. எடுத்து பிரித்துப் பார்த்தவளுக்கு தலை சுற்றியது. அதில் ஐநூறு ரூபாய் நோட்டுக் கட்டுக்கள் ஐந்து இருந்தது. அதை திருப்பி திருப்பி பார்த்த அவளுக்கு குப்பென்று வியர்த்து விட்டது.

என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்த அவள் அந்த ரூபாய்க் கட்டுக்களை அப்படியே அந்த பேப்பரில் சுற்றி பிளஸ்ட்டிக் பையில் வைத்து குடிசையின் கூரையில் சொருகி வைத்தாள். இவ்வளவுப் பணத்தை அவள் பார்த்ததே இல்லை. அந்தப் பணம் மொத்தமாய்



எவ்வளவு என்று எண்ணிப் பார்க்கத் தெரியாமல் பயத்தில் தலை சுற்றி கைகால் உதறல் எடுத்ததால் படபடப்பில் அப்படியேச் சுவரில் சாய்ந்து விட்டாள்.

இதைப் பற்றி யாரிடமாவது சொல்லலாமா? என்று நினைத்தாள். யாரிடம் சொல்வது? யோசித்தாள். மீனாட்சி அக்கா கிட்டப் போய் சொல்லலாமா? சொன்னால் அவள் புருஷன் பொல்லாதப் போக்கிரி மொத்தத்தையும் பிடிங்கினு போயி சீட்டாடியே அழிச்சிடுவான். வேண்டாம் என்று நினைத்தவளுக்கு அவள் புருஷன் ஞாபகம் வந்தது. எப்போவாவது இவ ஞாபகம் எடுத்தா இங்கு வந்துட்டுப் போவான். அதுக்கிட்ட சொல்லலாமுனு பார்த்தா, அவன எங்கப் போயி தேடுறது? அப்படியே வந்தாலும் பணத்த எடுத்துனு போயி அவனும் குடிச்சே அழிச்சிடுவான், ச்சீ.... என்ன நெனப்பு இது ... யாரு பணத்த யாரு உரிமக் கொண்டாடுறது.

மனசு ஒரு நெலைல இல்லாம தள்ளாடி தவிச்சி, என்ன செய்றதுனு தெரியாம குடிசையில் விளக்கேத்தவும் மனசில்லாம அப்படியே உறைந்து விட்டாள். 'ஏய் ஈசுவரி வெளக்கேத்தாம இருட்டுல என்ன பன்றேடி' மீனாட்சியின் குரலைக் கேட்டு தன் னிலைக்கு வந்தாள். வத்திப் பெட்டியத் தேடி எடுத்து விளக்கேத்தினாள். 'என்னடி பேய் அறைஞ்ச மாதிரி இருக்க' 'ஒன்னுமில்லேக்கா' என்று சொன்னவள் பண விசியத்தை சொல்லி விடலாமா என்று வாய்வரை வந்த வார்த்தையை வெளியே விடாமல் அப்படியே முழுங்கிட்டு, 'குப்பை எடுக்க வெயில்ல போயிட்டு வந்தேன். கிறு கிறுன்னு வந்ததால படுத்துட்டேன்' என்று சமாளித்தாள்.

'இன்னாக்கா, இன்னாத்துக்கு வந்தே' 'ஒன்னுமில்லே குப்பைக்குப் போயி வந்தியே துட்டு ஏதாவது இருந்தா குடு, தறேன்' 'அய்யோ எதுவுமே இல்லக்கா, கடைக்கு போயி குப்பைய போடலாமுன்னு போனேன், கட சாத்தியிருந்தது. நாளைக்குத் தான் போடனும்' என்றாள்.

'அடப்பாவிங்களா இன்னிக்கே மூடிட்டாங்களா, பாழாப் போச்சி, உனக்கு விசியம் தெரியாதா? நாளைக்கும் கடயத் தொறக்க மாட்டாங்க.' என்றாள் மீனாட்சி 'இன்னாக்கா சொலற?' 'ஏதோ கொரோனா தொத்து நோய்ப் பரவுதாம். அதால, எல்லாரையும் ஊட்ல இருக்க சொல்லிட்டாங்க, அதான்டி பந்துனு சொல்லுவாங்களே அது' 'அய்யோ, அப்ப நாளைக்கும் நம்ப பொழப்பு போச்சா' 'ஆமா ஈசு' 'இப்போ இன்னாக்கா பன்றதுல்' 'ஒன்னும் பண்ண முடியாது விதி விட்ட வழி, சரி நான் வறேன்.' அவள் போய் விட்டாள்.

ஈசுவரிக்கு மூச்சி முட்டியது, இந்த பணத்த என்ன பன்றது. திடீர்னு யாராவது வந்து கேட்பாங்களா? இல்ல இங்கிருந்து எடுத்துனு ஓடிடுவாங்களா? இல்ல எப்பவும் வராத புருசங்காரன் வந்து ஏதுடி இவ்வளவு



பணமுன்னு கேப்பானா? அய்யோக் கடவுளே கஞ்சி குடிச்சோமோ இல்லையோ நிம்மதியா துங்கினோம். இப்ப என்னடானா, மனசு திக் திக்குனு இருக்கே, என்று தவியாய் தவித்து, மனசு ஒரு நிலைக் கொள்ளாமல் அப்படியேக் கிடந்தாள்.

அய்யையோ, இந்த பொழப்பு நமக்கு வெணாம்பா, விடிஞ்ச உடனே மொத வேளையா பொலீஸ் ஸ்டேசனுக்குப் போயி, இந்தப் பணம் குப்பையிலே இருந்ததுனு சொல்லி குடுத்துடனும். அப்பதான் மனசு நிம்மதியடையும், என்று நினைத்துக் கொண்டே அந்த இரவை தூங்காமல் கழித்தாள்.

விடிந்த உடன் கூரையில் வைத்திருந்த பணப்பையை எடுத்துப் பார்த்தாள். கட்டுகளை ஒரு முறை எண்ணிப் பார்த்தாள். ஐந்து கட்டு சரியாக இருந்தது. பணக் கட்டோடு வெளியே வரும்போது அவள் புருசன் இவளைப் பார்க்க வந்துக் கொண்டிருப்பதைப் பார்த்து அப்படியே உள்ளே போய் அவனுக்குத் தெரியாமல் கூரையில் சொருகி வைத்து விட்டு அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

‘இன்னாம்மே ஈசு எப்படி கீற, இன்னா நல்ல வேட்டையா, ரெண்டு கோணிப் புல்லா சரக்கா, இருக்கட்டும், மொதல்ல துட்டு குடு கடைய சாத்திடுவானுங்க சரக்கு இல்லாம நம்மால இருக்க முடியாது, ஏதோ கொரேனாவாம். எல்லா கடையும் பந்து பண்ணிட்டாங்க, பிளாக்ல தான் சரக்கு வாங்கனும் கையில துட்டு கம்மியா கீது அதுக்கோசரம் தான் வந்தேன் குடும்மே’ என்று அந்தக் குடிசையில் அவள் வழக்கமாக துட்டு ஒளித்து வைத்திருக்கும் இடங்களில் தேட ஆரம்பிச்சான்.

பதறிப் போன ஈசுவரி, இதோ பார்யா, சோத்துக்கே வழியில்லாம நேத்து முழுக்க பட்டினியாலே செத்தேன். பொறுக்குன குப்பையக் கடைக்கு போட வழியில்லாம இருக்கேன். நீ ஆம்பல தானே, கட்டிக்கின எனக்கு கஞ்சி ஊத்தாம எங்கேயோ போய் குடிச்சிட்டு; இப்ப குடிக்க துட்டு கேக்கிறியே வெக்கமா இல்லை. போய்யா, போய் நாலு காசு சம்பாதிச்சினு வா அப்பத்தான் உனக்கு இந்த குடிசைல இடம் என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொதே அவன் அவளை அடித்தான்.

வலி பொறுக்க முடியாத அவள் அவனை தாறுமாறாகத் திட்ட, அவனும் பதிலுக்கு அவளை இழுத்துப் போட்டு குடி வெறியில் அடித்து விட்டு கத்திக்கொண்டே அங்கிருந்து போய் விட்டான். அவனை விரட்டி விட்ட சந்தோசத்தில் அவன் அடித்த வலியையும் பொருட்படுத்தாமல் அப்படியே உட்கார்ந்து விட்டாள். இப்போ அந்த பணத்தை என்ன செய்வது என்ற கவலை அவளை பாரமாய் அழுத்தியது.

அய்யோ பாவம் இது யாருடைய பணமோ, இந்த பணத்தை போலிசிடம் குடுத்தால் ஒரு வேளை அவங்களே பிரிச்சி எடுத்துக்னா என்ன செய்வது? இந்தக் காலத்தில் ஒருத்தரையும் நம்ப முழயாதே, பாவம், பணத்தைத் தொலைத்தவர்கள் என்ன பாடு படுகிறார்களோ? என்று யோசித்தாள். பணத்தை தொலைத்தவர்களுக்காக இரக்கப் பட்டாள்.

ராத்திரி எதுவும் சாப்பிடாததால் பசி வயிற்றை கிள்ளியது. கஞ்சிப் பானையைப் பார்த்தாள். கொஞ்சமா இருந்த கஞ்சித் தண்ணியில் எலி ஒன்று செத்துக் கிடந்தது. அதை அப்படியே வெளியே ஊற்றி விட்டு, பசியால் காதடைந்து உட்கார்ந்து விட்டாள். மடியில் கட்டுக் கட்டாக பணம். ஆனால் அந்தப் பணத்தால் பசியப் போக்க முடியலையே.? என்று அவள் மனம் அங்கலாய்த்தது.

எழுந்து விறு விறுனு நடந்து அந்தக் குப்பை மேட்டையும் கடந்து ஊருக்குள் போனாள். பசி காதை அடைத்தது. கோடை வெயில் சுறுசுறுப்பாய் உச்சிக்கு போய்க் கொண்டிருந்தது. கண் இருட்டினு வந்தது. சமாளித்து ஒரு வீட்டின் முன் நின்றாள். அம்மா...அம்மா... வற்றிய குரலில் ஈன

ஸ்வரத்தில் கூப்பிட்டாள். பதில் இல்லை. மறுபடியும் கூப்பிட்டாள். மெல்ல கதவைத் தட்டிக் கூப்பிட்டாள் . உள்ளே இருந்து ஒரு பெண் எட்டிப் பார்த்தாள்.

'விடிஞ்சா போதும் வந்துடுவீங்களே, குத்துக் கல்லாட்டம் உடம்ப வச்சிகினு பிச்ச எடுக்கிறீங்களே வெக்கமா இல்ல, இங்க என்ன குடுத்தா வச்சிருக்கீங்க. வரவங்களுக்கெல்லாம் போடறத்துக்கு, போ...போ...' என்று நாயை விரட்டுவதைப் போல் விரட்டினாள்.

அவமானத்தோடு கூனிக் குறுகி நடந்தாள். இன்னும் ரெண்டு தெரு தள்ளிப் போய்க் கேட்டுப் பார்த்தாள் அங்கும் ஒன்றும் கிடைக்காததால் திரும்பி வந்தாள், பசி ஒரு பக்கம், அவமானம் ஒரு பக்கம், பணத்தால் வந்த பயம் ஒரு பக்கம். எப்படியோ தட்டுத் தடுமாறி நடந்து குடிசைக்கு வந்துக் கொண்டிருக்கும் போது, வழியில் ஐந்தாறு பேர் அந்தக் குப்பை மேட்டைக் கிளறிக் கொண்டிருந்தனர். அதில் அவளை விரட்டிய அந்தப் பெண்ணும் குப்பைகளை கிளறி எதையோ தேடிக் கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்த அவளுக்கு பக் கென்றிருந்தது. உடம்பெல்லாம் குப்பென்று வியர்த்தது. எப்படியோ சமாளித்து, அந்தப் பெண்ணிடம் 'என்ன தேடுறீங்க என்றாள். அந்தப் பெண் கண்ணீருடன் அழுதுக் கொண்டே ரெண்டரை லட்ச ரூபாய் ஒரு கவர்ல சுத்தி பிலாஸ்டடிக் பையிலே வெச்சிருந்தேன். காணல, நேத்து வீட்ட சுத்தப்படுத்தி குப்பைய வாரினு வந்து போட்டேன். ஒரு வேள குப்பையோடு குப்பையா போயிரிச்சோனு தேடுறோம் என்றாள்.

'அம்மா, கொஞ்சம் எங்கூட வறீங்களா?' 'ஏன் எதற்கு?' 'வாங்கம்மா சொல்றேன்' என்று நடந்தாள். இருவரும் குடிசைக்கு வந்தவுடன், கூரையில் சொருகி வைத்திருந்த ரூபாய் கட்டுக்களை அவளிடம் கொடுத்தாள். 'அய்யோ இது தான்.....' என்று அவள் கையில் இருந்து பிடுங்காத குறையா வாங்கி கட்டுக்களை சரிப் பார்த்து பத்திரப் படுத்திக் கொண்டு அவளை ஒரு மாதிரியா பார்த்தாள்.

'நேத்து குப்ப மேட்டுல குப்பைய எடுக்கும் போது காகிதத்தோடு காகிதமா பிளாஸ்ட்டிக் பையிலே இது இருந்தது. எனக்கு அப்போ இதுல பணம் இருக்குனு தெரியாது. குப்பைகளை தனித் தனியா பிரிக்கும் போது தான் பார்த்தேன், யாருடைய பணமுனு தெரியாம என்ன பன்றதுனும் புரியாம, போலிசிடம் குடுக்களாமுனு நெனச்சேன். பயந்துப் போய் அப்படியே வெச்சிட்டேன். இந்த பணத்தால ராத்திரி முழுக்க தூங்காம ரொம்ப கஷ்ட்டப் பட்டுட்டேன். உங்களதுனு தெரிஞ்சப் பிறகுதான் மனசு நிம்மதியாச்சி.' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்தப் பெண் பணத்துடன் அங்கிருந்து போய் விட்டாள்.

நெஞ்சு பட..படக்க பசியோடு அந்தக் குடிசையில் அவள் அப்படியேச் சுருண்டு படுத்துக் கொண்டாள். எவ்வளவு நேரமாக அவள் அப்படி இருந்தாளோ தெரியாது, பணத்தோடு போன அந்தப் பெண் தட்டு நிறைய சோறும், சில ரூபாய் நோட்டுக்களோடு வந்து அவளை தட்டி எழுப்பினாள், ஈஸ்வரி எழவே இல்லை.

இறந்து விட்ட ஈஸ்வரியைப் பார்த்து அந்தப் பெண் துனுக்குற்றாள். கையில் இருந்த சோற்றுத் தட்டு அப்படியே நழுவி கீழே விழுந்து சோறும் குழம்பும் எல்லா இடத்திலும் சிதறியது. வெளியில் இருந்து குடிசைக்குள் ஓடி வந்த நாய் அந்தச் சோற்றை மோந்துப் பார்த்து விட்டு ஈஸ்வரியின் அருகில் போய் படுத்துக் கொண்டது. அதைப் பார்த்த அந்தப் பெண் துக்கத்தில் ஓ..வென்று கதறி அழுதாள். அழுகைக்கு நடுவே அன்று காலை பிச்சைக் கேட்டு வந்த ஈஸ்வரியை விரட்டி அடித்த சம்பவம்; அவள் மனதில் திரும்ப திரும்ப வந்து போனது. மனிதத் தன்மை இல்லாமல் அவளை விரட்டி அடித்த தன் செயலுக்காய் அவள் இன்னும் அழுதாள்.

# கன்னியே நீ வரக் காத்திருந்தேன்



கம்மாக் கரையோரம் காத்திருக்கேன் ஒனக்காக
கொலுசுச் சத்தம் செவியோரம் கேட்குதே
உள்ளுக்குள்ள மத்தாளம் கேட்குதடி செல்லமே
சமஞ்ச பொண்ணு வருகையிலே வசந்தந்தானே
பாவாடை தாவணி போட்ட சிட்டு
என்னத்தான் தெனந்தோறும் போறியே தொட்டு
கண்ணெல்லாம் ஒம்மேலதான் புரியலியா ஒனக்குத்தானே
தனியாத்தான் நானிருக்கேன் ஓடித்தான் வந்தாலென்ன
ஆசைத் தீரப் பேசிடடி அத்தமகளே
மாமன் மனசு மையல் கொள்ளுதடி
கன்னியே நீ வரக் காத்திருந்தேன்
கருப்பசாமி கோவிலுக்கு வந்திருக்கேன் நான்தானே
காலமெல்லாம் ஒன்கூட வாழத்தான் வேண்டிக்கிட்டேன்
கல்யாணச் சேதி சொல்லிடு அன்னமே
தாலியொண்ணு கழுத்துல கட்டுறேன் கண்ணே...

**பெ.வெங்கட லட்சுமி காந்தன்.**
விருதுநகர்

# தன்முனைத் தாரகை

என்னைக் கவர்ந்த
சின்னக் கவிதை
உள்ளம் நிறைந்து
உவகைத் தந்தது

தன்முனைக் கவிதை என்ற
நாலு வரிக் கவிதை
உள்ளத்தை கொள்ளளையடிக்குது
நாலுவரியில் உலகைக் காட்டுது

வார்த்தை சிக்கனம்
வடிவாய்த் தந்தது
வானத்தை சுருக்கி
வாகாய்த் தருது

வறுமையின் அவலத்தை
சாதியக் கொடுமையை
அடிமையின் வலியை
ஆற்றாமையாய்ச் சொல்லுது

வார்த்தைச் சிக்கனத்தில்
சிக்கலை எடுக்குது
வாழ்க்கைப் படகுக்கு
துடுப்பாய் இருக்குது

சமூக அவலத்தை
சல்லடைப் போட்டு சலிக்குது
சன்மார்க்க நெறியையும்
சட்டுனு சொல்லுது

விதைக்குள் விருட்சமாய்
கவிதைக்குள் கரு இருக்குது
தன்முனைக் கவிதை இது
தரணியை இழுக்குது

தேனாய் இனிக்குது
சுவைக்க தெவிட்டாமல் இருக்குது
மன மயக்கத்தை கலைக்கும்
அரு மருந்தாய் இருக்குது

பனைமர உயரத்தை
பனித்துளி காட்டுது
வாழ்க்கையின் தத்துவத்தை
தன்முனைக் கவிதை பேசுது.



**தங்க.ஆரோக்கியதாசன்**

# பெண்ணைத் தாங்கும் உலகம் வேண்டும்

இறைவன் படைப்பில்
உன்னதம் சேர்க்க
இகத்தின் உயிர்ப்பில்
உயர்ந்தவன் மனிதன்

மானிடம் தழைக்க
மண்ணிலே தவழும்
மங்கையின் மகிமை
போற்றிடல் சிறப்பே

தாயாய் தாரமாய்
தங்கையாய் கன்னியாய்
மாமியாய் மகளாய்
அவதாரம் தாங்குபவள்

பேதமைப் போர்த்தி
பெற்றவள் அவளை
இல்லத்தில் இருத்தி
இன்பம் கொண்டதோ

இருண்ட காலம்
இதுவென நினைக்க
பாரதியின் வரிகள்
பக்குவமாய்ப் படித்தேன்

அடக்கி முடக்கி
அறிவைப் புதைத்து
அறியாமைத் தீயில்
அமிழ்த்தியது போதும்
உரிமைக் குரல்கள்
உலகமெங்கும் முழங்க
உயர்ந்தது பெண்ணியம்
சமத்துவம் பேசிடவே

மாற்றங்கள் இல்லை
மாசுகள் நிறைந்த
மானிட உள்ளத்தில்
தூசுகள் பெருகி

ஆதிக்க வலைகளோடு
ஆண்களின் ஆட்டம்
ஆகாயம் தாண்டும்
ஆபாச மோகம்

நம்பிக்கை நங்கையின்
நடையினைத் தொடர்ந்தே
நாளெல்லாம் தயக்கம்
நாமாக வாழ்ந்திட

உரிமை கொடுக்க
உணர்வுகள் வேண்டும்
உலகில் அவளும்
உதயமாய் வளர

பெண்ணியம் போற்றி
பெருமை கொண்டு
பெயர்கள் அழிய
பேராசை இல்லை
பெண்மை உணர்வதை
பெயர்த்து விளங்கிட
பெரியதோர் மனது
சமூகத்தில் வேண்டும்

விருப்பும் வெறுப்பும்
அவளுக்கும் உண்டென
வியப்பின்றி விடுதலை
பண்பாட்டில் பொங்கிட

பூமியில் நதியாய்
பயணங்கள் தொடர
பூரிப்பில் பூவாய்
மலர்ந்திடல் அழகு

பால்யங்கள் ஒழிக்கும்
வதைகள் தொடர்தல்
பாரின் கண்களில்
ஊனமே ஊற்று

பள்ளி நினைவில்
பறக்கும் பட்டாம்பூச்சி
சிறகொடியும் அவலம்
வீதியிலே அம்பலம்

ஆன்மாவின் அடங்கல்கள்
அவளுக்குள் இருட்டறை
எதிர்கால வாழ்வுக்கு
பதித்திட்ட முத்திரை

வியாபாரம் விளம்பரம்
வீதியிலே விளம்பரம்
ஆபாசம் கக்கும்
ஆடையால் அம்பலம்

அதிகாரம் ஆணவம்
அவமதிப்பு மறைந்து
கண்ணே என்று
தாங்கட்டும் வையகம்

**சேஹு மொஹம்மது**
**பெனாஸிரா**
முஸ்லிம் ஹல்மில்லாவ



உயரம்தான்
நேற்று வரை
எந்த நேற்றென்று தெரியவில்லை.

நிமிர்ந்து நடந்ததில்லை
நடக்கவும் முடியவில்லை
நன்னடத்தையில் நடந்து,
அறிவுரைக் கூறியது
எல்லாம் பித்த நிலையில்தான்.

பிராந்தி புட்டியை
அலுங்காமல் எடுக்க முடியவில்லை.
கண்ணாடியை எத்தனை
முறைத் துடைத்தும்
அத்தனை முறையும்
மங்களாகவே தெரிகிறது.

செய்தித்தாளின் எழுத்தெல்லாம்
கல்வெட்டாக சிதலமடைந்து
வரலாற்றின் என்பக்கம்
கிழிக்கப்படுகிறது.

அந்த நாற்காலிதான்
இருக்கை
படுக்கையெல்லாம்
உரையாடலும்
அதனுடன்தான்.

ம்ம்ம்....
மறக்காமல் நினைவில்
தொக்கிக்கொண்டு இருக்கிறது.
புத்தகம் ஒன்றும்
எழுதுகோலொன்றும் இன்னமும்.
எந்த பக்கம் என்று தெரியாது
எத்தனை முறை வாசித்தேன்
என்றும் தெரியாது
அத்தனை முறை வாசித்தும்
அதனை முழுமையாக
முடிக்கவில்லை.

இன்னும் எவ்வளவு காலம்
இப்படியே போகும்?
என் காலம் போகும் வரை
இப்படியே போகும்
அது மட்டுமல்ல
நினைவு இருக்கு பிரக்ஞை
முழுவதும்.

# மனஅழுத்தம் (அழுத்தம்)



பலராலும் உச்சரிக்கப்படும் வார்த்தை யாக இருக்கும் இந்த 'அழுத்தம்' எதைக் குறிக்கிறது. அழுத்தம் கொடுத்தால் ஏதோ ஒன்று நடக்கிறது. அது நன்மையா தீமையா என்பது கொடுக்கும் நாம் கொடுக்கும் அழுத்தத்தைப் பொருத்தது எனக் கேள்விப் பட்டுள்ளோம். அழுத்தம் என்ற வார்த்தை வாழ்க்கையில் எப்படியெல்லாம் விளையாடுகிறது எனப் பார்க்கலாமா? முதலில் மன அழுத்தம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாக இருக்கிறது. நல்லதோ கெட்டதோ எதையும் ஆழமாக மனது வரை கொண்டு சென்று அங்கு பதியமிட விடக்கூடாது. வேரூன்றி விட்டால் விபரீதம் வந்து விடும். அழுத்தம் 'ஒரு சக்தி' என்ற வகையில் தான். அதெல்லாம் இன்று மன அழுத்தம் மானுடத்தை எப்படியெல்லாம் சிக்கலில் மாட்டிவிட்டுள்ளது என்று பார்க்கும்போது எதிர்காலம் பற்றிய பயம் வருகிறது.

மன அழுத்தம் நோயா என்றால் இல்லை, ஆனால் பல நோய்களை உருவாக்கும் சக்தி கொண்டது. மனம் விட்டு பேச வேண்டும் என்று ஏன் சொன்னார்கள்? தனித்து விடப்பட்டதாக நிலை வரக் கூடாது. எதையும் சமாளிக்கலாம் என்ற நம்பிக்கையை, எண்ணத்தை நாம் நமக்குள் விதைக்க வேண்டும். நம்மால் முடியா விட்டால் யாரால் முடியும்? என்ற மேலாண்மை நமக்குள் வேண்டும். எதையும் நம் கட்டுப்பாட்டில் இருக்கும்படி வைத்துக் கொள்ள வேண்டும். புறக் கட்டுப்பாட்டில் புத்தி சென்று விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் நமக்குள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எதிர்பாராத இழப்புகள், உறவுகள் நட்புகள் பிரிவுகள், பழகியவர்களின் இடமாற்றங்கள், சமயங்களில் மனதைப் பாதிக்கலாம். கவனத்தை அதிலிருந்து மாற்றிக்கொள்ள வேறொன்றில் கவனத்தை முழுமையாக செலுத்த வேண்டும். பெரியவர்களுக்கு மன அழுத்தம் வர ஆயிரம் காரணங்கள் இன்று உண்டு. அத்தனைக்கும் மூலம் 'புரிதல் இல்லாதது மட்டும் தான்' சகிப்புத் தன்மையில்லாத அணுகுமுறையில் தவறிழைத்து விட்டு பொறுப்புகளை உணராது போட்டி மனப்பான்மையோடு செயல்புரிவது மன அழுத்தத்தைத் தருகிறது.

எரிச்சல் கோபம், தேவையற்ற வார்த்தை களை உதிர்த்தல், மரியாதை இல்லாது நடத்தல் போன்றவை மன அழுத்தத்தைப் பெரிதாக்குகின்றன. அன்பான அணுகு முறையும் அனுபவ வெளிப்பாடும் நேர் மறை சிந்தனையும் இருந்தால் மன அழுத்தம் வர வாய்ப்பில்லை. 'தேவையில்லாத பயம், தெளிவில்லாத மனதின் கண்ணோட்டங்கள், பொறாமை' போன்றவைகள் நம்மை விட்டு அகல மன அழுத்தமும் சேர்ந்தே சென்று விடும்.

குழந்தைகளுக்கோ சிறியவர்களுக்கோ மன அழுத்தம் வந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் . 'குழந்தைகளுடன் பெற்றோர்கள் அவர்களுக்குச் சமமாக உட்கார்ந்து, அவர்களுக்கு இணையாக பேசி விளையாடி மகிழ்வூட்ட வேண்டும்.'

சொல்லத் தெரியாத வயதில் குழந்தைகளுக்கு மன அழுத்தம் வந்து விட்டால், பெற்றோர்கள் நிலைமை வருத்தத்திற்கு உள்ளாகி விடும். சில வார்த்தைகள் மிக எளிதாக மனதைக் காயப்படுத்தி விடும். குழந்தைகளை எப்போதும் தனியாக இருக்க விடக் கூடாது. 'முன்பெல்லாம் வீட்டுக்கு நான்கு குழந்தைகளாவது இருக்கும். குழந்தைகள் ஒன்றோடு ஒன்றாக விளையாடும். கதை பேசும். பெற்றவர்கள் அவர்களுக்குரிய வேலைகளைச் செய்வார்கள்'. ஆனால் இன்று குதிரைக் கொம்பு போல ஒரு குழந்தையுடன் நின்று விடுவதால் 'இயற்கையிலேயே தனிமையை நாம் குழந்தைகளுக்கு பரிசாக கொடுத்து விட்டோம்'. நமக்குரிய வேலையை நாம் செய்தால் தான் வருமானம், என்பதால் குழந்தைகளை சரியாக கவனிக்காது விடுகின்றோம்.

தெரிந்தோ தெரியாமலோ வேறு வழி யில்லாமலோ குழந்தைகளுடன் நேரம் ஒதுக்க முடியாமல் வாழ்கின்றோம். இந்த நிலைமைகள் குழந்தைகளை மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. 'குழந்தைகள் மனதில் எந்த தாக்கமும் வரவிடக்கூடாது'. தவறுகள் நடப்பது மனித இயல்பு. அப்படியிருக்க குழந்தை களை மோசமாக திட்டவோ தண்டிக்கவோ கூடாது . நேர்மறை உணர்வோடு அவர்கள் மனம் பாதிக்காதவாறு எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்கு அனுபவம் அவசிய மாகிறது. ஆனால் 'இன்றைய இளம் பெற்றோர்களுக்கு அனுபவம் என்பது எள்ளளவும் இருப்பதில்லை. பதட்டம் படபடப்பு இவைகளைத்தவிர இளம் பெற்றோருக்கு எதுவும் தெரிவதில்லை. விளைவு குழந்தை மட்டுமின்றி பெற்றவர்களும் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர்.

குழந்தைகளோ, சிறுவர்களோ, பெரியவர் களோ மன அழுத்தத்தில் விழுந்து விட்டால் அவர்களின் சுவாசம் சரியான முறையில் இருப்பதில்லை. தலைசுற்றல், தூக்கமின்மை அசதி போன்றவைகள் தலை தூக்கும். 'நேரத்திற்கு உண்பதும் நேரத்திற்கு உறங்குவதும் மிகமிக முக்கியமான ஒன்றாகும்'. முக்கியமாக 'நீ இப்படி வர வேண்டும் அப்படி வர வேண்டும் என உங்களது கற்பனையை, கனவை குழந்தைகள் மீது திணிக்கக் கூடாது'. உன்னால் தான் முடியவில்லை விட்டு விடு. அத்தோடு அதனை மறந்து விடு. பதியம்போட்டு பிள்ளைகள் மனதில் நட்டு விடாதே. பாரம் தாங்காது. 'பழி வாங்கும் செயல் தான் இது', பாவத்தைச் செய்யாதே. பாவம் குழந்தைகள் சிறகு விரித்து மகிழ்வோடு வலம் வரட்டும்.

மிக முக்கியமான ஒன்றாக இன்றைய ஊடகத் தாக்கம். குழந்தைகள் மனது ஈரமண் போன்றது. எது போட்டாலும் அங்கு முளைத்துவிடும். பயிரா, களையா, உடனே பார்வைக்குத் தெரியாது. விளைந்தால் தெரியும். உணர்ச்சி வசப்படக்கூடிய வயது மட்டுமல்ல. உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியாமல் தவிக்கும் வயதும் தான். சராசரி வருமானம் உள்ள அனைத்துக் குடும்பங்களிலும் இன்று நடப்பது இது தான். 'பெற்றவர்கள் தனது வேலையால், சூழலால், தவிக்கும்போது குழந்தைகள் கவனிப்பை மறந்து விடுகிறார்கள். அதே நேரம் நல்லது செய்வதாக நினைத்து ஊடகத்தின் பக்கம் குழந்தைகளைத் திருப்பி விடுகிறார்கள். ஊடகம் முழுமையாக குழந்தையை ஆக்கிரமித்து விட்ட நிலையில் ஊடகத் தடை விதிக்கிறார்கள். இதுவும் தவறான செய்கையாகவே பார்க்க வேண்டி யிருக்கிறது.

எதையும் உடனே இழப்பதற்கு குழந்தை விரும்புவதில்லை. அப்படி யிருக்கும் போது நேற்றுவரை நீ செய்த தவறால், நீ காண்பித்த ஊடகத்தால் ஆறுதல் பெற்ற குழந்தையை அவ்வளவு விரைவாக மாற்ற முடியாது என்று உணர வேண்டும்.

இளம் வயதில் எந்தப்பிரிவையும் குழந்தைகள் தாங்கிக் கொள்ள முன் வரமாட்டார்கள், 'மனதுள் தானே முதன்மையாக கவனிக்கப்பட வேண்டும்

என்ற எண்ணம் ஒரு ஓரமாக இருக்கத் தான் செய்யும்‘. குழந்தைகளை ஒத்த வயதுடைய பிள்ளைகளோடு விளையாட

அனுமதிக்க வேண்டும். அதே நேரம் கண்காணிக்கவும் வேண்டும். கூடி விளையாடும் குழந்தைகளில் ஒரு குழந்தை எதாவது தீய பழக்கத்துக்கு அடிமையானால் கூட அது அனைத்துக் குழந்தைகளையும் பாதிக்கும்.

குழந்தைகளை திருத்துவதில் கூட முறையாக செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு முன் குழந்தையைத் திட்டக் கூடாது. அது மனதை பாதிக்கும் என உணர வேண்டும்.சோகமோ கண்ணீரோ குழந்தைகள் முன் காட்டக் கூடாது. பிரியக்கூடாதவர்கள் இடத்தை விட்டு அகன்றாலோ பிரிந்தாலோ அந்த சோகம் நம்மோடு இருக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் தாய் தந்தை மட்டுமே ஹீரோக்கள் என புரிந்து கொள்ள வேண்டும். உங்கள் சோகம் கூட பிள்ளைகளின் மனதைப் பாதிக்கும். ஆற அமர உட்கார்ந்து குழந்தைகளுக்கு வாழ்வின் எதார்த்தத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். புரிதலை உருவாக்க வேண்டும். ‘புரிதல் இருந்தால் பிரிதலால் வரும் வலிகள் இல்லை, இதனைஉணர வேண்டும்’. ‘பெற்றோர்கள் முக்கியமாக, தன்னைப் பெற்றவர்கள் இருந்தால் பிள்ளைகளை, அவர்கள் பொறுப்பில் வளர விடுவது குழந்தைகளுக்கும் பெற்றவர்களுக்கும் மன அழுத்தத்தைக் குறைக்கும்‘.

அனுபவத்தின் முன்னால் எதுவும் எப்போதும் கடினமில்லை. அனுபவம் தான் பதட்டத்தைக் குறைக்கும். படபடப்பைக் குறைக்கும். வீண் செலவு களைக் குறைக்கும். இவைகள் அனைத்தும் குறைந்தாலே யாருக்கும் மன அழுத்தம் வராது, உணர வேண்டும்.இவற்றை நீங்களே உணர்ந்து செய்ய வேண்டும். ‘உங்களுக்கு யாரும் அழுத்தம் கொடுத்து நீங்கள் மாறக்கூடாது. வேறு யாராவது அழுத்தம் கொடுத்திருந்தால் அதில் அவர்களின் மன அழுத்தமும் கலந்தே இருக்கும். உணர வேண்டும்.

சுதந்திரமான, வெளிப்படையான, எண்ணங்களோடு பயணம் செய்யுங்கள்.

எதையும் எதிர்கொள்ளும் நிலைக்கு உங்களை ஆட்படுத்திக் கொள்ளுங்கள்.

எடுத்தேன் கவிழ்த்தேன் என்று போட்டு உடைக்காமல், எவ்வழிப் பயணமோ அவ்வழியிலேயே சிறிது பயணம் செய்து விட்டு பிறகு உங்கள் வழிக்கு வாருங்கள். எதையும் எதிர்பார்த்து எதையும் செய்யாதீர்கள். கடமையை மட்டும் கடமையாகச் செய்யுங்கள். கடமைக்கு செய்யாமல் சரியாக செய்யுங்கள். சாணக்கியமாய் உலவுங்கள். புரிதலோடு வாழுங்கள். ‘எவ்வினைக்கும் எதிர்வினையுண்டு அறியுங்கள்‘. தீதும் நன்றும் பிறர் தர வருவதில்லை. சிந்தனையை புதுப்பிப்பு செய்யுங்கள். ‘எதற்கும் அளவோடு ஆசைப்படுங்கள். யாரையும் எப்போதும் எடுத்தெறிந்து உதறாதீர்கள். காலம் அப்படியே மாறும். கவனமாக வாழுங்கள் .‘பிறர் உதவியில்லாது யாராலும் வாழ முடியாதென உணருங்கள்‘. அதற்காக மண்டியிடாதீர்கள்.

‘மனதை மலர் போல மென்மையாய் வைத்துக் கொள்ளுங்கள்‘. அழுத்தம் வர வாய்ப்பில்லை. அகத்துள்ளே விளக் கெரியட்டும். செய்வதையெல்லாம் செய்து விட்டு பழிசொல்ல யாரையும் தேடாதீர்கள் அகவொளி உங்கள் அழுத்தத்தை நீக்கட்டும்.

அன்பே அனைத்துக்கும் மூலமென அதில் பயணம் செய்து வாழ்வை இனிமையாய் ஆக்கிக் கொள்ளுங்கள். மன அழுத்தம் பெற்று மருத்துவரிடம் நடையாய் நடக்கும் நேரத்தை மனம் கொண்டு மகிழ்வோடு மனம் விட்டு பேசுங்கள். மலர்ந்திடும் வாழ்வு. மனம் மலர்ந்தால் அழுத்தம் அங்கிருக்காது.

**பரணி சுப சேகர் மதுரை 17.**

# மறதி

**கருமலைப்பழம் நீ**

பதுங்கிப் பாய்ந்த
முதுமை என்னை
பற்றிக்கொண்டு
படாதபாடு படுத்துகிறது

பகலென்றும் பாராமல்
அடிக்கடி தூக்கம்
கண்களைச் சாய்க்கிறது
இரவில் தூக்கம் வராமல்
புரண்டு படுக்க வைக்கிறது

அடிக்கடி மூளைக்கு
வேலை கொடுக்கணும்
முடிந்தவரை நடக்கணும்
இப்படியெல்லாம்
அறிவுரை அம்புகள்
பாய்ந்த வண்ணம் உள்ளன

தைரியமா இருக்கணும்
முதுமையில் தள்ளாட்டம்
வந்துதான் தீரும்
தன்னம்பிக்கை முக்கியம்
குடும்ப மருத்துவரின்
ஆறுதல் வார்த்தைகள்

அங்காடி செல்ல
தள்ளாடி நடக்கையில்…
எங்கே போகிறது
இந்தச் சாலை
எங்குநான் செல்ல வேண்டும்

விடைதெரியாத வினாக்கள்
விதவிதமாய் எழுகின்றன

தூக்கம் வாரா இரவில்
சிந்தனைகள் தொடர்கின்றன
காலை என்ன சிற்றுண்டி
மத்தியானம் என்ன உண்டேன்
மாத்திரைகள் எடுத்துக் கொண்டேனா
சந்தேகங்கள் சுரக்கின்றன

இளமைக்கால நினைவுகள்
நீங்காமல் இருப்பது போல் ஏன்
முதுமையில் இருப்பதில்லை
ஏனிந்த தடுமாற்றங்கள்

இப்போது கூட ஓர்மனிதர்
என்முன்னே வந்து வணங்குகிறார்
ஏதேதோ பேசுகிறார்
யார் இவர்…இதற்குமுன் இவரை
எங்கு பார்த்திருக்கிறேன்
மூளையைப் போட்டுக் கசக்குகிறேன்
இன்னும் கூட நினைவிற்கு
வரவில்லையே…என்ன சொல்ல?





# ‘நான் அவனல்ல’

அன்று சித்ரா பௌர்ணமி,

முழு நிலவு வானில் உலா வரும் நாள். திண்டிவனம் அருகில் உள்ள கிராமம்.

கிராமத்திலிருந்து நகருக்குச் செல்கிற வழியில் இருந்த பாழடைந்த வீட்டில் இரண்டு ஆவிகளின் ஏக்கங்கள்

‘மணி, மணி நீயா ? ஆவியானப்புறமும் என்னைத் தொடர்ந்து தான் வர்றியா?’

‘இன்று பௌர்ணமி, மாலா,.. உன்னை காணாமல் எப்படி இருக்க முடியும்.?

மணி,..உன்னோடு வாழணும்னு கனா கண்டேன்..நீயோ சமூக சேவை னு இருந்த ...

பொறந்ததிலிருந்து ஒண்ணாவே வளர்ந்தோம் கல்யாண வயது வந்ததும், எங்க வீட்ல வேற யாருக்காவது என்னை கட்டி வெச்சுடப் போறாங்களேன்னு உங்க வீட்டுல இருக்கற பெரியவங்க முன்னாடி தாலி கட்டிகிட்டு இந்த வீட்டில் உன்னோட இருக்கலாம்ன்னு இங்கே வந்தேன் .

அன்னிக்கு பார்த்து. காஸ் வெடிச்சி வீடு பூரா தீ பிடித்து, என்னை காப்பாத்த வந்து, என் உயிரும் போய் என்னுயிர் ஆன நீங்களும் போனீங்க. ஒங்களோட வாழ வந்த நானும் உயிரை விட்டு இப்ப ஆவியானப்புறமும் உன் பின்னாடியே வந்துகிட்டு இருக்கேன்.....

ஆமாம். இந்த வீடு அப்படியே சிதிலமான ...? தீக்கு இரையான கோலத்தில் இருக்கு....

வேற யாரும் இங்க வரலியே ...?‘

துக்கம் நடந்த வீடு, அப்பா அம்மா தங்கை வேறு எங்கோ போயிருக்காங்க அதான் வீடு அப்படியே இருக்கு.

என்னுடைய தங்கைக்கு கல்யாணம்.

என்னுடைய போட்டோ வைத்து அழுதுண்டு இருக்கா. அவ அழுகுரல் எனக்கு கேக்குது. ‘ஆவியானப்புறமும் தங்கை மேல பாசம் பேச்சுலயே பொங்குதே...’

ஆமாம் மாலா, அவளுக்கு என் மேல் ரொம்ப பிரியம். அதான் ஒரு சின்ன அதிர்ச்சி கொடுக்க போறேன். அப்புறம் சரியாயிடுவா!

‘எங்க மாமா பையன் ரவி தான் மாப்பிள்ளை’ அட அவன் அப்படியே உன்னை மாதிரி இருப்பான்., நீங்கள் ரெண்டுபேரும் இரட்டையர்கள் னு சொல்லுவாங்க பள்ளியில்.

சின்ன வயதில் மாங்காய் கடித்து பாதி உனக்கு எப்பவும் கொடுப்பது போல் நீ என்று நினைத்து அவனுக்கு கொடுத்தேன்.

அவன் மாங்காய் தித்திக்குதே அதான்

'மணி' தினம் உன்கிட்டே வாங்கி சாப்பிடறானா னு கேட்டதும் தான், நீ இல்லை என்று தெரிந்து, அவனை கல்லால் அடித்து மண்டையில் ரத்தம் வந்தது பிறகு அப்படியே அடையாளமானது.

ஆமாம்,...ஆமாம் ரொம்ப நாள் புலம்பிண்டு இருந்தான். ஆனால் ரொம்ப நல்லவன். நாம் இருவரும் இறந்ததும் இவன் அழுத அழுகைக்கு மறுபடியும் நமக்கு உயிர் வராதா என்று தோன்றியது.

எனக்கு இன்னும் மனசு ஆறாமல் தான் நான் இந்த வீட்டையே சுத்தி சுத்தி வரேன்..இன்னிக்கு நீயும் என்னை தேடி இங்க வந்துட்டே....

இங்க பார், இந்த ராத்திரியில் யாரோ வரா மாதிரி தோணுது ...' நம்ம ஆளுங்க யாரும் வர பயப்படுவாங்க, இங்க நாம இரண்டு பேர் இறந்தது பயம் இருக்கும்.

வெளி ஆளுங்க தான் வந்திருக்கணும்.

அதான் இன்னிக்கு இருந்து பார்க்கணும்னு நினைச்சேன்.

'பார்,...அங்கே ஏதோ குரல் கேக்குது '

நம்ம முதலாளி, சரக்கை எல்லாம் இங்க வைக்க சொல்றாரு...'

'அடேங்கப்பா ... நாலு கோடி ரூபாய் கஞ்சா சரக்கை பாழடைஞ்ச வீட்டில் வெச்சு வியாபாரம் பண்றீங்க..பாருங்க..' ரொம்ப தைர்யம் தான்.

'சத்தம் போடாத அந்த சாக்கு பை எடு கொஞ்சம் சரக்கு எடுக்கணும்'

அவர்களுக்கு தேவையானதை எடுத்துக் கொண்டு வீட்டை பூட்டிக் கொண்டு வேகமாக வெளியேறினார்கள் .

நீ சொன்னது சரி தான் மணி

அட பாவிங்களா! இவங்கள சும்மா விடக்கூடாது!

சரி வா இப்போ போவோம்,

அடுத்த வாரம்,

மணியின் தங்கை மீனா கல்யாணம், விமர்சையாக முடிந்து, அன்று பூரா அண்ணனையே நினைத்து கொண்டிருந்தாள்.

இரவு பால் சொம்புடன் அறைக்குள் நுழைந்ததும்,

புது மாப்பிளை யாருடனோ

பேசுவது கேட்டு பயந்து நின்று மெல்ல வந்தாள்.

என்னங்க? இங்க யார் இருக்கா,

ஏதோ பேச்சு குரல் கேட்டது என்றாள் மீனா பதட்டமாக, அப்படியே எங்க அண்ணன் குரல் மாதிரியே!

சரி, பயப்படாத, என்று அவள் காதில் ரகசியம் சொன்னான்.

பிறகு,

கல்யாணம் ஆக வேண்டிய நேரத்தில் மணியும், மாலாவும் இறந்தது, அவர்கள் ஆன்மா இன்னும் இங்கே நம்மோடு தான் இருக்கு. நீ அந்த பால் சொம்பு இங்க வச்சுட்டு கொஞ்சம் உள்ளே போ என்றான்.

கட்டிலில் மணியும் ரவியை போல்



மாப்பிளை கோலத்தில் அமர்ந்திருக்க, ரவியும் அருகில் சிரித்துக்கொண்டே காத்திருந்தான்.

சற்று நேரத்தில்,

மாலா அழகா அலங்கரித்து, அங்கிருந்த பால் சொம்பு எடுத்து மணியின் அருகில் வந்தவள், பக்கத்தில் ரவி இருப்பது பார்த்து,

என்ன? இந்த பக்கம் மண்டையும் கல்லால் அடி வாங்கணுமா? இப்போ அடிச்சா பேய் அடி விழும் என்றாள்.

மணி சிரித்துக்கொண்டே ரவி காதில் சில விஷயம் சொல்லி, மாலா வுடன் மறைந்து போய் விட்டான் அவன் உலகிற்கு.

இங்கே மீனா மயங்கி விழுந்திருந்தாள்.

ரவி,.. மெல்ல அவளை எழுப்பி உட்கார வைத்து, நம்முடைய முதல் இரவு இன்னொரு நாள் வைத்துக்காலாம். வீட்டில் யாருக்கும் எதுவும் சொல்ல வேண்டாம். நாளைக்கே டூட்டி யில் ஜாயின் பண்ணப் போறேன் என்றான்.

என்ன ஆச்சுங்க? என்ன நடந்தது இங்கே? அண்ணன் குரல் மாதிரி கேட்டுது அப்புறம் எனக்கு மயக்கமானது.

ஒண்ணும் பிரச்சனை இல்லை,

உங்க வீடு இருக்கு, அதை நாம் பார்க்காமல் விட்டது தப்பு. அங்கே ஒரு பிரச்சனை, அதான் அண்ணனும், மாலாவும், ஆவியானாலும் பழைய நினைவில் அந்த வீட்டிற்கு வந்திருக்காங்க.

அப்போ அந்த வீட்டில் நடந்தது பார்த்து, அதிர்ச்சியாகி இங்க வந்தாங்க சொல்ல.

இங்க ஒரே கல்லில் மூணு மாங்காய் அடிச்சான் மணி

என்ன மாங்காயா??

ஆமாம், தங்கை கல்யாணம் பார்க்க ஆசை, அங்கு நடக்கும் விஷயம் எனக்கு சொல்ல, அதே நேரத்தில் கல்யாணம் கனவு, வெறுமையா போனதில் இங்கே அவர்கள் கணவன், மனைவி மாதிரி மாலா பால் சொம்பு எடுத்து வர, நானும் அங்கே இருந்தது பார்த்து, பொய் கோவத்தோடு கை ஓங்க மணி அவளை அழைச்சிண்டு போய்ட்டான்.

இதென்னங்க? ஏதோ திகில் படம் பார்த்த மாதிரி.

ஒண்ணும் பயப்பட வேண்டாம், இதெல்லாம் அதிர்ச்சியாகும்னு தான் உன்னை மயக்கமாக்கினாங்க.

சரி,..வந்து படு,

காலையில் சீக்கிரம் எழுந்து வேலைக்கு போகணும்.

காலை ஆறு மணி. மீனா படுக்கையை விட்டு எழுந்தாள். அவளுடைய கணவன் ரவி, அதற்குள் தயாராகியிருந்தான்.

‘என்ன இவ்வளவு சீக்கிரமா?

அதான் ராத்திரி சொன்னேனே!

வீட்டில் எல்லாரிடமும் ஏதாவது சொல்லி சமாளிச்சுக்கோ மாலா.

‘என்ன மாலா ன்னு உளர்றீங்க…‘

ராத்திரி சம்பவம் நெனச்சுகிட்டேன்…‘ என்று கூறியபடியே அவளை அணைத்தான்.

சற்று நேரத்தில் அவள் குளித்து முடித்து சேலை உடுத்தி வந்தாள்.

கீழே அனைவரும் இவர்களுக்காக காத்திருக்க, யூனிபோர்ம் ல் வரும் பிள்ளை பார்த்து,

என்னடா? இன்னிக்கே வேலைக்கு போகணுமா என்று ரவியின் தந்தை கேட்டார்.

அப்பா,.. மீனா சொல்வாள் எனக்கு

நேரமாகுது என்று கிளம்பினான்.

மீனா, பயந்து போனாள்!

எதை சொல்ல சொல்றார்,!

நேற்று நடந்ததா, நடக்காததா,

இன்று நடக்கப்போவதா??

எதை சொல்ல சொல்றார்.

ஆண்டவா ஒரே குழப்பமா இருக்கே னு அப்படியே தலை சுத்தி மயங்கி விழுந்தாள்.

என்ன பிள்ளை இவன், இப்படி புது பொண்டாட்டியை கூட கவனிக்காம?

மீனாவுக்கு மயக்கம் தெளிவித்து சாப்பிட வைத்து, நீ போய் மாடியில் படுத்துக்கோம்மா என்றாள்

லஷ்மி ரவியின் தாய்.

அத்தை நான் இங்கே கொஞ்சம் நேரம் கீழயே உங்க அறையில் இருக்கேன் என்றாள் கொஞ்சம் படபடப்போடு.

மத்தியானம் ரவி, வீட்டுக்கு வந்தான்.

வந்தவன் மீனாவிடம் ,..உங்க வீட்டை அப்படியே போட்டு வெச்சிருக்கு ...

புழங்காத வீட்டை சமூக விரோதிகள் பயன்படுத்திருக்காங்க.

'ஐயோ இதென்ன நீங்க சொல்றதை கேட்கும் போது எனக்கு பகீர்ங்குதே...

சரி, நான் சில ஏற்பாடு பண்ணி வந்திருக்கேன். ராத்திரி போய் பார்த்து வருவோம் என்றான்.

ஆமாம் ராத்திரி தான்,

ரவி,.. அங்கே கமிஷனரிடம் சொல்லி, இரண்டு கான்ஸ்டபிள் அந்த வீட்டிற்கு அருகில் மாறு வேடத்தில் கண்காணிக்க ஏற்பாடு பண்ணினார்.

எப்படியும் இரவு நேரம் தான் வருவார்கள் என்று யோசித்து,

இரவு வா வெளியே போய் வரலாம் என்று, மீனாவை உங்க வீடு அது, நீ போய் பூட்டை திற என்றதும், என்னங்க? எனக்கு பயமா இருக்கு, என்று மீனா பயந்து கொண்டே பூட்டை திறக்க அங்கு பதுங்கி யிருந்த குற்றவாளிகள், மீனாவையும் ரவியையும் தாக்க வந்ததும்,... கூட வந்திருந்த போலீஸ் அவர்களை மடக்கி கைது செய்தனர்.

'மீனா.. நாம உள்ளே நுழைஞ்சதும்.. அந்த குற்றவாளி நம்மள தாக்க வந்தாங்களே... அப்போ நம்மை காப்பாத்தியது மணியும் மாலாவும். நீ உணர்ந்தியா .....'

ஆமாங்க நானும் உணர்ந்தேன் , ரொம்பத்தான் மாலா மாலா னு சொல்றீங்க இன்னும் பழைய ஞாபகம் போகலையோ.

அம்மாடி என்னால் இனி அடி வாங்க முடியாது என்றான் ரவி.

என்னங்க? அந்த வீட்டை அண்ணன் சமூக சேவை க்கு தான் உபயோகிக்கணும் னு சொல்லிட்டிருந்தது. வீட்டை சரி பண்ணி ஆதரவற்றோர் இல்லம் ஆக்கிடலாமா என்றாள் மீனா.

உத்தரவு மகாராணி அப்படியே நடக்கட்டும்.

அடுத்த சில மாதங்களில் அந்த வீட்டை 'மணிமாலா ஆதரவற்றோர் இல்லம்' என்று பேர் வைத்தனர்.

மணி, மாலாவின் புகைப்படம் பெரிய அளவில் வைத்து கமிஷனர் வந்து அந்த இல்லம் திறந்து வைத்தார்.

மணியும், மாலாவும் இருவரும் இவர்களை ஆசிர்வதித்து அவர்கள் உலகம் சென்றனர்.

**உமா ஸ்வாமிநாதன்**
**பெங்களூரு**

கவிஞர், நூல் விமர்சகர், கதாசிரியர், ஹைக்கூ கவிஞர்,, கைவினைக் கலைஞர், நூலாசிரியர், எழில் கொஞ்சும் இயற்கையைப் படமெடுக்கும் ஒரு இதழாசிரியர், புகைப்படக் கலைஞர் என பன்முகத் திறமைகளுடன் பயணிக்கும்

# வஃபீரா வஃபி



**உங்களைப் பற்றி**

நான் கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவள். எனது பெற்றோர் இந்திய தேசத்தைப் பூர்வீகமாகக் கொண்டாலும், சிறுவயதிலேயே வியாபார நிமித்தம் குடும்பத்துடன் இலங்கைக்கு குடிபெயர்ந்தவர்கள்.

பாடசாலைக் காலத்தில் சாரணியர் இயக்கத்திலும் அங்கம் வகித்து, பல சமூக சேவையிலும் பங்களிப்பு செய்துள்ளேன்

2022 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் எனது கன்னி நூலான ' புள்ளியில்லாக் கோலம்' நூலை வெளியிட்டுள்ளேன்.

பலரது தொகுப்பு நூல்களிலும், மின்னிதழ்களிலும் எனது கவிதைகள் ஹைக்கூ, தன்முனை, குறுங்கவிதைகள் மற்றும் சிறுகதைகள் வெளியாகி உள்ளன.

எப்போதும் நேர்மறையான எண்ணங்களுடன் பயணிக்கக் கற்றுக் கொண்டிருப்பதால், கவலைகளை மனதின் சுமையாக்கிக் கொள்ளாமல் அவற்றைப் புன்னகையுடன் கடக்க என்னைப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கிறேன். அதனால், எந்தவித சவால்களையும் எதிர்கொண்டு வாழ்க்கையை வெற்றி கொள்வேன் எனத் திடமாக நம்புகிறேன்.

**உங்கள் இலக்கிய பயணத்தின் ஆரம்பம் எப்படி அமைந்திருந்தது?**

பள்ளி நாட்களில் பரிசுகளாகக் கிடைத்த அடுக்கடுக்கான புத்தகங்கள், வாசிக்கும் பழக்கத்தை என்னுள் தோற்றுவிக்க, அதுவே வாசிக்கும் ஆர்வத்தை என்னுள் அதிகமாக்கியது. அவைதான் என் கவிதைகளுக்கும் கருவூலம். அத்துடன், என் தாயாரின் கவிதை மற்றும் பாடல்கள் எழுதும் திறமை என்னையும் எழுதத் தூண்டியது.



2020 ஆம் ஆண்டு மாமல்லபுரத்தில் கவியுலகப் பூஞ்சோலை நடத்திய விருது விழாவில்



ஸ்ரீலங்கா பெண்கிளப் நடததிய 4 வது மாநாட்டின் போது

சிறுவயதிலிருந்தே இலங்கை வானொலியில் ( இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்) பல நிகழ்ச்சிகளில், பங்கேற்றிருக்கிறேன். நான் பாடிய பாடல்களுக்கு தாயாருடன் சேர்ந்து நானும் சில வரிகளை எழுதியிருக்கிறேன். இப்படித்தான் எனது இலக்கியப் பிரவேசம் ஆரம்பித்தது.

**சஞ்சிகை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி ஏற்பட்டது? அதன் அனுபவங்களை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்!**

சிறுவயதிலிருந்தே ஒரு சஞ்சிகை நடத்தவேண்டுமென்ற உந்துதல் என்னுள் இருந்தது. பின்னாளில் சஞ்சிகை வெளியிடுவதற்கு ஊக்கம் தந்தவர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள். அதன் விளைவாக, 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி முதன்முதலாக முத்தமிழ் கலசம் இலக்கிய வானில் பவனி வர ஆரம்பித்தது. இது இருமாதங்களுக்கொருமுறை வெளிவரும் இலக்கிய சஞ்சிகையாகும்.2022 ஜனவரி மாதம் முதல் அச்சிதழாகவும் வெளிக் கொணர்ந்து, இப்போது ஆறாவது ஆண்டில் வெற்றிகரமாக பயணிக்கிறோம்.

ஆரம்பத்தில் சஞ்சிகை நடத்தப் போகிறேன் என்று சொன்னதும், எள்ளி நகையாடிய நண்பர்களும் உண்டு. அந்த எள்ளல்தான் எனக்குள் திடத்தை ஏற்படுத்தி, இப்பயணத்தைத் தொடர வழிவகுத்தது. காளான்களாகத் தோன்றி மறையும் சில சஞ்சிகைகளுக்கு மத்தியில் கல்வெட்டாக நிலைக்க, எந்த இடர் ஏற்பட்டாலும், கடுமையாக உழைத்து இப் பணியைத் தொடர வேண்டும் என்று உறுதி பூண்டுள்ளேன்.

சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் என்ற ரீதியில் நேர்மறை சிந்தனையைத் தூண்டி, சமூகத்துக்கு விழிப்புணர்வு கொடுக்கும் விதமாகவே ஆசிரியர் பக்கத்தில் கருத்துக்களை பகிர்வதிலும், நேர்மறையான எண்ணங்களை உள்ளடக்கிய ஆக்கங்களை சஞ்சிகையில் சேர்ப்பதிலும் நான் அதிக கவனம் செலுத்துகிறேன்.

**எழுத்துக்களால் சமுதாய மாற்றத்தைக் கொண்டு வர முடியுமா?**

நிச்சயமாக முடியும்.

ஒரு சமுதாயத்தை நேர்த்தியாக வழிநடத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் உள்ளது. அவன் எழுத்துக்கள் சமூகத்தின் நாடி பிடித்தறியும் விதமாகவும், சாணை பிடித்த கத்தி போன்று கூர்மையாகவும் இருக்க வேண்டும். அப்போது பாரிய சமூகமாற்றம் நிகழும்.



பாடசாலைக் காலத்தில் சாரணியர் இயக்கத்திலும் அங்கம் வகித்து, பல சமூக சேவையிலும் பங்களிப்பு செய்துள்ளேன்



2020 ஆம் ஆண்டு எழும்பூரில் நடந்த ஹைக்கூ 2020 விழாவில்

**இலக்கியம் என்று வரும்போது ஒரு எழுத்தாளனது எழுத்துப்பணி எப்படி அமைய வேண்டும்?**

எழுத்தாளனின் படைப்பாற்றல், இந்த சமூகத்துக்கு நன்மை விளைவிக்கக் கூடியதாக அமைய வேண்டும். அவனது படைப்புகள் சமூகச் சீர்கேடுகளை செப்பனிடக் கூடியதாகவும், நம் பண்பாட்டு விழுமியங்களை எதிர்கால சந்ததிக்கும் சிதைவின்றி கடத்தக்கூடியதாகவும், சமூக விழிப்புணர்ச்சியைத் தூண்டி, ஒரு பண்பட்ட சமூக மேம்பாட்டிக்கு உறுதுணையாக இருப்பதாகவும் அமைய வேண்டும். ஒரு எழுத்தாளன், தனது எழுத்து வன்மையால் சமூகத்தை நேர்மறையாக சிந்திக்க வைத்து, அதை ஒரு கட்டமைப்புள்ளதாக மாற்ற முடியுமானால், அதுவே அவனுடைய எழுத்தாற்றலின் வெற்றி.

உதாரணமாக, மனிதர்களின் இன்றைய வாழ்வியல் இயற்கையை அழித்து, பல்லாயிரம் இயற்கை அனர்த்தங்களை சந்திக்கும் சவாலை எதிர்நோக்கக் கூடியதாக உள்ளது. தம் எழுத்து வன்மையால் , சமூகத்தைக் கூர்தீட்டி, இயற்கைக்கு இசைவான ஒரு வாழ்வியலை நம் சமூகத்தில் ஏற்படுத்த முடியுமானால், அதுவே இயற்கை அனர்த்தங்களைத் தவிர்த்து, ஒரு படைப்பாளியுடைய எழுத்தாற்றலின் மாபெரும் வெற்றியாகவும் அமையும். இவைதான் இலக்கியங்களுக்கும் அப்பால், வரலாறும் அவனைப்பற்றி பேச வழிவகுக்கும்.


**இப்போது பரவலாகக் காணக்கூடிய பாலியல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க எழுத்தாளர்கள் எனும் ரீதியில் நாம் என்ன செய்யலாம்?**


ஒவ்வொரு தனிமனிதனும் சுற்றுச் சூழலைக் கூர்ந்து கவனித்தாலே இதுபோன்ற பல தவறுகளைத் தடுத்துவிடலாம். ஆனால் நவீன தொழிநுட்பமானது திறன்பேசிகளை மக்கள் கையில் கொடுத்து, அவர்களை கருத்துக் குருடர்களாக மாற்றியுள்ளது. எங்கு நோக்கினாலும் மக்கள் குனிந்த தலை நிமிராமல், அலைபேசிகளுக்குள் தொலைந்திருப்பது நம்மைச் சூழ நடக்கும் விடயங்களை நம் மூளை கிரகிக்க விடாமல் தடுப்புச் சுவராகிறது . வீட்டுக்குள்ளேயே திறன்பேசியின் ஆதிக்கம் குடும்ப அங்கத்தவர்களை முடக்கிப் போட்டு, தனித் தனித் தீவுகளாக வாழ வைத்துள்ளது.

தனியொரு மனிதனாக சுற்றுச்சூழல் பற்றிய அவதானமும், ஓர் எழுத்தாளனாக தம் காத்திரமான எழுத்துகளின் மூலம் கொண்டு வரும் விழிப்புணர்வும் இவற்றைத் தடுக்க நிச்சயமாக உதவும்.

**வாசிப்பு என்பது எந்த அளவு மனிதனுள் தாக்கம் செலுத்துகிறது?**

ஒரு மனிதனின் எதிர்காலப் பாதையை தீர்மானிப்பதே அவன் வாசிக்கும்





புகைப்படக் கலைஞராக...

நூல்கள்தான். மனிதனது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தையும் வடிவமைத்து வழிநடத்துவது அவனது வாசிப்பு தான். அதுதான் ஒரு மனிதனை சகலவிதத்திலும் முழுமைப்படுத்துகிறது என்பதை மறுக்க முடியாது.

**உங்கள் ஹைக்கூ நூல் பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா?**

2022 டிசம்பர் மாதம் நான் வெளியிட்ட ஹைக்கூ நூலை வடிவமைத்தவர் தமிழ்நெஞ்சம் அமின் ஆவார். 128 பக்கங்களை உள்ளடக்கிய இந்நூலில் பல விழிப்புணர்வு ஹைக்கூக்களும் இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்கான அணிந்துரையை கவிச்சுடர் கல்யாணசுந்தரம் ஐயா எழுதியுள்ளார்.

**இப்போது பரவலாக வழங்கப்படும் விருதுகள் பற்றி....**

என்னைப் பொறுத்தவரை விருதுகளைத் தேடி நாம் போகக் கூடாது. அவை நம்மைத் தேடி வருமளவுக்கு நம் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். இப்போது பெரும்பாலான இடங்களில் விருதுகள் கொடுப்பதை, பணத்தைப் பெற்றுக் கொண்டு வியாபாரமாக்கி விட்டதால், தகுதியற்றவர் கைகளிலும் சிலசமயம் அவை சேர்வதுண்டு. ஆனால் இதில் நேர்மையைக் கடைப்பிடித்து, ஆற்றலுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்து விருது வழங்கும் விதிவிலக்கான சிலரும் உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை. குறிப்பிட்ட சில பெரிய நிறுவனங்களாலும், ஒரு சில அமைப்புகளாலும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் விழா நடத்தப்பட்டு வழங்கும் உயரிய விருதுகளுக்கு, வட்சம் தாண்டியும் விலை நிர்ணயித்து வைத்திருக்கிறார்கள் என்பதும் வேதனைக்குரியது.

**மொழியாளுமை என்பது ஒரு படைப்பாளியினுள், ஒரு வாசகனுள் எந்தளவு ஆதிக்கம் செலுத்துகிறது?**

மொழியாளுமை என்பது ஒரு படைப்பை நிலைநிறுத்தி படைப்பாளியை அடையாளப் படுத்துகிறது. அங்கு அவர் மொழியைக் கையாளும் விதம் அவரை மற்றவர்களிடமிருந்து தனிச்சிறப்பு மிக்கவராக வேறுபடுத்திக் காட்ட உதவும்.

எந்த ஒரு படைப்பாக இருப்பினும், பொருந்தும் விதமாக மேற்கொள்ளப்படும் உவமான உவமேயங்களும் வார்த்தை அலங்காரங்களும் அப்படைப்பின் அழகைக் கூட்ட அணி சேர்கின்றன. சமூகப் பிரச்சினைகளாகட்டும்; விழிப்புணர்வு தரும் ஆக்கங்களாகட்டும்; நறுக்குத் தெறித்தாற் போல் கையாளப்படும் வீரியமிக்க சொற்கள்,



2020 இல் உலகத் தமிழ் மன்றமும் தமிழ்நெஞ்சம் (பிரான்சு) இணைந்து நடத்திய ஹைக்கூ 2020 யில் சமீபத்தில் மறைந்த கவிஞர் ஈரோடு தமிழன்பன் கையால் சான்றிதழைப் பெற்றுக் கொண்டபோது

நிச்சயமாக வாசகனுள்ளும் தாக்கத்தை ஏற்படுத்தி பாரிய சமூக மாற்றங்களுக்கும் வழிகோலும்.

**ஒரு சஞ்சிகையை நடத்துவதில், அச்சில் வெளிக் கொணருவதில் உள்ள சிக்கல்கள் எவை?**

ஒரு சஞ்சிகையானது அச்சில் வருவதில்



2025 மே மாதம் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற தமிழ் ஹைக்கூ நான்காவது உலக மாநாட்டில் ஹைக்கூ கவியரங்கின் போது

பொருளாதாரச் சிக்கல் முதன்மையாகிறது. எந்த லாபநோக்கிலும் இதை வெளியிடா விட்டாலும், போட்ட முதலுக்கே மோசம் வரும் தருணங்களையும் நான் கடந்ததுண்டு. ஆக்கம் எழுதும் ஒரு சிலரும், இதழை வாசிக்க ஆசைப்படும் சிலரும் இலவசத்தை எதிர்பார்ப்பதன் விளைவாக, சில இக்கட்டான சூழலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகின்றது. பல வாசகர்களின் புரிந்துணர்வும், ஆதரவும் தொடர்ந்து இப்பணியை செய்ய மனோதிடத்தை தருகிறது. அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளை சமர்ப்பிக்கிறேன்.

ஒரே ஆக்கத்தை ஒரே சமயத்தில், பல இடங்களுக்கும் அனுப்புவதும் சில வாசகரால் ஏற்படும் சிக்கல்தான். இதில் அவர்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். ஒரு சஞ்சிகைக்கோ அல்லது பத்திரிகைக்கோ ஆக்கங்களை அனுப்பி விட்டால் அது வெளிவரும் வரை கொஞ்சம் காத்திருக்கத்தான் வேண்டும்.இது எம்மைப் போன்ற இதழாளர்களுக்கு சங்கடம் ஏற்படாமல் தவிர்க்கும்.

சிலர் நாம் அஞ்சலிடும் பிரதிகள் கரம் கிட்டியதைக்கூட சொல்வதில்லை.இதுவும் மனதுக்கு சங்கடம் தரக்கூடியது தான். ஏனோதானோவென ஒரு ஆக்கத்தை எழுதி அனுப்பிவிட்டு தமது ஆக்கம் ஏன் வெளிவரவில்லையென கேள்வி கேட்பது, சஞ்சிகையை முழுதாக வாசிக்காமல் தமது ஆக்கம் வந்திருப்பதை அறியாமல், ஏன் எமது ஆக்கத்தை போடவில்லையென கேட்பது போன்றவையும் சங்கடம் தரும் சிக்கல்களே!


**கவிதை எழுதுவது தவிர்த்து வேறெந்த விடயங்களில் ஈடுபாடு அதிகம்?**

சிறுகதைகள்,கட்டுரைகள் எழுதுவேன். நூல்களுக்கு வாழ்த்துரைகள், மதிப்புரைகள், விமர்சனங்களும் எழுதி வருகிறேன். பொழுது போக்காக கைவினைப் பொருட்கள் செய்வதுண்டு. அதிலும் குறிப்பாக பயனற்றவை எனத் தூக்கி எறியும் பொருட்களை கலைப்பொருட்களாக மாற்றுவதில் மிகுந்த ஈடுபாடு உண்டு. எதிர்காலத்தில் ஒரு கண்காட்சி நடத்த வேண்டுமென்பது என் நீண்ட நாளைய ஆசை.



சென்னையில் நடந்த ஹைக்கூ 2020 விருது விழாவின் போது கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு பொன்னாடை போர்த்தி கௌரவித்த போது





இரண்டு மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும் முத்தமிழ் கலசம் சஞ்சிகை

**ஏத்தகைய (கழிவுப்) பொருட்களை கைப்பணிக்காகப் பயன்படுத்துகிறீர்கள்?**

அட்டைப் பெட்டிகள், மரவேர்கள், காய்ந்த மரக்கிளைகள், மரத்தூள், மணல், கற்கள்,சிரட்டை, காய்ந்த பூக்கள்,காய்கள், பாதாம் பிஸ்தா ஓடுகள், ஈச்சம் விதைகள், காய்ந்த பழ விதைகள், பூண்டு மற்றும் மிளகாய் காம்புகள், காலிப் போத்தல்கள், நைலோன் கயிறு, சணல் நூல், சாக்கு, பழுதாகிய சுவர்க் கடிகாரங்கள்,மீன் செதில்கள், பிளாஸ்டிக் போத்தல்கள், போத்தல் மூடிகள், மரக்கரண்டி, முட் கரண்டிகள்,காய்ந்த இலை வகைகள், காய்ந்த



முத்தமிழ் கலசம் முதலாவது அச்சுப் பிரதியை புரவலர் ஹாஷிம் உமர் அவர்களிடம் கையளித்த போது

பாசி வகைகள், முட்டைக் கோதுகள், காலியான தயிர் சட்டி, பானைகள், ஃபோம் ஷீட்கள், பொப்ஸிக்கல் குச்சிகள் இப்படி பலவகையாய் குப்பையில் எறியும் பல பொருட்களுடன் சிப்பி, ஊரி வகைகளைக் கொண்டும் பல கைவினைப் பொருட்களை செய்துள்ளேன்.

**14. உங்கள் சஞ்சிகைக்கான ஆக்கங்களை அனுப்பும் மின்னஞ்சல் முகவரி?**

muththamizh.kalasam@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

வெளியான அனைத்து இதழ்களையும் எம் இணையதளமான muththamizh-kalasam.com இல் பார்வையிடலாம். தரவிறக்கம் செய்தும் வாசிக்கலாம்.

**ஒரு எழுத்தாளர் என்ற வகையில் வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

நம் எழுத்துகள் பாமரனையும் போய்ச் சேர வேண்டுமானால், அவை எளிமையை அணிந்திருக்க வேண்டும். ஆயினும், எளிமையிலும் அழகியலைப் புகுத்தி , வாசகரின் புருவமுயர்த்தி வியக்க வைக்க முடியும். சின்னச்சின்ன வார்த்தைகள், வாணவேடிக்கை நிகழ்த்தும் அற்புதங்களைப் பல படைப்புகளில் காணலாம். ஒரு எழுத்த ாளன் கையாளும் மொழிநடையானது அவ னது படைப்பை தனித்தன்மையுடன் மிளிர ச் செய்யும். மற்றவர்களின் படைப்புகளை நகலெடுக்காமல் தன் சொந்தத் திறமையை நம்பி சிந்தனா சக்தியை முடுக்கிவிட்டால், எம் படைப்புகள் எதிர்கால இலக்கியத்தில் வரலாறு படைக்கும்.

முக்கியமாக சமூகப் பிரச்சினைக ளுக்காகவும், உங்கள் எழுதுகோல் குனிந்து நிமிரட்டும். அது உண்மையை தோலுரித்துக் காட்டி, இந்த சமூகத்தில் வேரூன்றிய புல்லுருவிகளைக் களையெடுக்கட்டும்.



ஸ்கை தமிழ் விருதுகள் 2024 விழாவில் ( இடம் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**இலக்கிய உலகில் நடைபெறும் போட்டிகள் எழுத்தாளர்களுக்கு ஆரோக்கியமானதென நினைக்கிறீர்களா?**

ஆற்றலுக்கு முக்கியத்துவம் வழங்கி, பாரபட்சமில்லாமல் வெற்றியாளர்களைத் தேர்வு செய்யும் எல்லாப் போட்டிகளும் ஆரோக்கியமானவையே!



தயாரிக்கப்பட்ட கைவினைப்பொருட்கள்

**15. தமிழ்நெஞ்சம் இதழ் பற்றி உங்களுடைய கருத்து?**

54 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழுக்கு சேவை செய்யவென்றே நடத்தப்படும் தமிழ்நெஞ்சம் எல்லா வாசக நெஞ்சங்களையும் கட்டிப்போட்டது மட்டுமல்லாமல், முடிசூடா மன்னனாக சாதனை படைத்து வருகிறது. பாரபட்சமின்றி அனைத்து எழுத்தாளர்களுக்கும் களம் கொடுத்து வருவது மனதுக்கு நிறைவாக உள்ளது. இதழாசிரியர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் இப்பணி தொடர வாழ்த்துகளும் பிரார்த்தனைகளும்!

வழமையான கேள்விகளைத் தவிர்த்து, சிந்தனைக்குத் தீனியிடும் கேள்விகளை முன்வைத்த உங்களுக்கும் நன்றிகளும் பிரார்த்தனைகளும்!

**நேர்காணல் - ஆயிஷா ஷகீலா**

# உளி பேசும் மொழி

நெல்லை க. சோமசுந்த
விஞர். எழுத்தாளர் தொல்லியல் ஆர்வல
சென்னை, தமிழ்நாடு

## 33



இப்பூவுலக ஜீவராசிகள் அனைத்திலும் சிறப்புப் பெற்ற உயிரினம் எது எனில், அது மானிட சமூகமே ஆகும். இயற்கையில் மானிடர்கள் உட்பட, அனைத்து உயிரினங்களும் சமமாக ஒரே விதமான உணர்வுகளுடன், அன்பு கருணை, பகைமை போன்றவற்றுடன் பொருந்தி வாழ்கின்றனர். அதில், மானுடம் மட்டும் பல பரிமாணங்களைக் கடந்து, மற்ற உயிரினங்களிலிருந்து பகுத்தறிவு என்ற ஒன்றிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. அவ்வகையில், மனிதனானவன் அப் பகுத்தறிவினைக் கொண்டு பண்டைய நெடுங்காலம் தொட்டு, இன்று வரையிலும் தன்னுடைய வாழ்க்கையின் தரத்தினை அடுத்தடுத்த நிலைகளுக்கு மேம்படுத்திக் கொண்டிருக்கிறான்.

அதன் வழியே, ஒவ்வொரு மனிதனும் அவரவர் அன்பினை வெளிப்படுத்தப் பல வழிகளைப் பின்பற்றுகின்றனர். அதில் மனதை மகிழ்ச்சிப்படுத்தும் கொண்டாட்டங்களும் ஒன்று. சமுதாயத்தில் தனிமனித உறவுகளுக்குள்ளும், நண்பர்கள் வட்டத்திலும் விழாவாகக் கொண்டாட்டப் படும் நிகழ்வுகள் பல அன்பின் பரிமாற்றமாகவும், அவரவர் மகிழ்ச்சியின் பங்களிப்பாகவும் வெளிப்படுத்தப்படுகிறது. இவ்வாறாகத் தான், மனிதனின் வழிபாட்டுச் சிந்தனையின் வளர்ச்சியடைந்த நிலையாக விழாக்கள் தோற்றம் பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது

அதே நிலையில், திருவிழாக்களானது ஒரு சமூகத்தில் நம்பிக்கையின் பொருட்டோ அல்லது மத வழிபாட்டினை பொருட்டோ, கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வழியே, திருவிழாக்கள் நடைபெறும் அந்த இடங்களில் வாழும் மக்கள் அனைவரும் தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையுடன் அனைவரின் நல்வாழ்வுக்காகவும், ஒன்றிணைந்து கூடிக் கொண்டாடுகின்றனர்.

இவ்வகையான திருவிழாக்கள் பூமிப்பந்தில் வாழும் அனைத்து மானிடர்களாலும் அவரவர் சமூக மற்றும் மத வழிபாட்டின் நம்பிக்கையின் வாயிலாக அனைத்து இடங்களிலும் கொண்டாடப்படுகிறது. இத்தகைய விழாக்களானது சமூக ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டு உணர்வையும் வளர்க்கப் பயன்படுகின்றன.

அங்ஙனமே, நம் தமிழகத்தில் ஏறத்தாழ இரண்டாயிரம் வருடங்களாகச் சங்க காலம் தொட்டு திருவிழாக்கள் பல வடிவங்களில் கொண்டாடப்பட்டு வருகிறது. அதற்குச் சான்றாக, இரட்டைக் காப்பியத்தில் முதன்மையான சிலப்பதிகாரத்தில், பூம் புகார் நகரில் கொண்டாடப்படும் இந்திர விழாவின் சிறப்பினை இளங்கோவடிகள் அக்காப்பியத்தில் எடுத்துரைப்பதிலிருந்து நம்மால் அறிய முடியும். அன்று தொட்டு இன்று வரையிலும் பல்வேறு திருவிழாக்கள் மத, இன வேறுபாடு இன்றிக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்திருவிழாக்களில் மிகவும் பிரசித்திபெற்ற அக்னியின் வடிவமாக எழுந்தருளியுள்ள அண்ணாமலையாரின் ஆலயத்தில், கார்த்திகைத் திங்களில் கொண்டாடப்படும் திருவிழாவானது முக்கிய விழாவாக் கருதப்படுகிறது. இத்தீப விழாவானது பண்டைய காலம் தொட்டே தமிழகத்தில்



கார்த்திகைத் திருவிழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்திருப்பதற்கான சான்றுகள் பல நம் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

**நலமிகு கார்த்திகை நாட்டவ ரிட்ட**
**தலைநாள் விளக்கிற் றகையுடைய வாகிப்**
**புலமெலாம் பூத்தன தோன்றி சில மொழி**
**தூதொடு வந்த மழை**

எனும் இப்பாடலில் தோழியானவள் தலைவியைப் பார்த்து கார்த்திகையின் தலைமையான திருநாளில் நாட்டு மக்கள் எல்லோரும் தெருவில் விளக்கேற்றி வழி படுவர். அதனைப் பார்க்கும் பொழுது, நிலம் முழுவதும் தோன்றி, பூத்துக் குலுங்கும் பூவை போல அங்கு ஏற்றி வைக்கும் விளக்கானது இருப்பதாகவும், இத்துடன் மழை வேறு பொழிகிறது இதனைப் பார்க்கும் பொழுது தலைவன் தலைவியைத் தேடி வருவதை உணர்த்தும் அறிகுறியாக உள்ளது எனத் தலைவியிடம் தோழி கூறுவதாக இந்த பாடல் அமைந்திருக்கிறது.. மழையையும், கார்த்திகை விளக்குகளையும், பூக்களையும் இணைத்து இந்த பாடல் ஒரு அழகிய காட்சியையே நம் கண் முன் நிறுத்துகிறது.

**'குன்றிற் கார்த்திகை விளக்கிட்டன்ன**
**கடிகமழ் குவளை பைந்தார்'**

என்பது சீவக சிந்தாமணியில் வரும் ஒரு





பாடல் வரியாகும். மலையின் உச்சியில் ஏற்றப்பட்ட கார்த்திகை விளக்கைப் போல, வாசனையுள்ள குவளை மலர் மாலை இருப்பதாக இந்த வரிகள் கூறுகின்றன. திரு வண்ணாமலையின் மீது தீபம் ஏற்றி வழிபடும் தீப ஒளி போல, மலர் மாலை பிரகாசமாக இருப்பதாகப் பொருள் கொள்ளப்படுகிறது. பண்டைய காலத்திலேயே நம் தமிழர்கள் பஞ்ச பூதங்களில் ஒன்றான அக்னியை வழிபாடாக வணங்கியதைப் பழங்கால இலக்கியங்கள் பலவும், வரிகளின் வழியாக நமக்குச் சான்றாகச் சொல்லுகின்றன .

அவ்வாறே, தமிழர்கள் தொன்று தொட்டுக் கொண்டாடி வரும் திரு விழாக்களுள் ஒன்றான கார்த்திகை தீபமானது, திருக்கார்த்திகை, சர்வாலய தீபம் கார்த்திகை விளக்கு, ஞானதீபம், பரஞ்சுடர் கார்த்திகை விளக்கீடு, என்றும் பல பெயர்களில் வழங்கப்படுகிறது. அக இருள், புற இருள் இரண்டையும் நீக்கும் ஒளியூட்டும் நாளாக உள்ள கார்த்திகைத் திருவிழாவைத் திருஞானசம்பந்தர் 'விளக்கீடு' எனும் சொல்லால் சுட்டுகிறார். இவர் தீபவிழாவை 'தொல் கார்த்திகை' திருநாள் எனவும் குறிப்பிடுவதால் இவரது காலத்திற்கு முன்பிருந்தே இவ் விழாவானது கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை நம்மால் இதன் மூலம் அறிய முடிகிறது,.தீபம் ஏற்றும் விளக்கானது

தமிழர்களின் வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையதாகவும்,இன்று வரை தமிழர்களின் இல்லத்தில் இன்றியமையாத ஒரு மதிப்பிற்குரிய மங்கலப் பொருளாகவும், மதிக்கப்பட்டு வருவது நாம் அனைவரும் அறிந்ததே!

கரும் மேகங்களைக் கொண்டு அதிகளவு மழைபொழியும் கார்காலத்தில் தீக்கதிரின் ஒளி போலப் பூத்துக் குலுங்கும் செங்காந்தள் பூக்கள் (கார்த்திகைப் பூக்கள்) அதிகம் மலரும் இம்மாதமானது கார்த்திகை மாதம் எனப் பெயர் பெறுகிறது. அம்மாதத்தில், திருக் கார்த்திகை திருவிழாவானது கார்த்திகை பௌர்ணமியில், சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்திற்கு அருகில் வரும் போது கொண்டாடப்படுகிறது. இக்கார்த்திகை திருநாளில் அண்ணாமலையாரின் ஆலயத்தில் ஆயிரக்கணக்கான திரு விளக்குகளால் கோவிலிலும் ஊரிலும் அலங்கரிக்கப்பட்டு இறைவனை நெருப்பின் வடிவாக வணங்குகிறார்கள். .

மேலும், இவ்விழாவைக் குறிப்பிடும் வண்ணமாக, அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தின் கருவறையின் தெற்கு சுவரில் உள்ள 'வீரபாண்டியன் தலை கொண்ட சோழ மன்னர் பரகேசரி மன்னன் கல்வெட்டு, இங்கு ஒரு விளக்கு வைப்பதற்காக 46 செம்மறி ஆடுகள் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட தகவல்கள் பதிவாகி உள்ளன. இது மட்டுமன்றி அதே சுவரில் உள்ள பரகேசரி வர்மனின் மூன்றாம் ஆண்டு கல்வெட்டு, ஒரு விளக்கு வைப்பதற்காக 90 ஆடுகள் அளிக்கப்பட்டதைக் குறிப் பிடுகிறது இதிலிருந்து, அக்காலத்திலேயே கார்த்திகை தீபத் திருவிழாவிற்காக வழங்கப்பட்ட தானங்களை நம்மால் அறியமுடிகிறது. மேலும், பிரசித்தி பெற்ற திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் கிடைக்கின்ற கல்வெட்டுகளில், சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகரப் பேரரசு, நாயக்கர்கள் காலத்தைக் குறிக்கும்



பல்வேறு கல்வெட்டுகள் இருந்தாலும் அதில் பெரும்பான்மையான கல்வெட்டுகளில், 'விளக்கு ஏற்றுவதற்கும் மற்றும் கோயில் பூஜைகளுக்கும்' வழங்கிய கொடைகள் பற்றிய குறிப்புகள் பல உள்ளன.

இதிலிருந்து, அக்காலத்திலேயே தீபத் திருவிழாவிற்காக வழங்கப்பட்ட தானங்களை நம்மால் அறியமுடிகிறது. மனித உடல் அமைப்பின் பிரதி பிம்பமாகவே ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட உலகப் பிரசித்தி பெற்ற திருவண்ணாமலை ஆலயத்தில் கார்த்திகை தீபத்திருநாளானது எவ்வளவு சிறப்புடன் கொண்டாடப்படுகிறது என்பதனைப் பற்றி அறிய உளி பேசும் மொழியுடன் தொடர்ந்து இணைந்திருங்கள்.

உளி பேசும் மொழி யானது, வருகிற கார்த்திகை பெரு விழாவிற்கு,

அனைவருக்கும் ல்திருக் கார்த்திகைத் திருநாள்ல் வாழ்த்துக்களைக் கூறி மகிழ்கின்றது.

(உளி பேசும் மொழி தொடரும்)

# உளி பேசும்மொழி பற்றிய கருத்துகள்

**1.**

ஆழ்ந்த நடை படிக்கும்போதே நேரில் பார்ப்பது போல் ஒரு நிறைவு, பாதாள லிங்கம், வளைகாப்பு மண்டபம், சிற்பங்கள் பற்றிய புதிய தகவல்கள்.. ஆர்வம் கூட்டுகிறது தங்கள் எழுத்து.. நேரே சென்று அண்ணாமலையாரை தரிசித்துவிட்டு வந்துவிடும் எனக்கெல்லாம் இவ்வளவு விஷயங்களை நேரில் கிடைக்காத ஏக்கத்தை தீர்த்து வைத்த கட்டுரை.



**திரு சி.பூவேந்தன்**
கவிஞர்,
எழுத்தாளர்,
(குமுதம் - பக்தி மலரில்... தொடர் பக்தி கட்டுரை
எழுதும் எழுத்தாளர் சார்)

**2.**

ஓவியங்களைப் பற்றிய தங்களின் கட்டுரை மிகச்சிறப்பாக உள்ளது, மிகத் துல்லியமாக ஆராய்ந்து வண்ணக்கலவைகளையும், கோவில் ஓவியங்களைப் பற்றியும் வர்ணனை அதி அற்புதம், இது கட்டுரை அல்ல பாடம் போல உள்ளது,
உங்கள் கட்டுரையிலிருந்து நிறைய விடயங்கள் நான் கற்றுக்கொள்கிறேன், நிறைய ஓவியங்களைப் பற்றி எழுதுங்கள்.
தங்கள் அர்ப்பணிப்புக்கு சிரம் தாழ்ந்த வணக்கங்கள் மற்றும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.



**Artindia Oviyan**
ஓவியர்.நெய்வேலி திரு. ரவிசந்திரன் சார் அவர்கள்,
(ஓவிய பயிற்றுநர்)

# வெண்பா போட்டி 47

## இனிமேல் (தனிச்சொல் வெண்பா)

**காலம் : நவம்பர் 2025**

பனிபடர்ந்த மாமலையில் பட்டகதிர் வெப்பம்
புனல்பெருகச் செய்திடுமே பூமி - இனிமேல்
உதவாதே என்பாரோ உண்மைவிவ சாயம்
அதிக விளைச்சல் தரும்.

**ப . முருகன் யோகீஸ்வரர்**

.

கனித்தமிழ்ப் பேச்சிருக்க காய்மொழிப் பேச்சேன்
தனித்தமிழ் ஒன்றே தரமாம் -இனிமேல்
வரும்நாளில் எல்லாம் வளங்கள்சே ரட்டும்
அருந்தமிழால் எல்லாம் அழகு!

**இராம வேல்முருகன் வலங்கைமான்**

.

தனியொருவன் செய்யும் தவறும் உலகில்
வினையாகிக் கேடும் விளையும் - இனிமேல்
நனிசிறந்த பேரறிஞர் நல்லவர் யாரும்
இணைந்துவழி காட்டல் இதம்

**பக்ருதீன் இப்னு ஹம்துன்**

.

நனிமிகுந் தாய்மொழி நற்றமிழ் ஒன்றே
கனிமொழிப் பேச்சினிற் கன்னல் - இனிமேல்
தனித்துவம் கொண்டும் தரமாய் இயங்கும்
இனியவை கூறும் இனித்து .

**சரஸ்வதி பாஸ்கரன் , திருச்சி .**

இனிமை நிறைவாய் இருந்திட வேண்டின்
தனிமை எதற்கு? தவிர்ப்பாய் - இனிமேல்
இணையம் புலனம் இவையெல்லாம் நம்மின்
இணையாம் உலகில் இயம்பு.

**ஓசூர் மணிமேகலை**

கனியாய் இனிக்கும் களிப்பு வளரும்
இனிமை உலகை இயக்கும் இனிமேல்
கனிவு பிறக்கும் கயமை மறையும்
பனியாய் விலகும் பகை.

**கவிஞர் க.தங்கவேலு** - கிருட்டிணகிரி

கனியிதழ் பேச்சும் களிப்புறும் கூத்தும்
நனித்தமிழ் கொண்ட நலனாம் - இனிமேல்
கனிச்சுவைக் கொண்ட கவினுறு பாக்கள்
தனித்தமிழ் கொண்டு இயற்று.

**சக்தி.க.மகராசி**

இனிமை பயக்கும் இயற்கை நமக்கு
தனிநிகர் தெய்வம் மனிதா - இனிமேல்
செயற்கை விரும்பும் செயலை விடுத்தால்
உயர்ந்திடும் வாழ்க்கை உணர்!

**அ.வள்ளிபாபு** - நெய்வேலி.

கனியும் செயல்கள் கடிதாய் முயல
பனியின் குளுமை படுத்தும்-- இனிமேல்
தமிழும் தினமும் தழைத்தே வளர
அமிழ்வோம் உழைப்பில் அறிந்து.

**பொ. முத்துராக்கு.**

இனிதுற என்னையும் ஏற்றிவைத்த தாயே
தனித்திருந்தும் நான்உன் தனயன் - இனிமேல்
இருக்கின்ற காலமெலாம் என்னுள் ஒளியாய்
அரும்வரம் தந்திடம் மா !

**எம்.ஆர்.தனசேகரன்** - மலேசியா.

கனித்தமிழ் கற்றவளே ! கண்களால் பேசும்
பனிமலர்ப் பாவையே ! பாரில் – இனிமேல்
இருவரு(ம்) ஒன்றாகி யின்பமது துய்த்தே
ஒருவராய் வாழ்வோ(ம்) உயர்ந்து .

**இரா . சம்பந்தன் - யேர்மனி**

கனிவாக ஆணும் கனவானப் பெண்ணும்
தனியாக இல்லாது சேர்ந்தார் – இனிமேல்
மனித மனத்திலே மாற்றமே காண
தனித்திருந்து வாழ்வாரே பார்.

**கு.கதிரேசன்**

இனிமேல் ஒழுங்காய் இருப்போமா சாதி
இனிமேல் இலையென்றிருப்போம் – இனிமேல்
உலகம் முழுதும் அறிவால் உவப்போம்
விலகும் பிரிவினைகள் வீண்.

**அன்புவல்லி தங்கவேலன்**

சனிபகவான் விட்டுவிடச் சாதுரியம் பெற்றேன்
மனிதன் தினமும் மருக – இனிமேல்
அருள்வான் எமக்கிங்கே ஆனந்தம் சேர்க்க
தருவாய் வழங்கிடும் தேன்

**பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை**

முனிக்குப் பலிகொடுக்கும் முட்டாள் தனத்தைப்
புனிதமாய் எண்ணிப் புகழ்வார் – இனிமேல்
இதுபோல் கொடுமை இரும்புவி கண்டால்
விதியதை மாற்றுவோம் வென்று !

**பாவலர் கோவதன்**

கனிவுடனே தூயதமிழ் கற்றிந்து காண
நனிநல்கும் நற்றமிழால் நாட்டில்... இனிமேல்
அணியழகு கொண்ட அழகுதமிழ் வாழும்
மணித்தமிழால் பேசு மகிழ்ந்து.

**பாவலர் தாழை நா இளவழகன்**

தனித்துவத்தைக் கொண்டிருக்கும்
தண்டமிழைக் கற்றால்
நனிச்சிறப்புக் கூடிவரும் நாளும்! – இனிமேல்
தமிழிலுள்ள நூலைத் தவறாமல் வாசித்(து)
அமிழ்தெடுத்த ருந்துவேன் ஆம்.

**மாலதி திரு**

.

தனித்தமொழிநம்மொழியாம்தாய்மொழி-வீணாய்
கனியிருப்ப வேண்டாம் காயும் – இனிமேல்
தவிர்த்திடுவோம் வேற்றுமொழி...
தண்டமிழ் பாடி
நவின்றிடுவோம் நம்மொழியை நாம்

**பாவலர்மணி வா.சண்முகம்**

.

பனிமழை தூவிடும் பாவையின் பார்வை
கனிமொழி கௌவிடும் காண்பாய் – இனிமேல்
வரும்வழி இன்பம் வரவினிற் சேர
அரும்பிடும் வாழ்வினில் அன்பு

**பிரியங்கா மோகன்** – பிரித்தானியா

புனித உறவுகள் பூத்திட வைப்போம்
மனிதம் வளர மதிப்போம் – இனிமேல்
தனியோர் உயிரையும் தாங்கி அணைப்போம்
இனித்திடும்பார் வாழ்க்கை இனி

**தனராஜ் பாப்பணன்** – கோவை

.

வனிதை மனதின் வனப்பை ரசிப்போன்
கனிரச முண்டுங் களிப்பான் – இனிமேல்
இனிமை நிறைந்திட எவ்வுயி ரெல்லாம்
வனிகையில் வாழ்தல் வனப்புமீ

**கவிஞர் வீக பொன்னையா**

பனியாகப் புல்லில் படரும் துளியே!
நுனிமேல் இருப்பேன்? நுவல்வாய்! - இனி மேல்
இலையென்றே யாகும் இடமென் இருக்கை!
தலையமர்வேன் கொள்வேனோ தாள்!

**சுந்தர ராசன்**

.

இனிமேல்யான் வெண்பா இயற்றுவது இல்லை
இனிமேல் விருத்தமும் வீண்தான் - இனிமேல்
புதுக்கவிதை யாத்துப் புதுக்குவேன், ஆனால்
அதுகவிதை அன்று .... கதை!

**முனைவர். சுந்தரராசன் தயாளன்,**
பெங்களூர்.

கனிவான பேச்சால் கருத்தறியா தாகி
தனியாய்த் திரிந்த துயரம்! - இனிமேல்
பனிபோல் விலகிப் பயனான வாழ்வில்
நனிநன்மை பெற்றால் நயம்!

**கீதா அருண்**

கனிரசம் என்றே கருதிக் குடித்தால்
தனிமரம் ஆக்கும் தரணி - இனிமேல்
குடியை மறந்து குடியை நினைத்தால்
விடியும் கிழக்கு விரைந்து.

**- சி. செல்லமுத்து**, - மேல்மங்கலம்..

பனிமொழிப் பார்வை பரிவுடன் பேச
வனிதைக் குழல்மணம் வீச - இனிமேல்
கனியிதழ் ஊறும் கருப்பட்டிப் பாகும்
நனிக்குளம் ஆகும் நயந்து

**க.சங்கரபாண்டியன்**

நனிதமிழ் பேசுங்கள் நற்றமிழ் நாட்டில்
கனிசுவை பாய்ந்திடும் காதில் - இனிமேல்
நுனிநாக்கில் ஆங்கிலம் நோக்காமல் பார்ப்போம்
தனித்தமிழ் ஓங்கும் தளிர்த்து

**இரா இரத்தினகுமார்**

கனிந்திடும் காதலென்றே காத்திருந்த பாவை
தனிமையில் வாட்டம் தவித்தே- இனிமேல்
வருவானா மீண்டும் வருத்தமதைப் போக்க,
வருமா வளமான வாழ்வு...!

**செண்பக ஜெகதீசன்...**

சினிமாவின் மோகம் சிரித்து மயக்க
தனிமனிதன் பின்னால் தவறி - இனிமேல்
நனிபுகழ் கொண்டாலும் நம்முடைய மானம்
குனியாது நேராக நில்.

**-சோ. சுந்தரேசுவரி**

மனிதன் மலரும் மனதில் மகிழ்வாய்
புனிதம் தினமும் நிறைவாய் - இனிமேல்
துயரம் தொலைவில் விரைவாய் மறையப்
பயமும் விலகும் எழு.

**- வாசுகி பிரபா -**

தொனியைக் குறைக்காமல் தூக்கியே பேசி
இனியபல நட்பை இழந்தேன் - இனிமேல்
குரலினைப் பண்பேற்றிக் கூட்டுவேன்நட்
பேதான் வரமாகும் என்றுமே வாழ்வு.

**அ. சி. தியாகராசன்**

.

இனிதான காதலினை ஏற்காமல் பெற்றோர்
முனிந்துகொலை செய்தல் முறையோ-இனிமேல்
மதம்சாதி பேசுவோர் மண்டை உடைத்தே
வதம்செய்வோம் வீதிக்கு வந்து !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**, ஒசூர்

குனிந்த உழவன் கழனி செழிக்க
கனிந்திட்ட வாழ்வே இனிக்கும் - இனிமேல்
புனித உழவினால் பூத்துக் குலுங்கப்
பனியாய் மறைந்திடும் பார்

**கவிஞர் கவி நிலா மோகன்** - தஞ்சாவூர்.

இனியதா யில்லை இருக்க மருந்தை
முனியாது உட்கொள்ள முந்தி -- இனிமேல்
பிணியாவும் தன்னாலே பின்னேறி யோடும்
தணியாத சோர்வைத் தணித்து.

**ரசியா கஸ்ஸாயி**

கனியிருக்க வேண்டுவதேன்
காய்கவரல்? தெய்வத்
தனிப்புலவன் நல்லுரையைத்
தாங்க - இனிமேல்
விளைவதெல்லாம் நன்மகிழ்வே
விண்ணதிரப் போற்றிக்
களைவேன் சழக்குகளைக்
கண்டு

**விசு. இம்மானுவேல்** - பெங்களூரு



# வெண்பாப் போட்டி (பயணம்) 48

**போட்டியின் கால அளவு : டிசம்பர்ர் 01 முதல் 12 வரை 2025**

இம்மாதப் போட்டி....

.

ஒரு பள்ளி மாணவனோ மாணவியோ அனைத்து பாடங்களிலும் 80,90 என அதிக மதிப்பெண்ணும் ஏதோ ஒரு பாடத்தில் மட்டும் மிகக் குறைந்த மதிப்பெண்ணும் எடுத்துள்ளார்.....

ஏன் அதில் மட்டும் மதிப்பெண் குறைந்துள்ளது என்று....

அந்த மாணவர் அல்லது மாணவியின் ஆசிரியரோ அல்லது பெற்றோரோ....

கேட்பது போல ஒரு வெண்பா எழுதுவதே இம்மாதப் போட்டி ஆகும்.

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

**எ-கா பாடல்....**

தொண்ணூறும் நூறென்றும் தூயதமிழ்ப் பாடத்தில்
எண்ப தெழுபதென என்றாலும் - இன்றளவும்
இந்தவொரு ஆங்கிலத்தில் ஏன்மதிப் பெண்குறைவாய்
வந்ததெனச் சொல்லிங்கே வந்து

நன்றி🙏

**பொதுவான விதிகள்** :- ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

**அசத்துங்கள் கவிஞர்களே....**

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் ப ட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகி ருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்.

தளர்வுகள் :-

தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டா யம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல் பான வார்தைகளோ, அல்லது வட்டா' வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....

**தமிழ்நெஞ்சம் ஆசிரியர்**

மற்றும்

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

# மரவெட்டியின் வேண்டுதல்



மரம் வெட்டும் தொழிலாளி ஒருவன், மரத்தில் ஏறி விறகு கட்டைகளை வெட்டுவதை வாடிக்கையாக கொண்டிருந்தான். ஒருமுறை மரத்தில் ஏறியவன் கிளைகளை வெட்டிக் கொண்டே மேல் நோக்கி சென்றான். சிறிது நேரத்தில் மரத்தின் உச்சிக்கு சென்றுவிட்டான். அப்போதுதான் கீழே கவனித்தான். கால் வைத்து இறங்குவதற்கு கூட கிளை இல்லாமல் எல்லாவற்றையும் வெட்டிவிட்டு மேலே சென்றிருந்தான்.

அந்த உயரத்தில் இருந்து கீழே பார்ப்பதற்கு அவனுக்கு பயமாக இருந்தது. கீழே இறங்க முடியாதே என கவலைப்பட்ட அவனுக்கு பயம் குடலைப் புரட்டியது. உடனே கடவுளிடம் வேண்டினான். கடவுளே, நீ என்னை பத்திரமாக தரையிறக்கினால், நான் என் பசுவை உன் கோவிலுக்கு தானமாக தருகிறேன் என்றான். வேண்டிக்கொண்டிருக்கும்போதே லேசாக சறுக்க, மரத்தில் இருந்து வழுக்கி சற்று கீழே வந்தான்.

இப்போது முன்புபோல உயரம் தெரியவில்லை. இப்போது அவனுக்கு கொஞ்சம் தைரியம் வந்தது.

பசு இல்லை கடவுளே, நான் உனக்கு எனது ஆட்டைத் தருகிறேன் என மீண்டும் வேண்டினான். இப்போதும் சறுக்கியது. இன்னும் கீழே வந்தான். ஆட்டை என்னால் தர முடியாது கடவுளே, நான் உனக்கு கோழியை தருகிறேன் என்றான். மீண்டும் சறுக்கி வழுக்க, ரொம்பவே கீழே இறங்கிவிட்டான். இப்போது அவனுக்கு பயம் போய்விட்டது. என்னால் கோழியும் தர முடியாது கடவுளே, நான் உனக்கு ஒரு முட்டையை படைக்கிறேன் என்றான். இப்போதும் சறுக்கல் எடுக்க இன்னும் கீழே இறங்கினான். இப்போது அவன் தரையில் இருந்து சில அடிகள் உயரத்தில் இருந்தான்.

உடனே அவன், உனக்கு எதையும் தர முடியாது கடவுளே, நானே கீழே இறங்கிக் கொள்கிறேன் என்று மரத்தில் இருந்து கீழே குதித்தான். விறகு கட்டைகளை பொறுக்கிக் கொண்டு மகிழ்ச்சியாக பாடிக்கொண்டு வீடு திரும்பினான். பயம் விலக விலக மனிதனின் நடவடிக்கைகள் படிப்படியாக மாறி விடுகின்றன.

**கோவிந்தராஜன்**

# விழு அழாதே - எழு

பூவும் ஒருநாள் கனியாகும் - நம்
கனவும் ஒருநாள் நனவாகும்
தோல்வி எம்மை எதிர்த்தாலும்
முயற்சி எமக்கு துணையாகும்....!

விழுந்தால் அழுது பயனில்லை
நனிந்தே சென்று வென்றிடுவோம்.
கண்ணில் சிந்தும் கண்ணீரை
விண்ணின் ஒளியாய் மாற்றிடுவோம்...!

குமிழைக் கண்ட எடிசன் போல்
கீழே பலமுறை விழுந்தாலும்
துணிவுடன் எழுந்து நின்றிடுவோம்
சாதனை உலகில் பெயர்பதிப்போம்...!

எம்மை என்றும் எதிர்ப்போர்க்கு
ஏற்ற பதிலடி வழங்கிடவே
ஐயம்இன்றி செயற்படுவோம்
விழுந்தால் எழுந்து நின்றிடுவோம்..!

சாதனை படைத்த தலைவர்களுள்
பலரும் தோல்வியைக் கண்டவரே!
தோல்வியைக் கண்டு துவண்டிருந்தால்
இன்று அவர்களை நினைவுகூருவோமா?

இனிதே உலகில் உயர்வதற்கு
அனுபவம் நிச்சயம் அவசியமே
தோல்வியைக் கருவியாய் மாற்றிடுவோம்
வெற்றிப் பாதையில் பயணிக்கவே!!!



**அஸ்மா அன்வர்**
இலங்கை

# கலங்காதே கண்ணம்மா

துள்ளி ஓடும் கண்ணம்மா
உன் கண்ணில் கண்ணீர் ஏனம்மா?
குறைகளை கண்டு கலங்காதே
குறையும் நிறைதான் வருந்தாதே!

வெண்ணிற மேகம் கருத்தது
வான் மழை எங்கும் கொட்டியது!
கூட்டுப்புழுவும் சுருங்கியது
பட்டாம் பூச்சியாய் பறந்தது!

மின்னல் மண்ணில் முட்டியது
காளான் அங்கே பிறந்தது!
ஜன்னல் கொஞ்சம் திறந்தது
அதில் பரந்த வானம் தெறிந்தது!

பசுவின் மடியோ கனத்தது
கன்றின் வயிறோ நிறைந்தது!

முட்டையின் உள்ளே உடைந்தது
அழகிய குஞ்சும் பிறந்தது!
விதையும் மண்ணில் புதைந்தது
மரமும் ஒன்று துளிர்த்தது!
நெல்லும் ஆலையில் வெந்தது
நாம் உண்ணும் உணவாய் வந்தது!

இடர்களை கண்டு கலங்காதே
புது விடியலும் பிறக்கும்
வருந்தாதே!

**ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்**

செங்கோட்டை



# குயிலும் சிங்கராஜாவும்

**தமிழ்ச்செம்மல் ஓசூர் மணிமேகலை**

அன்று சிங்கராஜாவுக்குப் பிறந்த நாள். காடே கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது. வரிக் குதிரையும், ஒட்டகச் சிவிங்கியும், யானையும், குரங்கும் மரங்களில் விளக்கு அலங்காரங்கள் செய்தன.

காட்டிலுள்ள அனைத்து விலங்குகள், பறவைகளுக்கு அழைப்பு விடப்பட்டன. காட்டின் நடுவே சிங்க ராஜாவிற்கு ஒரு மேடை அமைக்கப்பட்டு பழ வகைகள், எல்லோருக்கும் கொடுக்க வேண்டிய பரிசுப்பொருள்களெல்லாம் அழகாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. சிங்கராஜாவும் ராணியும் பளபளவென்று பட்டாடை அணிந்து கம்பீரமாக மேடையில் நின்று அனைவரையும் வரவேற்றுக் கொண்டிருந்தன.

விலங்குகளும், பறவைகளும் வித



விதமாகத் தங்களை அலங்கரித்துக் கொண்டு கூட்டங்கூட்டமாகச் சென்று கொண்டிருந்தன. அவைகளைப் பார்த்தபடி மரக்கிளையில் 'உம்' மென்று அமர்ந்து கொண்டிருந்தது குயில்.

வண்ணத் தோகையை அழகாக ஆட்டிக்கொண்டு பெருமையாக நடந்தது மயில். கழுத்தில் அதன் நிறத்திற்கேற்ப வண்ண மாலை. அதனுடன் வெள்ளை முயல்குட்டி 'ஜம் 'மென்று கழுத்தில் சிவப்புப் பட்டை அணிந்து துள்ளிக் குதித்து ஓடியது. அதற்குப் பின் புள்ளி மானும், குள்ள வாத்தும் கழுத்தில் குட்டிச் சலங்கை மணியை ஆட்டிக்கொண்டே மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டு சென்றன. அதோ.. பெரிய சலங்கைச் சத்தம்... குயில் தலையை உயர்த்தி தூரத்தில் பார்த்தது. நான்கு கால்களிலும் கொலுசு அணிந்து கொண்டு அசைந்தாடி வந்து கொண்டிருந்தது யானை. அதன் பின் வண்ணமடித்த கொம்புகளில் குஞ்சலம் கட்டிய மாடும் அதன் கன்றும்... பச்சைக் கிளி, புறா சிறகடித்துப் பறந்தன. கழுகும், பருந்தும் அவைகளுக்கு மேலே பறந்தன. சிறிய, பெரிய விலங்குகள், பறவைகள் அனைத்தும் மகிழ்வாக சிங்கராஜாவின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்குப் போகையில், குயில் மட்டும் மிகச் சோகமாக



ஏக்கத்துடன் அமர்ந்து இருந்தது.

‘எனக்கு மட்டும் ஏன் இந்தக் குறை. .என்னை மட்டும் கடவுள் ஏன் கறுப்பாகவும், குட்டியாகவும் படைத்தார்.. குருவி கூட குட்டியாக இருந்தாலும் கறுப்பாக இல்லையே.. நான் எப்படி அலங்காரம் செய்து கொள்வது...' என்று தனக்குத் தானே புலம்பிக்கொண்டு தவித்தது குயில்.

அப்போது காகம் ஒன்று பறந்து வரவே 'இது கூட கறுப்புதான்.. ஆனா..என்னைவிடப் பெரிதாக இருக்கிறதே...' என்று கவலைப் பட்டது குயில்.

‘என்ன..குயிலக்கா.. நீ வரலையா..

‘இல்ல..'

‘ஏன்...'

‘எனக்குப் பிடிக்கலே...எல்லாரும் அழகா.. இருக்காங்க.. நான் மட்டும் கறுப்பா.. குட்டியா இருக்கேன்...' கண்கலங்கக் குயில் கூறியது.

‘அட.. நான் கூட கறுப்புதான் ..' காகம் சிரித்தது.

‘ஆனா... நீ உருவத்துல என்னை விடப் பெருசா இருக்கியே...'

‘சரிதான்...கடவுள் படைச்சத மாத்த முடியுமா.. தேவையில்லாம குழம்பிக்கிட்டு இருக்க... சரி.. சரி நேரமாச்சு..நான் போறேன்..' கா.. கா..என்று கத்திக் கொண்டே காகம் பறந்தது.

‘இது பேருக்கு ஏத்த மாதிரி சிங்க ராஜாவ காக்கா பிடிச்சு.. சாதிச்சிடும்... ம்...' என்ற குரல் கேட்டுக் கீழே குனிந்து பார்த்தது குயில்.

‘அட..நரி அண்ணா நீங்களா...'

‘ஆமா.. நீ வரலைன்னா சிங்கராஜா கோவிச்சுக்கிட்டு தண்டனை கொடுத்துடுவாரு...அதுக்கு பயந்துதான் நானே.. போறேன்..' என்று தலையை நிமிர்த்திக் கூறி விட்டு நரி வேகமாகச் சென்றது.

‘தந்திர நரியாக இருந்தாலும் அது சொல்றது சரிதானே.. ஏன் சிங்க ராஜா கோபத்துக்கு ஆளாகனும்..' என்று நினைத்த குயில், என்ன அலங்காரம் செய்தாலும் தன் கறுப்பு நிறத்திற்கு எடுபடாது என்று எண்ணியபடி தாழ்வு மனப்பான்மையுடன் மெதுவாகப் பறக்க ஆரம்பித்தது.

காட்டின் நடுவே பெரிய மேடையில் சிங்க ராஜாவும் ராணியும் கம்பீரமாக நிற்க, அனைத்து விலங்குகளும், பறவைகளும் தரையில் கூட்டமாக அமர்ந்து கொண்டு சிரித்துப் பேசிக்கொண்டிருந்தன. குயில் கூட்டத்தின் கடைசியில் அமைதியாகப் போய் நின்றது. மேடையும் சரியாகத்

தெரியவில்லை. எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

‘சிங்க ராஜாவை மகிழ்விக்க யாராவது மேடையில் வந்து பாடவேண்டும். அதன்பின் உங்களுக்கு பழங்கள், உணவு வகைகள், பரிசுகள் அளிக்கப்படும்...' என்று தொகுப்பாளர் கரடி அறிவித்தது.

விலங்குகள் ஒவ்வொன்றும் மற்றதன் முகத்தைப் பார்த்துக் கொண்டன. முன் வரிசையில் அமர்ந்திருந்த மயில் தொண்டையைச் செருமிக் கொண்டது. உடலின் அழகு குரலில் இல்லையே... ஒவ்வொரு விலங்கும், பறவையும்



திரு திருவென்று முழித்துக் கொண்டிருந்தது. பாடும் அளவிற்கு திறமை இல்லையே.. என்ன செய்வது என்று குழப்பம்..

‘யாருமே இல்லையா..' சிங்கராஜா கர்ஜித்தார் .

கடைசி வரிசையில் இருந்த குயில் யோசித்தது. 'எனக்குத்தான் பாட முடியுமே.. நான் போகலாமே..' என்று தைரியமாக மேடை நோக்கி நகர்ந்து மேடையில் ஏறியது. சிங்கராஜாவும் ராணியும் தலையைச் சாய்த்துக் கண்ணைச் சுருக்கிக் குயிலைப் பார்த்தனர். அனைத்து விலங்குகளும் கிண்டலாகச் சிரித்தன. குயில் குரலெடுத்து ‘குக்கூ...' என்று பாட ஆரம்பித்தது.

‘ஆகா...' என்று சிங்க ராஜாவும் ராணியும் கைதட்டியதும் கூட்டமே கை தட்டியது. குயில் தன்னம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் தொடர்ந்து பாடியது. பாடி முடித்ததும் கைத்தட்டலில் காடே அதிர்ந்தது.

‘மிக அருமை.. அற்புதம்..’ சிங்க ராஜாவும் சிங்கராணியும் குயிலைத் தட்டிக் கொடுத்தன. சிங்கராஜா விலை உயர்ந்த மணிமாலையைக் குயிலின் கழுத்தில் அணிவித்து 'இன்று முதல் ‘இசையரசி ‘என்ற பட்டம் வழங்குகிறோம்' என்று கூறியதும் கைதட்டல் விண்ணைப் பிளந்தன.

திறமைக்குப் பேதமில்லை. தன்னம்பிக்கையும் திறமையும்தான் நம்மை உயர்த்தும் என்று குயிலும் உணர்ந்து கொண்டது. மற்றவர்களுக்கும் உணர்த்தியது.

ஆம் குழந்தைகளே.... தாழ்வு மனப்பான்மை கூடாது. நம் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் . தன்னம்பிக்கையை உயர்த்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் வெற்றி நம்மைத் தேடி வரும்.

# அலட்சியத்தால் விழுந்த அடி



ஒரு ஊருல ஹம்ருதான்னு ஒரு பாப்பா இருந்தாளாம். ஒன்றாம் வகுப்பு படிக்கிறாளாம். அவ அன்னிக்கு காலையில அவசர அவசரமா கௌம்பி ஸ்கூலுக்குப் போனாளாம். ப்ரேயர்லாம் முடிஞ்ச பிறகு அவளுக்குப் பாட வகுப்புகள் ஆரம்பமானது.

'எல்லாரும் நோட்டை எடுத்து எழுதுங்க' என ஆசிரியர் சொல்லிவிட்டு பாடத்தை கரும் பலகையில் எழுதிக் கொண்டிருந்தார். அனைவரும் எழுத ஆரம்பிக்க, ஹம்ருதா மட்டும் பென்சிலைக் காணாமல் தேடிக் கொண்டிருந்தாள்.

பின்பு தான் அவளுக்கு நினைவு வந்தது. முதல் நாள் வீட்டுப் பாடங்களை முடித்து விட்டு பென்சிலை வீட்டிலேயே வைத்து விட்டு வந்தது. 'காசினி நான் பென்சில் கொண்டு வர மறந்துட்டேன். நீ ரெண்டு பென்சில் வச்சிருக்க தானே. எனக்கு ஒண்ணு குடேன்' என அவள் தோழியிடம் கேட்க 'நான் ஒண்ணு தான் வச்சிருக்கேன்' னு சொல்லிட்டா காசினி.

'ஏய் எழுதாம அங்க என்ன பேச்சு?' என ஆசிரியர் கேட்க 'ஹம்ருதா பென்சில் கொண்டு வரலயாம் மிஸ்' என்று காசினி ஆசிரியரிடம் சொல்லி விட்டாள்.

'என்ன ஹம்ருதா பென்சில் கொண்டு வரலயா?'

'ஆமா மிஸ்'

'ஏன்?'

இவள் அமைதியாக நிற்கவே மீண்டும் கேட்டார் ஆசிரியர்.

'ஹோம்வொர்க் எழுதும் போது எங்கேயோ வச்சிட்டேன் மிஸ்' என பயந்து கொண்டே இவள் பதில் சொன்னாள்.

'ஏன் முதல் நாளே எல்லாத்தையும் எடுத்து வைக்கும் போதே, செக் பண்ணிட்டு தான் பையை மூடி வைக்கணும்னு சொல்லி இருக்கேன்',

'நீ பண்ணலயா?' எனக் கேட்டு ஒரு அடி வைத்தார் ஆசிரியர்.

பின்பு வேறு ஒரு மாணவனிடம் பென்சில் வாங்கி தந்து விட்டு 'இனிமேல் எல்லாத்தையும் எடுத்து வச்சிட்டோமான்னு கரெக்டா செக் பண்ணணும் சரியா?' என்று விட்டு பாடத்தைத் தொடர்ந்தார்.

'அச்சோ அம்மாவும் இதையே தான் தினமும் சொல்வாங்க. பேச்சு கேட்டிருந்தா அடி வாங்காம இருந்திருப்போம்' என நினைத்தபடியே ஹம்ருதாவும் பாடத்தை கவனிக்கத் தொடங்கினாள்.



**பி. ரிதன்யா**
ஒன்றாம் வகுப்பு
முசிறி

# சிறகுகள் சிறைபடுவதில்லை



## இளங்கோ

கடையடைத்து மதியம் உணவுக்கு வீடு வந்த இளங்கோ அங்கு கோபால் மாமா ஏதோ படு குஷியாக அம்மாவிடம் பேசிக் கொண்டு இருப்பதைப் பார்க்கிறான்.

பார்வையில் கேள்வியுடன் உள்ளே வந்து வாசலில் மிதியடியை கழட்டிய இளங்கோவை அவர் பார்த்து‘ வாங்க மாப்பிள்ளை‘ என்றார்..

புரியாது விழித்த இளங்கோவை பார்த்து‘ சுபம் சீக்கிரம்‘ என்றார்.. நமது காதல் விவகாரம் இவருக்கு தெரிய வந்துவிட்டதா? என்று ஒரு நிமிடம் மனம் சந்தோசிக்க அது அற்ப ஆயுளில் முடிந்தது.

இவர் சின்னபண்ணை மகள் கயலுக்கும் தனக்கும் மணம் பேச வந்துள்ளார் என்பது தெரியவர இளங்கோவின் மனமுடைந்துப் போனது..

அவர் கிளம்பியதும் இளங்கோ ‘அம்மா இது நடக்காது ‘ என்றான்.

‘சிறுவயது திருமணம் செல்லாது இளங்கோ மேலும் இருவீட்டாரும் ஜன்மப் பகை கயலுக்கு 19 வயசாச்சுத அடுத்தவள் அல்லிக்கு 18 வயசுத பெரியவள் நகர்ந்தால்தானே இரண்டாமவளுக்கு நல்லது நடக்கும்‘என்றார்.

அம்மா என்ன சொன்னாலும் நான் இதற்கு சம்மதிக்க மாட்டேன்.



துயில்.மு.இரசியா பேகம்

ரொம்ப என்னை கட்டாயப் படுத்தினீங்கனா நான் இராணுவத்தில் சேர்ந்துவிடுவேன்.. என்று கோபமாக சொல்லி உணவு அருந்தாமல் வெளியேறி சந்திரனை நாடி வந்தான்.

இளங்கோவை கண்டதும் ஆரத் தழுவிய சந்திரன் 'என்னடா' என்றான்

'இளங்கோ எனக்கு மணம் பேசுகிறார்கள்' என்றான்.

'கங்கிராட்ஸ் டா

எப்போடா.'.. சந்திரன்

'பெண் யாருன்னு கேளடா'...இளங்கோ

யாருடா?...சந்திரன்

கயல் சின்ன பண்ணை மகள்டா

சற்றுத் தயங்கி சட்டென்று நிமிர்ந்த சந்திரன்

இளங்கோவின் சட்டையை கொத்தாக பிடித்தான்.

தட்டித் தள்ளி நிறுத்திய இளங்கோ

'சந்திரா இதற் கென்ன அர்த்தம்டா என்றான்..

திடுக்கிட்ட சந்திரன் ...

மறுநாளில் இருந்து எதிர்த்த வீட்டை நோட்டம் விட,

கயல் தன் அம்மாவுடன் கோயிலுக்கு கிளம்புவதைப் பார்த்தான்.

தானும் டீக்காக டிரெஸ் பண்ணிக் கொண்டு கிளம்பி விட்டான்.

கயலின் அம்மா யாருடானோ பேசிக் கிட்டு இருக்க கயல் தனியாக குளத்தருகில் வந்து...

படித்துறையில் அமர்ந்து.. ஏதோ மீன்களுடன் பேசிக் கொண்டிருந்தாள்...

'மீனோடு மட்டும் தான் பேசுவாயா?'

என்று கேட்ட வண்ணம் அருகில் அமர்ந்தார் சந்திரன்.

சட்டென்று எழ நினைத்தவளை தோளைப்பிடித்து அமர்த்திய சந்திரன். 'நமக்கு நேரமில்லை உனக்கு மாப்பிள்ளை பார்ப்பதை அறிந்தேன். உனக்கு அதில் சம்மதமா சொல் நான் என் வழி போகிறேன்'

ஒடுங்கி நடுங்கி தலைகுனிந்திருந்தக் கயலின் முகத்தை நீர் பிரதிபலிக்க அவள் முகத்தை முதன் முதலில் நன்றாகப் பார்த்தார்,சந்திரன்.

குடும்பப்பாங்கான கிராமப்புறப் பெண். எது இவரைக் கயலிடம் கட்டிப் போட்டது என்றும் தெரியவில்லை.

'பதில் சொல்கிறாயா? இல்லை கிளம்பவா? 'என்றார்.

சட்டென்று தனது தாலியை வெளியே எடுத்தக் கயல்' 'பெண்ணுக்கு தாலி ஒருமுறைதான்' என்றும் சொல்லி விருட்டென்று எழுந்தாள் கயல்.சந்திரன் கையைப்பிடிக்க எத்தனிக்க உதறிவிட்டு சிட்டாகக் பறந்துவிட்டாள் கயல்.

சந்திரனுக்கு ஏனோ முறுவல் வந்தது.

அங்கே குளத்தோரம் ஆரை கீரைகளை பார்கிறார்.ஆங்கிலத்தில் 4 **leaf clover** என்பர் இது ஒருவகைத் தாவரம் கிளாவர் செடியின் இலைகள் 3 றாக இணைந்திருக்கும் எங்காவது அதிசயமாக 4 இலைகள் சேர்ந்து இருக்கும்.அப்படி 4 இலைகளை சேர்ந்து பார்ப்பது அதிர்ஷ்டம் என்பர். ஆனால் ஆரைகள் அனைத்தும் 4 இலைகளுடன் அங்கு காற்றில் ஆடியது...ஆகா நமக்கு இனி அதிர்ஸ்டமோ! அதிர்ஸ்டமென நினைத்தார்(இனி சந்திரன் கயலுக்கு 'அவர்' நாமும் அவரென்போம்)

## 19. கயல்

மனமெல்லாம் மத்தாப்பூவாக இருந்தது. ஆனால் மிகப் பெரிய குற்ற உணர்வு அவளை அழுத்தியது.

கயலுக்கு வேறுயாரையும் கல்யாணம் பண்ணிக்கும் எண்ணமில்லை. ஆச்சு கயலுக்கு 19 வயது. தங்கை அல்லிக்கு 18 வயது.தான் நகர்ந்தால்தான் அல்லிக்கு திருமணம்.

எதிர்த்த வீட்டாரை பழி தீர்க்க தயாராக இருக்கும் இவர்கள் நாளை என்ன செய்வார்கள் என்று தெரியவில்லை .தவறுக்கு தவறேத் தீர்வாகாது.

தேசிங்கு ராசா மாதிரி என்னை சிறை எடுத்து செல்வாரா சந்திரன்?.

அது எப்படி முடியும் ? சரித்திரக் காலத்தில் தான் அதெல்லாம் சாத்தியம். அப்படி ஏதாவது நடந்து அங்குப் போனால் எனக்காக பழிவாங்கும் சபதத்தை விடுவார்கள், இருக்குடும்பத்தையும் காப்பாற்றலாம்,

இந்த வீட்டு பெண்களுக்கும் வாழ்க்கை அமையும்,.தனது கற்பும் காக்கப்படும், என்று கற்பனையில் இருந்தாள் கயல்.

பலவாறாக நினைத்து நினைத்து நைந்துப் போனாள் கயல்.

அவளுக்கு சேதி வந்தது....

## 20. சந்திரன்

சந்திரன் அம்மாவிடம் எல்லாவற்றையும் சொல்ல அம்மா நினைத்தார்கள் விதி வலியது என்று....

சந்திரனும் கயலும் அவர்களுக்கு இரண்டு கண் போன்றவர்கள்.

இருவருமே எங்காவது நன்றாக இருக்கவேண்டும் என்று விரும்பினார்கள்.

ஆனால் விதி வலியது...

ஆண்டவன் நாட்டம் வேறுமாதிரி இருந்தது.

கணக்குப் போடுவதில் ஆண்டவனுக்கு நிகர் யார்?

பானு தனது மூத்த பிள்ளை சனாவை அழைத்து விசயத்தை சொல்ல,அவர் தனது மனைவியிடம் கலந்தாலோசித்தார்.பின்னர் ஒரு வேலைக்கார பெண்ணை தேர்ந் தெடுத்தார்கள். சந்திரனை விட்டு ஒருகடிதம் எழுதி அவளிடம் கொடுத்து கயலிடம் சேர்க்க சொன்னார்கள்.

முதல் கடிதம்..

கயலுக்கு இதயத் துடிப்பு மிக அதிகமானது..

அன்பு மனைவிக்கு ,

நாம் வாழ்க்கை தொடங்க வேண்டும். உனக்கு சம்மதமா?த ஆம் மென்றால் எனக்கு சம்மதம் என்று எழுதி அனுப்பு

அன்புடன்,

சந்திரன்

இதுவரை ஆயிரம் தடவைக்கு மேல் படித்துவிட்டாள் குளியலறையில் தான்..

தம்பியிடம் ஒரு தாளை சம்பாதித்து இரண்டுப்பக்கமும் கூர் தீட்டிய ஒரு இஞ்சி பென்ஸிலால் யோசித்து யோசித்து ‘ஆம் ‘ என்று அஸ்ட கோணலாக எழுதி பின்னர் அதே பெண்ணிடம் தந்து அனுப்பிவிட்டாள் கயல்.

பின் நிம்மதியை தொலைத்து அரை பைத்தியமாக நடமாடினாள்...கயல்...

**தொடரும்**




# பிரிவின்றிய தூய அன்பின் நேசம்


ரஸ்னா ரம்ஸான்
இலங்கை , அக்குறணை


(ஐஸ்வர்யா ஹோட்டல் மேனேஜர் மஹிராவுடன் சமையலறைப் பக்கம் சென்ற பிறகு, மற்றவர்கள் பிரதான வாயிலுக்குள் நுழைகின்றனர்.) ராகினி, பிரியா, அருணா, சாலினி மற்றும் அவினாஷ் என அனைவரும் ஹோட்டலின் பிரம்மாண்டமான நுழை வாயிலைக் கடந்து, வெள்ளி மற்றும் நீல நிற அலங்காரங்கள் மின்னும் மண்டபத்திற்குள் அடியெடுத்து வைத்தனர். மண்டபத்தின் விண்ணுலக அழகு அவர்களை ஒரு கணம் மெய் மறக்கச் செய்தது.

பிரியாவும், சாலினியும் அந்த அலங்காரங்களின் நேர்த்தியைப் பற்றி மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டே முன்னோக்கிச் சென்றனர். அவினாஷ் அவர்களைத் தொடர்ந்து கொண்டே பார்வையால் அஷ்வினை தேடிய படி சென்றான். அருணா வழக்கம் போல் அமைதியாக, ஆனால் புன்னகையுடன் அனைவரையும் பின்தொடர்ந்தாள்.

ஆனால் ராகினி... அவள் ஒருபோதும் இவ்வளவு ஆடம்பரமான இடத்தைக் கண்டதில்லை. கூரையிலிருந்து தொங்கிய ஸ்படிக லுமினியர்களையும், சுவர்களில் இருந்த ஐஸ் ப்ளூ திரைச் சீலைகளையும், தரையில் பதிக்கப்பட்டிருந்த வெள்ளி நிறப் பூவேலைப்பாடுகளையும் வியந்து பார்த்துக் கொண்டே நடந்தாள்.

அவளது கவனம் முழுவதும் கூரையிலிருந்த மின்னும் கற்களிலிருந்தால்

கீழே கிடந்த ஒரு நீளமான அலங்காரத் துணியின் நுனியில் அவளது கால் சிக்கியது.

'ஐயோ!' என்று அவள் உள்ளுக்குள் அலறினாள். சமநிலையை இழந்தவள், தடுமாறித் தரையில் விழும் தருவாயில் இருந்தாள்.

சட்டென்று, அவளை தாங்கியது ஒரு வலிமையான கரம்

ராகினி, தடுமாறி கண்களை மூடித் திறந்தாள் அவள் நிமிர்ந்து பார்த்தபோது, அங்கே முகம் முழுவதும் முறைப்புடன் ரிஷாந்த் நின்றிருந்தான்.

ரிஷாந்த்' நீ என்ன சின்ன புள்ளயா ரோட்ல தான் விழ பார்த்தைன்னா இது ஹோட்டல் இங்கயும் விழ பார்க்குற ஒரு வேல என்ன மயக்குறதுக்கு தான் இப்டிலாம் பன்றயோ?'

அவனிடமிருந்து விலகியவள்

ராகினி 'ஹலோ மிஸ்டர் அப்டிலாம் ஐடியா எனக்கில்ல '

ரிஷாந்த்' அப்டின்னா எதுக்கு என் முன்னாடியே வந்து விழுற'

ராகினி' கோ இன்ஸிடன்ட் அவ்ளோ தான்'

ரிஷாந்த் ' வட் நீ இந்த மாதிரி ரிச்சான ஹோட்டல பார்த்து இல்லயா இப்டி வாய பிளந்து பார்த்துனு இருந்தியே.

ராகினிக்கு கோபத்தில் வாய் அடைத்துப் போனது. தன் நிலைமையைப் பற்றி அவன் இப்படிப் பேசுவது அவளுக்கு அவமானமாக இருந்தது

ராகினி' போதும் நீங்க அக்காவோட ப்ரன்ட்ங்குறதால தான் அமைதியா பேசிட்டு இருக்கன் உங்ககிட்ட பேசுறக்கும் பதில் சொல்றதுக்கும் எனக்கு எந்த அவசியமும் இல்ல வழி விடுங்க

எனக்கூறிவிட்டு தன் நண்பிகளை நோக்கி செல்ல ரிஷாந்த் முகத்தில் இருந்த முறைப்பு மறைந்து புன்னகையுடன் அவள் போவதையே பார்க்கிறான் மண்டபத்தின் மற்றொரு புறத்தில், நிகழ்வு ஏற்பாடுகளைச் சரிபார்த்துக் கொண்டிருந்த அஷ்வின், ராகினி மற்றும் ரிஷாந்த் இடையேயான சலசலப்பைக் கவனித்தான்.

ராகினியின் சத்தமும், தன் நிலையில் இருந்து ஒருபோதும் விட்டு கொடுக்காத அந்தப் பிடிவாதமான துள்ளலும், அவனது மனதின் மிகவும் ஆழமான, இருண்ட மூலையில் உறைந்திருந்த ஒரு நினைவைச் சுண்டி எழுப்பியது.

அவனது கண்களுக்கு முன், ராகினி தெரியவில்லை. மாறாக, அவளது இடத்தில் வேறு ஒரு பெண் தோன்றினாள்.

அது, அஷ்வினின் வாழ்வில் இருந்து எதிர்பாராத விதமாக விலகிச் சென்ற, அவனது இளமைக் காலத்தின் துணை. அவளும் இதேபோலத்தான் இருந்தாள் அஷ்வின் எதற்குக் கட்டுப்பாடு விதித்தாலும், அதைச் சிரிப்பொலியிலும், கேள்வியிலும் உடைத்தெறிந்தவள். அவளது துள்ளலும், பிடிவாதமான ஆக்ரோஷமும், அஷ்வினின் மனதில் ஆழமான, துக்கமான ஒரு வலியை ஏற்படுத்தியது. ராகினியின் சத்தம், அவனது கடந்த காலத்தின் துக்கத்தைத் தூண்ட, அவன் உடனடியாகத் தனது பார்வையை விலக்கி அந்த நினைவை ஒதுக்கி அவசரமாக சமயலறை நோக்கி விரைந்தான்.

அவன் சமயலறையை நெருங்க நெருங்க இனிமையான உணவின் வாசனை அவனை ஈர்க்க அவனது கால்கள் வேகமாக நடந்தன

கோட்டும், அதன் கம்பீரமும் அவனது உறுதியைக் காட்டினாலும், அவனது மனதுக்குள் எழுந்திருந்த பழைய துக்கமும், இப்புது உணவின் மணமும் அவனது தொழில்முறைக் கட்டுப்பாட்டை அசைத்துக் கொண்டிருந்தன. அவன் சமையல் நுழைவாயிலை அடைய அங்கு மஹிரா நின்றிருந்தார்

அவர் அஷ்வினை விட வயது கூடியவர்

என்றாலும் அஷ்வின் ஹோட்டலின் ஓனர் என்பதால் மரியாதையாக பேசுகிறார்.

மஹிரா‘ வாங்க சேர் எல்லா வெரட்டியான உணவுகளும் தயாரா இருக்கு ஒரு கொறையும் இல்ல‘

அஷ்வின்‘ அந்த ஒரு டிஷ் வரல்லனு சொன்னாங்க அது வந்துட்டா

மஹிரா‘ யெஸ் சேர் டேஸ்ட் பண்ணி பார்க்குரீங்களா

அஷ்வின்‘ ஒகே

அஷ்வின் சமையலறைக்குள் நுழைய பார்க்க அங்கு அவினாஷ் வாரான்

அவினாஷ்‘டேய் ஒன்ன எங்கெல்லாம் தேட்றதுடா?

அஷ்வின் ‘ ஆஹ் கொஞ்சம் பிஸிடா வந்துட்டயா சாலினி எங்க

அவினாஷ்‘ அவளோட ப்ரண்ட்ஸ் கூட இருக்கா

நா இப்போ வந்துட்றன் என அஷ்வின் மஹிராவிடம் கூறி விட்டு அவினாஷுடன் போனதும் சமயலறையிலிருந்த ஐஸ்வர்யா வாசற்பக்கம் வந்தாள்.

ஐஸ்வர்யா ‘ அக்கா இந்த ஹோட்டல் நம்ம வேல செய்ற ஹோட்டல விட பெரிசா இருக்கு இது வசதியானவங்கட ஹோட்டல் போல

மஹிரா ‘ ஆமா இது பெரிய வசதியான ஹோட்டல் தான் ஆனா இது பழைமையான ஹோட்டல் முதல்ல இந்த ஹோட்டல்க்கு பெரிசா வருமானமே வரல்ல இந்த ஹோட்டல எடுத்து நடத்துரவர் வெளிநாடு போய் சமையல் படிச்சு வந்து இப்ப பெஸ்ட்டா செய்ரார்

ஐஸ்வர்யா‘ அப்டியா?

அக்கா இங்க இருக்குற டிஷ் எல்லாமே டிப்ரண்ட் டிப்ரண்டா இருக்கு நா செய்த டிஷ்ஷ இதோட வச்சா செட் ஆகுமா?

மஹிரா‘ யே இப்டி சொல்ற நீ செய்றது உண்மைலயே டேஸ்ட்டா தான் இருக்கு

இப்போ இந்த ஹோட்டலோட பெஸ்ட் செஃப் அதாவது இந்த ஹோட்டலோட ஓனர் ஒன்னோட டிஷ்ஷ டேஸ்ட் பண்ண தான் வந்தாரு அவர யாரோ கூப்பிடவும் வாரேனு சொல்லிட்டு அந்தப்பக்கமா போனாரு நீ வேணா பாரு அவரே ஒன்னோட டிஷ்ஷ சாப்ட்டு அசந்து போக போறாரு

அப்போது ஐஸ்வர்யாவின் போன் ரிங் ஆகவும் அக்கா இதோ வந்துட்ரேன் என்றவள் வேறு பக்கமாக சென்றாள்

அவளது நெருங்கிய தோழியான ஆனிஷா தான் புது நம்பரிலிருந்து அழைத்திருந்தாள்

ஐஸ்வர்யா‘ ஹேய் நீயா எப்டி டி இருக்க ரெண்டு வருசமாச்சு நானும் ஒன்ன கன்டக்ட் பண்ண எவ்ளோ ட்ரை பண்ணினேன் ஆனா ஒன்னோட நம்பரும் வேர்க் ஆகல எங்கடி போன

ஆனிஷா‘ ஹேய் பேபிமா ச்சில் டி நா எல்லாம் நேர்ல சொல்றேன் நா ரையில்வே ஸ்டேசன் க்கு பக்கத்துல இருக்க பஸ்டோப்ல இருக்கன் ஒன்ட வீட்டு லோகேசன் அனுப்பு

ஐஸ்வர்யா‘ ஹேய் இரி நா வந்து பிக்கப் பண்றேன்

ஆனிஷா‘ முடியுமா டி

ஐஸ்வர்யா‘ யெஸ் வெயிட் பண்ணு வாரேன்

ஐஸ்வர்யா கோல் பேசி முடிந்து மஹிராவை நோக்கி நடந்தாள்

அவினாஷ் அஷ்வினை அழைத்துக் கொண்டு சாலினியும் அவள் நண்பர்களும் இருக்கும் இடத்திற்கு கூட்டி போறான். போகும் போதே மச்சான் சாலினி கிட்ட வாய் தவறி சரி நா தான் அவினாஷ் னு சொல்லிடாதே என நகைச்சுவையாக எச்சரித்தவாறே சென்றான்.

*அஷ்வின் வரவும் சாலினி அனைவரையும் அவனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறாள்.*

*சாலினி' இவர் தான் என்னோட செகண்ட் பெஸ்ட்டு அண்ணா அஷ்வின் பெஸ்ட்டான செப்ஃ*

*அண்ணா இவங்க என்னோட ப்ரண்ட்ஸ்*

*அருணா ,பிரியா,ராகினி என்ட் இன்னொருத்தங்களும் இருந்தாங்க ப்ரிண்ஸஸ் எங்க போனாங்க அவங்க*

*அஷ்வின்' என்னது பிரின்ஸஸ்ஸா*

*சாலினி' ஆமா ராகினியோட அக்கா அவங்க சமையல் பக்கம் போனாங்க என்னமோ இன்னக்கி இந்த வெடிங் பார்ட்டிக்கி அவங்களும் சமச்சி இருக்காங்கலாம் ரொம்ப அழகா இருப்பாங்க குணமும் அப்டி தான்*

*அஷ்வின்' ஆஹா மஹிரா சிஸ்டர் சொன்ன கேர்ள் அவங்க தானா?*

*சரி சரி*

*அப்போ அந்த இடத்திற்கு கவின் வந்து அஷ்வினை அழைத்து வேறு பக்கமாக சென்ற இரண்டு நிமிடங்களில் ஐஸ்வர்யா வருகிறாள்.*

*சாலினி' பிரின்ஸஸ் எங்க போனிங்க ஒங்கள எங்க அண்ணாகிட்ட இன்று பண்ணி வெக்க இருந்தேன்*

*ஐஸ்வர்யா' இன்னும் ஒரு நாள் இன்று பண்ணி வைமா எனக்கு முக்கியமான வேல இருக்கு ராகினி நீ இவங்க கூடவே வீட்டுக்கு வாரியா ஆனிஷா பஸ் ஸ்டோபக்கு வந்திருக்காவாம் நா போய் பிக்கேப் பண்ணணும்*

*ராகினி ' சரிக்கா*

*ராகினி சரியென சொன்னதும் மற்றவர்களிடம் விடைபெற்று அவசரமாக கிளம்பினாள்.*

*(தொடரும்)*

# காதல் குறிப்பறிதல்..

ஓரவிழிப் பார்வையிலே
கோதையவள் சாடைசெய்யும்
காரணத்தை அறிந்தேன் நானே!
புள்ளிவைத்துக் கோலமிடப்
புலராத காலைவந்து
பூத்தமுகம் கண்டேன் அங்கே!

தேரென நங்கையவள்
தெருவீதி நடக்கையிலே
வெட்கத்தை முகத்தில் வைத்தாள்!
பாரெனவும் கேளெனவும்
கூறெனவும் கூறிடாமல்
சாடையிலே எல்லாம் சொன்னாள்!

ஊரறியா வாறெழுதி
தேன்மொழியாள் என்மனத்துள்
இன்பகீதம் பாடு கின்றாள்!
நான்கேட்க மட்டுமவள்
காதலினை வார்த்தையின்றி
காதிரண்டுள் ஓது கின்றாள்!

கூரம்புக் கண்விரித்துத்
தேனிதழின் புன்னகையால்
காரிகையும் காதல் காட்ட,
குறிப்பறிந்தேன்; உளம்புரிந்தேன்;
உணர்ந்துற்றேன் ; நெஞ்சத்துள்
நேசராகம் ஒலிக்கக் கேட்டேன்.

**கு.லோகநாதன்**

# அன்பின் பாலம்

## ஸில்மா ஹிதாயத்துல்லா

**பகுதி - 08**



**உனக்காக ஓடோடி வருவேன்..**
**உன்னை என்னுயிரில் கரைத்திடுவேன்...**

தடாலென நவாஸ் அடித்த 'பிரேக்'கில் கார் குலுங்கியது. காருக்குள் இருந்த அவனும் குலுங்கினான். பித்துப் பிடித்தவன் போல இருந்த அவன் ஒரு நொடியில் காரைத் திருப்பி ஓரமாக்கினான். தண்ணீர் போத்தலைக் கையில் எடுத்து 'மடக் மடக்' என்று தாகம் தீரும் வரை குடித்தான். அதே நீரால் முகத்தையும் அலசிக்கொண்டான்.

இப்பொழுது நடந்த காட்சி கனவுக்குள் வாழ்கிறேனோ என்று அவனுக்குத் தோன்றும் அளவிற்கு இருந்தது.

தலை 'விண்' என்று வலித்தது. கொஞ்சம் தலையை வைத்து சாய்ந்தால் நன்றாக இருக்கும் என முடிவெடுத்தவன் அப்படியே சீட்டைப் பணித்துக் கண்களை மூடிக்கொண்டான்.

மூடிய கண்களுக்குள் ஒரு வித இருட்டு.....

அவன் ஆன்மாவிலும் ஒருவித அமைதியை உணர்ந்தான்.....

மெல்ல மெல்ல தன்னை ஆசுவாசப் படுத்தினான்.....

தூக்கம் வர மறுத்தது....

பிரயத்தனப்பட்டுக் கண்களை மூடிக் கொண்டே இருந்தான்.

ஏதோ ஒரு வித தெளிவு அவனை நோக்கி வருவது போல.....

ஒருவித பிரகாசம் அவனை நெருங்குவது போல.....

'ஓஹோ..... இவ்வளவு நாளும் ஒருவிதப் பிடிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்திருக்கிறேன்...

சிக்கல்களை அவிழ்க்கும் முயற்சியில் ஈடுபடாமல் முடிச்சுக்களையே பலமாக்கிக் கொண்டிருந்திருக்கிறேன்...'

எனப் பலவாறு சிந்தனைச் சிதறல்களைத் தெறிக்க விட்டான்.

பலதும் இப்போது தெளிவாகத் தெரிந்தது.

தெளிந்த நீரோடை போல மனம் சலனம் இல்லாமல் ஓயத் தொடங்கியது.

தம்பியை நினைத்துப் பார்த்தான்..

'சிறு வயது முதலே தான் என்ன நினைக்கிறோமோ அதையே அவனிடம் சொல்லிச் செய்து கொள்வது தான் வழமை...

இன்றும் அதுபோலத்தான் அவன் என்னிடம் எதையோ சொல்ல வந்தான்.

நான் அதைக் கேட்கக் கூடத் தயாராக இருக்கவில்லை. என் காரியத்தை எப்படியாவது சாதித்துக் கொள்வதிலேயே இருந்து விட்டேன்...'

எண்ண அலைகள் அகோரமாய் வீசியது.

அப்படியே குரங்கு போல மனம் ஹிஸ்னாவிடமும் தாவியது.

'ஹிஸ்னாவிடமும் நான் அப்படித்தானே நடந்து கொள்கிறேன்...

அவளின் நாட்டம், தேவை என்ன என்பதைக் கூட கேட்காமல் நான் சொல்வதை மட்டும் செய்யச் சொல்லி ஏவுவேன்...

நான் மட்டும் பெரியவன் போல நடந்து கொள்கிறேனே...

இது எப்படிச் சரியாகும்?

என்னைச் சுற்றியுள்ள அவர்களும் உணர்வுகளால் கலந்த மனிதர்கள் தானே...

நான் ஏன் அதைப் பற்றி யோசிப்பதே இல்லை....?'

அவனது சுய அலசல் அவனுக்குள் மீண்டும் குழப்பத்தை உண்டு பண்ணியது.

தானும் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று புரிந்து கொண்டான்.

நம்மை நாமே அலசிக் கொள்வதால் நம் சுற்றுச் சூழலும் சந்தோஷத்தின் சாயலால் மாறாதோ....

ஸீட்டை உயர்த்திப் பழைய நிலைக்குத் திரும்பினான் நவாஸ். முதல் படியாய் ஹிஸ்னாவின் புலம்பல்களில் முதல் புலம்பலாய் இருக்கும் பிரச்சினையைச் சரி செய்ய நினைத்தான்.

'நீங்க ஆபீஸ் போனால் எனைய முழுசா மறந்திடுவீங்க..., ஊர் உலகத்துல பாருங்க..., எல்லாரும் அவங்க பொண்டாட்டி ஓட எவ்ளோ எரக்கமெண்டு....'

கையில் இருந்த அகப்பையை ஆட்டிய படி அவள் கேட்ட நேரம்,

'டீச்சரம்மா போல கிளாஸ் எடுக்கிறாளே' என்றுதான் அவன் மனதில் அன்று தோன்றியது.

ஆனால், இன்று....

அவனால் யோசிக்க முடிந்தது.

அது எவ்வளவு வலி நிறைந்த வார்த்தைகள்...

'நாளையிலிருந்து மெடத்துக்கு தினம் ஒரு மெசேஜ் போட வேண்டும்' என்று திடசங்கட்பம் பூண்டு கொண்டான்.

மெல்லத் தன் பயணத்தை ஆரம்பித்தவன், வைத்தியசாலை வளாகத்தினுள் காரை 'பார்க்' செய்து விட்டுத் திரும்பினான்.

வலது புறத்தில் 100 மீட்டர் தள்ளி நவாஸின் தம்பி நின்று கொண்டிருந்தான்.

இவன் பார்க்க வேண்டுமே என்று எட்டி, எட்டித் தன் கைகளை ஆட்டிக் கொண்டிருந்தான்.

கண்டு விட்டதாய் செய்கை செய்துவிட்டு அவனை நோக்கி நடந்தான் நவாஸ்.

நவாஸ் என்ன செய்யப் போகிறான்.....?

அன்பின் பாலம் தொடரும்....

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'ஒட்டகச்சிவிங்கி பொம்மை' நூல் வெளியீடு

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு ஏறாவூர் அஹமட் பரீட் நூலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட

ஏறாவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி, கவிதாயினி டாக்டர் திருமதி ஜலீலா முஸம்மில் அவர்கள் எழுதிய

'ஒட்டகச்சிவிங்கி பொம்மை' மழலைப்பாடல் நூலின் வெளியீட்டு விழா கடந்த 19/11/2025 புதன் கிழமை காலை 10.00 மணிக்கு

அஹமட் பரீட் நூலக பொறுப்பாளர் பி.என்.எப் றிஸாதா அவர்களின் தலைமையில் நூலக வளாகத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக ஏறாவூர் நகரசபை கௌரவ தவிசாளர் அல்ஹாஜ் எம்.எஸ். நழீம் அவர்களும்,

கௌரவ அதிதிகளாக

ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில், நகரசபை பிரதி தவிசாளர் ஞா. கஜேந்திரன், கௌரவ உறுப்பினர் என்.எம். சரீனா, சனசமூக உத்தியோகத்தர் ஏ. ஹாறூன், ஆசிரியை என்.எம் ஆரிபா, நூலகர் திருமதி ஹப்சா மஜீத், நூலக விடய உத்தியோகத்தர் ஏ.ஆர். சஞ்சீதா, கலாசார உத்தியோகத்தர் எம்.எம். மக்பூல், நூலக உத்தியோகத்தர்கள், கவிஞர்கள் மற்றும் டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் குடும்பத்தினர்

என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வினை கவிஞர் எஸ்.எம். அமீன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் இதுவரை 'சிறகு முளைத்த மீன்', தூரிகை வரையும் மின்மினிகள், மற்றும் மஞ்சள் மாம்பூ என இரு ஹைக்கூ கவிதை நூல்கள் ஆகியவற்றை வெளியிட்டு, தமது நான்காவது படைப்பாக 'ஒட்டகச்சிவிங்கி பொம்மை' எனும் மழலைப்பாடல் நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைவதோடு , இவர் வைத்தியத் துறையை தாண்டி தமது படைப்பாற்றல் மற்றும் எழுத்துத் திறனின் மூலம்

ஓய்வு நேரங்களை சிறப்பாக பயன்படுத்தி இவ்வாறான படைப்புகளை உருவாக்குவது

எமது ஊருக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும் என கௌரவ தவிசாளர்

அல்ஹாஜ் எம்.எஸ். நழீம் அவர்கள் தனது உரையில் பாராட்டுத் தெரிவித்தார்.

அத்தோடு, வருகை தந்த அதிதிகளுக்கு டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள்

'ஒட்டகச்சிவிங்கி பொம்மை' நூலை வழங்கியதோடு,

பாடசாலை மாணவர்களால் அதிதிகளுக்காக அழகிய கலைநிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.


தேசிய வாசிப்பு மாதம்
ஒக்டோபர் - 2025
“மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்”
Let's Read for a Revival
Dr. ஜலீலா முஸம்மில் அவர்கள்
எழுதிய
நூலறிமுகமும் வெளியீடும்

















# கற்பகத்தின் கல்யாணம்



10

அன்புச்செல்வி சுப்புராஜூ
பட்டாபிராம், சென்னை

'நல்ல விசயம் பேசத்தேன் வந்திருக்காக... அம்மா, அப்பா இல்லைனா என்ன? நாங்க இருக்கோம்... அதான் தயங்காம கூட்டியாந்துட்டேன்' சிரித்தபடியே சித்தப்பா சொல்லவும், 'என்னவா இருக்கும்... இம்புட்டு சுத்தி வளைச்சு பேசுறாரு' யோசித்தபடியே எல்லோருக்கும் தண்ணீர் தந்தாள் கற்பகம்.

'கற்பகம்... இந்த பாவாடை, சட்டை வேணாம்மா... போயி தாவணி உடுத்திட்டு வரயாம்மா' தயக்கத்தோடு சித்தப்பா கேட்க 'ஏன் சித்தப்பா... இந்த ட்ரெஸுக்கு என்ன? நா எப்பவும் இப்படித்தானே இருப்பேன்?' எதிர்க் கேள்வி கேட்டாள் கற்பகம்.

'ஒன்னுமில்லை... உங்களைப் பெண் பார்க்க வந்திருக்கிறோம். அதான் உங்க சித்தப்பா அப்படி சொல்றாரு' இளநீல சட்டைக்காரர் சொல்லவும் 'ஏங்க ... நீங்க வெளையாட நாந்தான் கெடைச்சேனா...' கற்பகத்தின் முறைப்பைக் கண்டு சிரித்த அவர் 'அட.... நெசமாத்தேங்க... அதோ மொத சேர்ல உட்கார்ந்து இருக்கிறவர் என் அப்பா, அடுத்து இருப்பவர் சித்தப்பா.. இன்னைக்கு காலைல ஒருத்தர் உங்களைப் பத்தி சொன்னார். உடனே கெளம்பி வந்துட்டோம்'

'யாரோ ஏதோ சொன்னாங்கனா... உடனே கெளம்பி வந்துறதுனா எப்படிங்க?' 'சொன்னவங்க அவ்வளவு நல்லவிதமா சொன்னாங்க... அதேன்'

'அதுசரி... ஆனா மொதல்ல நீங்க இப்படி பொண்ணு பார்க்க வரணும்னு நெனைக்கிறோம்... வரட்டுமானு சொல்லி விடணும். எங்க வீட்டுல இருந்து சம்மதம் சொன்னபொறவு தானுங்க வரணும். இப்படி பொசுக்குனு வந்து நிக்குறது நல்லாவா இருக்கு?'

'நீங்க கேக்குறது நியாயம்தான். நா சென்னைல வேலை பார்க்குறேன். ஒரு அவசர சோலியா ரெண்டு நாள் லீவு போட்டு வந்தேன். வந்த இடத்துல உங்களைப் பத்திக் கேள்விப் பட்டதும், அப்படியே உங்களையும் பார்த்துடலாமுனு வந்தோம் '

'தவறா எடுத்துக்காதீங்க, எங்க வீடு இப்ப இருக்கிற சூழ்நிலைல நீங்க வந்தது சரியா படலீங்க' கற்பகம் சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுதே இடைமறித்த சித்தப்பா 'ஏந்தாயி, சித்தப்பா நானிருக்கேன், இந்தா ரெண்டு பெரியவுக உட்கார்ந்து இருக்காக, எங்களை விட்டுட்டு பொண்ணு, மாப்பிள்ளை நீங்க ரெண்டு பேரும் நேருக்கு நேரா பேசிக்கிட்டா என்ன அர்த்தம்?' என்று கேட்டார்.

'என்னங்க சித்தப்பா சொல்றீங்க... இவரா மாப்பிள்ளை...' அதிர்ச்சியுடன் கற்பகம் கேட்க 'ஏங்க... என்னைப் பார்த்தா மாப்பிள்ளை மாதிரி தெரியலையா?' இள நீலச் சட்டைக்காரர் கேட்கும் பொழுதே 'தையல் க்ளாஸ் திறக்கலையாக்கா...' வாசற்புறத்திலிருந்து குரல் கேட்கவும் 'இதோ... ஒரு நிமிசம்மா...' சாவியுடன் வாசலுக்கு சென்றாள் கற்பகம்.

'என்னாச்சுக்கா தையல் க்ளாஸ் ரூம்



தெறக்கல... ஒடம்பு சரியில்லையா?'

'ஒன்னுமில்லை.. நீ தெறந்து மெஷினெல்லாம் நல்லா தொடச்சிட்டு இரு, அதுக்குள்ள வந்துடுவேன்' கற்பகம் சொல்லும் பொழுதே இன்னும் நான்கைந்து பேர்கள் வரவும், அவர்களில் மூத்தவரான ஒருவரைப் பார்த்து 'துளசியக்கா, நா வர வரைக்கும் இவங்களுக்கு தைக்க சொல்லித் தந்துட்டு இருங்க... இதோ வந்துடறேன். நீங்க இன்னைக்கு ப்ளவுஸ் கட் பண்ணிக் காட்டணும்க்கா' சொல்லியபடியே நகர்ந்தவளின் கையை இழுத்துப் பிடித்து நிறுத்தினார் துளசியக்கா.

'யாரு வந்திருக்காங்க கற்பகம்'

'எனக்கு யாருனு அவ்வளவா புரிபடல, பொண்ணு பார்க்க வந்திருக்காங்கனு சித்தப்பா சொல்றாரு'

'பொறவு நீ சேலை, கீலை கட்டாம இப்படி இருக்கிறவ, கொஞ்சமாச்சும் பூ வச்சிருக்கலாம்..' சொல்லியபடியே தன் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கழட்டி, கற்பகத்தின் கழுத்தில் போட வந்தார் துளசி.

அதைத் தடுத்த கற்பகம் ' அட... ஏன்கா நீங்க வேற... அதெல்லாம் நா இப்படிதானு அவங்க பார்த்துட்டாங்க. நீங்க போயி வகுப்பைக் கவனிங்க' சொல்லியபடி உள்ளே வந்த கற்பகத்தைக் கூர்ந்து பார்த்தார் மாப்பிள்ளை.

'அடியாத்தி... இவரென்ன இப்படி பார்க்குறாரு' மனசுக்குள் நெனைத்தபடியே சித்தப் பாவைப் பார்த்தாள் கற்பகம்.

தொண்டையைச் செருமியபடியே எழுந்த மாப்பிள்ளை 'எம்பேரு செல்வம், பக்கத்துல இருக்குற அரசனூர்தான். கூடப்பொறந்தவுக ஆறு பேரு, விவசாயக் குடும்பம்.

இதோ இது நா வேலை பார்க்கும் அலுவலக ஐடி கார்ட், இது அலுவலக போன் நம்பர், இது என்னோட புகைப்படம்.. இதெல்லாத்தையும் உங்க அம்மா, அப்பா கிட்ட காட்டுங்க. அவங்களுக்குப் பிடிக்கும். உங்களுக்கும் இப்ப இருக்கிற தயக்கம் போயி பிடிக்கும்' சிரித்தபடியே அவர் புகைப்படம் மற்றும் கார்டுகளை நீட்டவும், தயக்கத்துடன் நின்ற கற்பகத்தைப் பார்த்து 'உங்களுக்குப் பிடிச்சிருக்கு தானே... வாங்கிக்கங்க... இதோ இது என் பே ஸ்லீப்' கேட்டபடியே நீண்ட அவரது கைகளைப் பார்த்தபடியே... கற்பகம் என்ன பதில் சொன்னாள்... அடுத்த வாரம் பார்ப்போம்




புத்தக வடிவமைப்பு மற்றும் அச்சக வேலைகள்
அனைத்திற்கும் அனுகவும்
குறிப்பிட்ட காலத்தில் கால தாமதமின்றி
குறைந்த கட்டணத்தில் செய்துத் தருகிறோம்